தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண் - 39

# ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள்

## தொகுதி - 3

கோவையில் நடைபெற்ற உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டை சிறப்பிக்கும் வகையில் தமிழக அரசின் சிறப்பு நிதி உதவியின் மூலம் வெளியிடப்படும் நூல்

# ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள்

## தொகுதி - 3


பொதுப் பதிப்பாசிரியர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**, இஆப,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

பதிப்பாசிரியர்கள்

**முனைவர் ர. பூங்குன்றன்**

**முனைவர் செ. இராசு**

**கி. சு. சம்பத்**

**இரா. சிவானந்தம்**



வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - *600 008*

*2010* - திருவள்ளுவர் ஆண்டு *2041*

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| TITLE | : | **Erodu Mavattak Kalvettukal Vol.3** |
| General Editor | : | Principal Secretary and Commissinor |
| Copyright | : | Tamilnadu State Dept. of Archaeology |
| Subject | : | EPIGRAPHY |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No. | : | 227 |
| Year | : | 2010 - Thiruvalluvar Aandu 2041 |
| No. of Copies | : | 500 |
| Type Point | : | 12 |
| No. of Pages | : | 168 |
| Paper Used | : | 80 Gsm Maplitho |
| Printer | : | Tamcos printers<br>46, Peters Road,<br>Royapettah,<br>Chennai-14 |
| Publisher | : | **State Dept. of Archaeology,**<br>Tamil Valarchi Valaagam,<br>Halls Road, Egmore,<br>Chennai - 600 008. |
| Price | : | Rs. 119.00 |

# பதிப்புரை

பண்டைத் தமிழ் மக்கள் எல்லாவற்றையும் ஆவணப்படுத்த வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். மலைக் குகைகளில் தனித்திருந்து வாழ்ந்த மெய்த் தவமுனிவர்களுக்கு வெட்டப் பெற்ற படுக்கைகள் பற்றிய கல்வெட்டுகள் தாம் அவை முற்கால முயற்சிகள் கி.பி. 4–5–ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பெற்ற பூலாங்குறிச்சிக் கல்வெட்டு பண்டைய நிருவாக மொழியைப் பெற்றிருக்கும் முதன்மை சான்ற கல்வெட்டு. இக்கல்வெட்டு தொடங்கி கி.பி. 18–ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தில் கிடைக்கும் பொறிப்புகள் தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு கூறுகளைப் பற்றிய அரிய செய்திகளைத் தாங்கி நிற்கின்றன. இந்தப் பொறிப்புகள் அரசியல் பற்றி அளவில்லாத செய்திகளைப் பெற்று நிற்கின்றன. அரசு ஆணைகள், கோயில் வழிபாடு, வேளாண் வளர்ச்சி, வேளாண் நெருக்கடிகள், வாணிக வளர்ச்சி, நீர் நிருவாகம், பெருவழிகள், குடும்ப விவகாரங்கள், சமூகப் பிரிவுகளுக்கிடையிலான பூசல்கள், அவை தீர்க்கப் பெற்ற முறைகள் ஆகியவை பற்றிய செய்திகளைத் தாங்கி நிற்கின்றன. பொறிப்புகளை எழுதப் பயன்படுத்திய எழுத்துகள், உள்ளூர் வட்டார மொழி அமைப்பு ஆகியவை மொழியியல் ஆய்வுக்கு நிறைந்த சான்றுகளாக உள்ளன. சில கல்வெட்டுகளில் கோயில் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தாங்கி நிற்கின்றன. இதற்கு ஒரு சான்று திருவாவடுதுறை கல்வெட்டு ஒன்று முதல் பராந்தகன் 500 கழஞ்சு பொருள் உதவி தந்து குடப்படை முதல் உச்சி வரை கற்றளியாகக் கட்டவேண்டும் என்று கூறும்போது குடப்படை என்பது குமுதப்படை என்பதைக் குறிக்கின்றது.

இத்தகைய சிறப்புகளைப் பெற்றிருக்கும் கல்வெட்டுகளை பல்வேறு நிலையில் ஆவணப்படுத்த வேண்டிய கடமை நம்முன் உள்ளது. அவற்றில் முதல் பணி அச்சில் ஏற்றுவது. கல்வெட்டுகளை அச்சாக்கம் செய்வதில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை முனைப்புகாட்டி நிற்கின்றது. கல்வெட்டுப் பதிப்பு துறை தொடங்கிய நாள் முதல் நடந்து வரும் பணி. இருப்பினும் ஆறு ஆண்டுகளாக இப்பணி முனைப்புத் திட்டமாகச் செயல்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய அரசு கல்வெட்டுகளையும் இத்துறை பதிப்பு செய்யும் பணி தொடங்கப் பெற்ற நிலை வரலாற்றுச் சிறப்புமிக்க பணி.

மாவட்ட வாரியாகப் பதிப்பிக்கும் பணியில் ஈரோடு மாவட்டம் மூன்றாம் தொகுதியாக இக்கல்வெட்டுத் தொகுதி வெளிவருகின்றது. இத்தொகுதியில் கொங்கு நாட்டில் நிலை பெற்ற அரசியல், சமயம், வேளாண்மை, சமூகப் பிரிவுகள், சித்திரமேழி பெரியநாடு, இடங்கை சாதியார் பற்றிய குறிப்புகள், நீர்ப் பாசனம், நில உரிமை, சமூக உரிமை ஆகியவை பற்றிய குறிப்புகள் மிகுதியும் பயின்று வருகின்றமை, பண்டைய கொங்கு நாட்டின் பகுதியான வடகொங்குப் பகுதியாக இப்பகுதி விளங்கியமையை இக்கல்வெட்டுகள் பேசுகின்றன.

ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகளை முதல் வாசிப்பு செய்தளித்த மறைந்த திரு. இரா. ப. கருணானந்தம் அவர்களின் சீரிய பணி போற்றுதலுக்குரியது. இந்நூலினை வெளிக்கொணரும் பணிகளை மேற்கொண்ட முனைவர் செ. இராசு மற்றும் முனைவர் ர. பூங்குன்றன் ஆகியோர் பாராட்டுதலுக்குரியவர்கள்.

இந்நூலின் பதிப்புப் பணியில் ஈடுபட்ட கல்வெட்டாய்வாளர்கள் திரு. கிசு. சம்பத், மற்றும் திரு. இரா. சிவானந்தம் ஆகியோருக்கும், இந்நூலினை நல்ல முறையில் டிடிபி செய்து அட்டைப் படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி தே. சத்தியவதி அவர்களுக்கும் எனது பாராட்டுகள். மற்றும் இந்நூலை வெளியிட உரிய நிதியினை அளித்திட்ட தமிழ்நாடு அரசுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நாள் : 21-12-2010**
**சென்னை – 600 008**

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

# முன்னுரை

ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகளின் மூன்றாம் தொகுதியாக இந்நூல் அமைந்துள்ளது. கிபி. 11-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியில் உள்ள கல்வெட்டுகள் தமிழ் மொழி, சமஸ்கிருத மொழி ஆகியவற்றில் எழுதப்பெற்றுள்ளன. அரசர், அந்தணர் ஆகியோர் பற்றிய கல்வெட்டுகள் சில சமஸ்கிருதத்தில் உள்ளன. மற்றவை தமிழ் மொழியில் உள்ளன. தமிழ்க் கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் எழுத்துகளில் பொறிக்கப் பெற்றுள்ளன. இரண்டாம் தொகுதியில் உள்ள அரசர்கள் கல்வெட்டுகள் இத்தொகுதியிலும் உள்ளன. முதலாம் விக்கிரமசோழன் தொடங்கி மூன்றாம் விக்கிரமசோழன் வரையிலான கொங்குச் சோழ மன்னர்கள் கல்வெட்டுகள் இத்தொகுதியில் உள்ளன. பாண்டியர்களில் வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் ஆகியோர் கல்வெட்டுகள் உள்ளன. போசளர்களில் மூன்றாம் வீரவல்லாளன் கல்வெட்டுகள் உள்ளன. சில விஜயநகரர் கல்வெட்டுகள், நாயக்கர் கல்வெட்டுகள், விக்டோரியா மகாராணி கல்வெட்டுகள் ஆகியவை உள்ளன.

### கொங்குச் சோழர்கள்

இவர்களைக் கோநாட்டரசர்கள் என்று கே. வி. சுப்ரமணிய அய்யர் அவர்கள் கூறுவார். முதல் மூன்று அரசர்கள் கோநாட்டான் என்ற சொல்லுடன் தங்கள் பெயரைக் குறிப்பிடுவார்கள். கோநாடு என்பது இன்றைய புதுக்கோட்டைப் பகுதி. இவர்களில் முதல் அரசன் கோநாட்டான் வீரசோழன் என்பவன். இவனுடைய மகன் கலிமூர்க்கன், இவனுடைய மகன் விக்கிரமசோழன். இத்தொகுியில் அபிமான சோழன் தொடங்கி கல்வெட்டுகள் சேர்க்கப்பெற்றுள்ளன.

அபிமான சோழன், அபிமான சோழ இராஜாதிராஜன், இராஜாதிராஜ வீர சோழன் (இவன் இரண்டாம் வீரசோழன்) உத்தம சோழன், உத்தம சோழ வீரநாராயணன், முதலாம் குலோத்துங்கன், மூன்றாம் வீரசோழன், இரண்டாம் குலோத்துங்கன், வீரராசேந்திரன், இரண்டாம் விக்கிரமசோழன், ஒரு ராசகேசரி, மூன்றாம் விக்கிரம சோழன் ஆகிய அரசர்கள் கல்வெட்டுகள் உள்ளன.

### அபிமான சோழன் (கி.பி. 1047~1085)

இம்மன்னனுடைய கல்வெட்டு விசயமங்கலம், நாகீசுவரர் கோயிலில் கிடைக்கின்றன. அவை விளக்குக் கொடை, நிலக் கொடை ஆகியவை பற்றிக்

கூறுகின்றன. இவன் முப்பத்து மூன்று ஆண்டுகள் ஆண்டுள்ளான். இவனுடைய மெய்க்கீர்த்தி அவினாசிக்கருகில் உள்ள நடுவச்சேரிக் கல்வெட்டில் உள்ளது.

### அபிமான சோழ இராஜாதிராஜன் (கி.பி. 1085~1100)

இராஜாதிராஜன் கல்வெட்டுகள் விஜயமங்கலத்திலும், பட்டாலியிலும் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகள் விளக்குக் கொடை, நிலக் கொடை ஆகியவை பற்றிக் கூறுகின்றன. அரசனே சில கொடைகளை வழங்கியுள்ளான்.

### இராஜாதிராஜ உத்தமசோழன் (கி.பி. 1100~1118)

இம்மன்னனுடைய கல்வெட்டுகள் பல ஊர்களில் கிடைக்கின்றன. இவன் தென் கொங்கு நாட்டின் மீது படையெடுக்க காரைத்தொழு என்ற ஊரில் கோட்டையைக் கட்டி படை வைத்திருந்தான் என்ற செய்தி இருகூர் செப்பேட்டில் குறிக்கப் பெறுகின்றது. அதனால் உத்தமசோழன் காலம் முதல் கொங்குச் சோழர்களுக்கும், வீரகேரளர்களுக்குமிடையில் பூசல் நடந்து வந்தது என்று கருதலாம்.

### இராஜாதிராஜ வீரசோழன் (கி.பி. 1118~1138)

இந்த வீரசோழன் இரண்டாம் வீரசோழன் என்று கூறப்பெறுகிறான். அவன் கல்வெட்டுகள் விசயமங்கலம் என்ற ஊரில் பொறிக்கப் பெற்றுள்ளன. விசயமங்கலம் கல்வெட்டு சக ஆண்டு 1122-இல் பொறிக்கப்பெற்றுள்ளது. அதனால் இவன் வரலாற்றாண்டை துல்லியமாகக் கணிக்க முடிகின்றது.

### உத்தமசோழ வீரநாராயணன் (கி.பி. 1138~1149)

கொங்கு வரலாற்றில் மூன்று வீர நாராயணர்கள் குறிக்கப் பெறுகின்றனர். கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த கோக்கண்டன் வீரநாராயணன், உத்தம சோழ வீரநாராயணன், வீரநாராயணன் ஆகியோர் ஆவர். அவர்களில் உத்தம சோழ வீரநாராயணன் கொங்குச் சோழர் மரபைச் சேர்ந்தவன். இவன் கல்வெட்டு கிடைக்கின்றது.

### முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1149~1168)

இவன் கல்வெட்டுகள் விசயமங்கலம் கோயில்களில் கிடைக்கின்றன. இவன் சமணக் கோயிலுக்கும் கொடை அளித்துள்ளான். இவன் பாண்டியர் தாயாதிச் சண்டையில் ஈடுபட்டவன். இவன் காலம் முதல் கொங்குச் சோழர் ஆட்சி பரப்பு விரிவடைந்து கொண்டே இருந்தது. குலோத்துங்கன் பாண்டியர் தாயாதிச் சண்டையில் தலையிட்டு வெற்றி வாகை சூடியமை கொங்குச் சோழர்க்குப் பெருமை சேர்த்தது.

### மூன்றாம் வீரசோழன் (கி.பி. 1168~1196)

கி.பி. 1171 முதல் இரு கொங்கும் ஒன்றாக ஆண்ட பெருமை வீரசோழனுக்கே வந்தது. ஆனால் இந்த முயற்சி உத்தம சோழன் காலத்திலும், குலோத்துங்கன்

காலத்திலும் கைகூடவில்லை. இவன் இரு கொங்கும் ஒன்றாக ஆண்டவன் என்று தன்னைக் கூறிக்கொண்டான். இவன் காலத்தில் மூன்றாம் ஆட்சியாண்டில் இரு கொங்கில் இருந்த கோயில்களுக்கு வரி நீக்கம் செய்தான். இந்த வரிநீக்கம் அக்கோயில் பூசை தடைபடாமல் நடைபெறுவதற்கு ஆகும். இவன் காலத்தில் பல தேவதானங்கள் உருவாக்கப் பெற்றன.

### இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1196-1207)

இம்மன்னன் 10 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவன் கல்வெட்டுகள் விசயமங்கலம், ஈங்கூர் ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன. விசையமங்கலம் பெருமாள் கோயில், நாகீஸ்வரர் கோயில் ஆகிய கோயில்களில் இவன் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இரண்டாம் விக்கிரமசோழன் கல்வெட்டில் குலோத்துங்கன், வீரராசேந்திரன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுகள் பெயர்த்து எழுதப் பெற்றுள்ள செய்தி கூறப்பெறுகின்றது.

### வீரராசேந்திரன் (கி.பி. 1207-1256)

இவனுடைய கல்வெட்டுகள் இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. விசயமங்கலம் கல்வெட்டில் சகம் 1179 என்று பயின்று வருகின்றது. இவனுடைய ஆட்சி ஆண்டு தொடங்கிய திதியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு ஆட்சி ஆண்டைக் கணக்கிட்டனர். அதன் அடிப்படையில் ஓராண்டிற்கு 15 நாட்கள் கூடும் 365 என்பதற்குப் பதிலாக 380 நாட்கள் வரும். இதை உறுதிப்படுத்தும் வகையில் இவன் காலத்து அவினாசிக் கல்வெட்டு ஒன்று ஓராண்டிற்கு 55 சனிக்கிழமை என்று கூறப்பெறுகின்றது. பொதுவாக ஓர் ஆண்டிற்கு 52 சனிக்கிழமைகள் மட்டுமே, ஆனால் வீரராசேந்திரனின் கல்வெட்டில் 55 சனிக்கிழமைகள் கூறப்பெற்றன. 55 சனிக்கிழமைகள் என்று கூறும்போது அந்த ஆண்டிற்கு 380 நாட்கள் வருகின்றன. 49 ஆண்டுகளை 380ஆல் வகுக்கும் போது 46 ஆண்டு என்று வந்திருக்கக் கூடும். அந்த அடிப்படையில் விசயமங்கலம் கல்வெட்டை அணுக வேண்டும்.

### இரண்டாம் விக்கிரம சோழன் (கி.பி. 1256-1263)

இவனுடைய காலத்தில்தான் விசயமங்கலம் நாகீஸ்வரர் கோயில் சுற்றுமண்டபம் புதுப்பிக்கப்பெற்று பழங்கல்வெட்டுகள் மறுபடியும் பொறிக்கப்பெற்றன. ஏழாம் ஆட்சி ஆண்டு வரை இவனுடைய கல்வெட்டுகளையும் இவன் பெயரன் மூன்றாம் விக்கிரமசோழன் கல்வெட்டுகளையும் பிரித்தறிவது கடினமாக உள்ளது.

### ஒரு இராசகேசரி

இரண்டாம் விக்கிரமசோழனுக்கும், மூன்றாம் விக்கிரமசோழனுக்கும் பரகேசரி என்ற பட்டப்பெயர் கூறப்பெறுகின்றது. இவர்களுக்கிடையில் ஓர் இராசகேசரி

ஆண்டிருக்க வேண்டும். இந்தக் காலகட்டத்தில் இராசகேசரி வீரபாண்டியன் என்பவன் ஆண்டுள்ளான். அவன் ஆட்சி ஆண்டு கி.பி. 1265–1288 என்று உறுதியாகக் கூறலாம். இவன்தான் அந்த இராசகேசரியா என்பது ஆய்வுக்குரியது. இவனுடைய விசயமங்கலம் கல்வெட்டு ஒன்று சக ஆண்டுடன் வருகின்றது. அக்கல்வெட்டுப்படி இவனுடைய இறுதி ஆட்சி ஆண்டு கி.பி. 1288. ஆனால் கொங்கு வரலாற்றாசிரியர்கள் இவனுடைய இறுதி ஆட்சி ஆண்டை கி.பி. 1285 என்று கூறுகின்றனர். இவன் ஆட்சியின்போது மூன்றாம் விக்கிரமசோழன் கல்வெட்டுகளும் கிடைக்கின்றன. இது பற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

## மூன்றாம் விக்கிரமசோழன் (கி.பி. 1273~1308)

இவன் கல்வெட்டு சக ஆண்டுடன் தொடங்குவதால் இவனது ஆட்சி ஆண்டைத் துல்லியமாகக் கணக்கிடலாம். விசயமங்கலம் கல்வெட்டொன்று சக ஆண்டுடன் தொடங்குகின்றது. இவன் காலத்தில் பல கோயில்களுக்குக் கொடை அளிக்கப்பெற்றன. கி.பி. 1308–இல் ஆட்சி முடிவதால் இவன் 35 ஆண்டுகள் ஆண்டான் எனலாம். இவன் காலத்தில் பல நீர்நிலைகள் உருவாக்கப்பெற்றன.

## பாண்டியர்கள்

இத்தொகுதியில் இரண்டு பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகள் தொகுக்கப் பெற்றுள்ளன. இராசகேசரி வீரபாண்டியன், கோச்சடபன்மர் சுந்தரபாண்டியன் ஆகியோர். இவர்களை கே. வி. சுப்ரமணிய அய்யர் பாண்டியர்கள் என்று ஒப்புக்கொள்ளமாட்டார். உள்ளூர் தலைவர்களே தங்களுக்கு பாண்டியன் என்ற பெயரை வைத்துக்கொண்டனர் என்று கூறியுள்ளார்.

## இராசகேசரி வீரபாண்டியன் (கி.பி. 1265~1288)

இவன் கல்வெட்டுகள் விசயமங்கலம், நாகீஸ்வரர் கோயிலில் கிடைக்கின்றன. விசயமங்கலம் கல்வெட்டொன்று சக ஆண்டுடன் தொடங்குகின்றது. அதனால் ஆட்சி கி.பி. 1288 வரை நீடித்தது எனலாம். இவன் காலத்தில் ஏரிகளும் குளங்களும் உருவாக்கப்பெற்றன. விசயமங்கலம் கோயில்கள் எல்லாவற்றிற்கும் கொடை அளித்துள்ளான். திங்களூர், குன்றத்தூர், ஆதியூர் போன்ற ஊர்களிலும் இவன் கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

## சுந்தரபாண்டியன் (கி.பி. 1285~1315)

இவனுடைய கல்வெட்டுகள் விசையமங்கலத்தில் மிகுதியும் கிடைக்கின்றன. இவன் பெயரில் சுந்தரபாண்டிய விண்ணகரம் என்ற திருமால் கோயில் கட்டப்பெற்றது. இவன் காலத்திலும் ஏரிகள் நிறைய உருவாக்கப்பெற்றன.

**போசளர்கள்**

போசளர்கள் விஷ்ணுவர்த்தனன் காலம் தொடங்கி படையெடுத்திருந்தாலும் வீரசோமேசுவரன் மூன்றாம் வீரவல்லாளன் ஆகிய மன்னர்கள் கல்வெட்டுகள் மட்டும் இங்குக் கிடைக்கின்றன. இத்தொகுதியில் வீரவல்லாளன் கல்வெட்டுகள் மிகுதியாக அச்சிடப்படுகின்றன. இக்காலத்தில் திருமால் கோயில், சிவன் கோயில், சமணர் கோயில் ஆகியவற்றிற்குக் கொடை அளிக்கப்பெற்றுள்ளது. இவன் காலத்தில் நாட்டுச் சபை செல்வாக்குப் பெறத்தொடங்கியது. இவன் வாளுக்கும் தோளுக்கும் நன்றாக குறுப்பு நாட்டு நாட்டார் கொடை அளித்துள்ளனர். பவானிசாகரில் உள்ள கல்வெட்டு ஒன்று கொங்கில் 13 நாட்டு நாட்டார் பற்றிக் கூறுகின்றது. கிபி 1365 வரை இவன் ஆண்டுள்ளான்.

**விசயநகரர்**

இத்தொகுதியில் விசயநகரர் கல்வெட்டுகள் மிகக் குறைவாகவே சேர்க்கப் பெற்றுள்ளன. உள்ளூர் தலைவர்கள் ஆட்சி நடந்துள்ளது. ஸ்ரீவீரஹரிஹரராயன் கல்வெட்டு ஒன்று விசயமங்கலத்தில் உள்ளது.

**நாட்டுப் பிரிவுகள்**

இத்தொகுதியிலும் வட கொங்கு இருபது நாடுகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. விசயமங்கலம் நாகீஸ்வரர் கோயில் கல்வெட்டொன்றில் இப்பெயர்கள் கூறப்பெறுகின்றன. அது மூன்றாம் வீரசோழன் கல்வெட்டு. நாட்டுக்கு நாட்டுச் சாமந்தார் ஆட்சிதான் அப்போது இருந்தது. நாட்டார் ஆட்சி பற்றிக் கிடைக்கவில்லை. போசளர் காலத்தில் நாட்டார் ஆட்சி தொடங்கியது.

**ஆறுநாடு**

ஆறுநாடு பற்றிக் கல்வெட்டுகளில் பயின்று வருகின்றது. ஆறுநாடு எப்படி உருவானது என்பதை அறிந்து கொள்ள விசயமங்கலம் கல்வெட்டு ஒன்று சான்றாக கிடைக்கின்றது. இக்கல்வெட்டு மூலம் குறும்புநாடு, பேரூர் நாடு, வட பரிசார நாடு, வீர சோழ வளநாடு, நாலூர்ப் பற்று நாடு, ஒடுவங்கநாடு ஆகிய நாடுகள் ஆறு நாட்டில் இருந்தன என்பது உறுதிப்படுகின்றது.

**காசுகள்**

இத்தொகுதி கல்வெட்டுகளில் ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு, பழஞ்சாலகை அச்சு, வராகன், பணம் ஆகிய காசுகள் வழக்கத்தில் இருந்துள்ளமை பற்றிக் கூறப்பெறுகின்றது.

**சமூகம்**

இடங்கைப் பிரிவுகளில் இடங்கை தொன்னூற்றொன்பது சாதிகள் மட்டும் குறிக்கப்பெறுகின்றன. பிராமணர்களைக் குறிக்கும் போது கோத்திரப் பெயரும்,

வேளாளர், வேட்டுவர் ஆகியோரைக் குறிக்கும்போது குடிப்பெயர்களும் பயின்று வருகின்றன. வெள்ளாளர்களில் படைத்தலை என்ற பிரிவு விசயமங்கலம் கல்வெட்டில் குறிக்கப்பெறுகிள்றது. இத்தொகுதி கல்வெட்டில் வெள்ளாளர் சிவப்பிராமணர், ஸ்ரீவைஷ்ணவர், வேட்டுவர், குயவர் ஆகியோர் குறிக்கப்பெறுகின்றனர்.

## நீர்ப்பாசனம்

இத்தொகுதியில் அனாதி பாழாய் கிடந்த ஏரிகள் புதுப்பிக்கப் பெற்றுக் கோயிலுக்குக் கொடையாக அளித்த செய்தி கூறப்பெறுகின்றது. அவற்றில் வீரபாண்டியப் பேரேரி, சுந்தரப் பாண்டியப் பேரேரி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. நல்லாற்றின் குறுக்கே அணை கட்டப்பட்டமை பற்றி கரிய வரதராஜப் பெருமாள் கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.

## சமயநிலை

இந்தத் தொகுதியில் சமணக் கோயில் சிவன் கோயில், திருமால் கோயில், சக்தி கோயில் ஆகிய கோயில்களைப் பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் மிகுதியும் கிடைக்கின்றன. உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த புளியப்பை என்பவளுக்கு நீர் நிசிதிகைக் கல் நட்டமை பற்றிய கல்வெட்டு கிடைக்கின்றது. அதனால் பெண்களைப் போற்றும் யாப்பனிய சமணப் பிரிவு விசயமங்கலத்தில் செல்வாக்கு பெற்றிருந்தது எனலாம். இப்பிரிவு கர்நாடகத்தில் தோன்றியது. வீரசங்காதன் சூற்றியதேவன் என்ற உத்தரமந்திரி பேரால் வீரசங்காதப் பெரும்பள்ளி என்ற சமணப்பள்ளி உருவாக்கப் பெற்றிருந்தது. ஈங்கூரில் ஐய்யனார் கல்சிற்பம் கல்வெட்டுடன் கிடைக்கின்றது. இந்தச் சிற்பம் குறிப்பிடத்தக்கது. இது ஐய்யனார் படிமக் கலையைப் பற்றி அறிந்து கொள்வதற்குச் சிறந்த சான்று.

## சித்திரமேழிப் பெரியநாடு

விசயமங்கலத்தில் சித்திரமேழி விண்ணகர் என்ற பெயரில் திருமால் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலை சித்திரமேழிப் பெரிய நாட்டார் என்ற குழுவினர் கட்டினர். சித்திரமேழிப் பெரியநாடு என்று கூறப்பெறும் அமைப்பு பற்றிய கல்வெட்டு விசயமங்கலம் அருகில் உள்ள சர்க்கார் பெரியபாளையம் என்ற ஊரில் கிடைக்கின்றது. இக்கல்வெட்டால் சித்திரமேழிப் பெரியநாட்டில் வேளாளர் சேர்ந்திருந்தனர் என்பது உறுதிபடுகின்றது. இந்த வேளாளர் சபையில் வணிகர்களும் (வணிகக் குழுவினரும்) சேர்ந்திருந்தனர். இவர்கள் அந்நாளைய சமூகத்திற்கும், அரசுக்குமிடையில் பாலமாகச் செயல்பட்டனர். இந்த அமைப்பின் அதிகாரம் வடக்கே சோளாப்பூரிலிருந்து தெற்கே திருநெல்வேலி வரை பரவி நின்றது. இந்த அமைப்பினர் தென்னிந்தியா முழுவதும் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

## இடங்கை சாதி

விசயமங்கலம் பெருமாள் கோயில் கல்வெட்டொன்றில் இடங்கை தொன்னூற்றொன்பது சாதியார் பற்றிய குறிப்பு வருகின்றது. பொதுவாக வலங்கைத் தொன்னூற்றெட்டுச் சாதி, இடங்கை தொன்னூற்றெட்டுச் சாதியார் என்று கூறப்பெறுகின்றது. பிறபகுதிகளில் இடங்கை, வலங்கை இரண்டு பிரிவினரும் கூறப்பெறுகின்றனர். ஆனால் கொங்கு நாட்டில் இடங்கைப் பிரிவினர் மட்டுமே கூறப்பெறுகின்றனர். இதற்கான காரணத்தைக் கண்டறிய வேண்டும்.

# SUMMARY OF INSCRIPTIONS
# ERODE DISTRICT - VOL. III

## VIJAYAMANGALAM

**1158/2003** On the west wall of the sanctum sanctorum of the Karumanikka Perumal temple. Tamil. Virapandya r.y. 15 (A.D. 1280). It records a gift of money by an individual. This amount of twenty five phanams were deposited with saba of Karrayan Kani alias Virachola chathurvedimangalam. The memebers of sabha had agreed to measure certain eventity of oil to the above said temple. It is an interesting example for temple administration and relationship between sabha and temple.

**1159/2003** On the south wall of the sanctum sanctorum of above temple.Tamil. Virapandya r.y. nil-13$^{th}$ century A.D. It records a gift of lamp by an individual who was working in this temple.

**1160/2003** On the north wall of sanctum sanctorum of the same temple.Tamil. Virarajendhra r.y. 10 (A.D. 1217). It records a gift of money (29 accus) by an individual for articles for food offering.

**1161/2003** On the north wall of the same temple. Tamil. Virapandya r.y. 12 (A.D. 1277) It records a gift of money for burning a twilight lamp.

**1162/2003** On the west wall of the front mandapa of the same temple. Tamil. Sundarapandya r.y. 23 (A.D.1308). It records a gift of money for burning twilight lamp by Periyadevan alias Vanarayan who hails from Padaithalai clan of Vellala community.

**1163/2003** On the north side of eastern gate of front mandapa of the same temple. Tamil. Sundarapandya r.y. 28 (A.D. 1313). It records a gift of money (10 panams) for an accu by an individual from Padaithalai clan of Vellala caste.

**1164/2003** On the wall left side of front mandapa of same temple. Tamil. Sundarapandya r.y. 27 (A.D. 1312 ). It records a gift of money for burning twilight lamp by an individual from Pandya country.

**1165/2003** On the same place. Tamil. Sundarapandya r.y. 24 (A.D. 1309). It records a gift of money for burning twilight lamp by an individual from Kaikola community.

**1166/2003** On the south jagathi of front mandapa of the same temple. Tamil. Viravallala III (A.D. 1329 ) It records a gift of taxes for renovation of temple by the King.

**1167/2003** On the east wall of front mandapa of the same temple. Tamil. Sundarapandya r.y. 2 (A.D. 1287). It records a gift of money by an individual for burning twilight lamp.

**1168/2003** On the north wall of front mandapa of the same temple. Tamil. Virapandya r.y. 17 (A.D. 1282). It records a gift of money by an individual from Vellala community who haild from Kunnattur.

**1169/2003** On a pillar in the south prakara of the same temple. Tamil. Vikramachola II r.y. 2 (A.D. 1257). It records a gift of pillar by an individual from Padaithalai clan of Vellala community.

**1170/2003** On the north wall of sanctum sanctorum of the same temple. Tamil. Virarajendra 41 r.y. (A.D. 1248). It records the conferment of Kani right upon Sivabrahmin by Sivabrahmins of Nageswara swami temple.

**1171/2003** On the south wall of sanctum sanctorum of the same temple. Tamil. Virarajendra r.y. 42 (A.D. 1249). It records a gift of money (Sriyakki) by an individual from Saathenthai clan of Vellala community.

**1172/2003** On the north wall of sanctum sanctorum of the same temple. Tamil. Virarajendra r.y. 41 (A.D. 1248). It records a gift of money by a Sivabrahmin from Pidariyur.

**1173/2003** On the east wall of sanctum sanctorum of the same temple. Tamil. Virarajendra r.y. 30 (A.D. 1237). It records a gift of money for burning a twilight lamp by an individual from Padaithalai clan of Vellala community.

**1173A/2003** On the east wall of sanctum sanctorum of the same temple. Tamil. Virarajendra r.y. 41 (A.D. 1248). It records a gift of money by a lady from Potter community.

1174/2003 On the east wall of sanctum sanctorum of the same temple. Tamil. Virarajendra r.y. 13 (A.D. 1220). It records conferment of kani right to a sivabrahmin by Ur assembly of Vijayamangalam.

1175/2003 On the south wall of sanctum sanctorum of the same temple. Virarajendra r.y. 38 (A.D. 1245). It records a gift of money by an individual from Kolli clan of Velllala community.

1176/2003 On the south wall of sanctum sanctorum of the same temple. Tamil. Virarajendra r.y. 20 (A.D. 1227). It records a gift of chain (Aramkakkum uraniyodu okkum gold) and money(one palanthirukagai) for burning twilight lamp in Amman temple by lady from Vellala community in Puvaninadu.

1177/2003 On the north wall of front mandapa of the same temple. Tamil. Virarajendra r.y. 3 (A.D. 1168). It records a gift of money by a trader from mathur for burning twilight lamp.

1178/2003 On the north wall of front mandapa of the same temple. Tamil. Sundarapandya r.y. 16 (A.D. 1301). It records a gift of money (panam) for burning twilight lamp by an individual from Padaithalai clan of Vellala community.

1179/2003 On the north wall of front mandapa of the same temple. Tamil. Virarajendra r.y. 5 (A.D. 1270). It records a gift of money for burning a twilight lamp by an individual from Padaithalai clan of Vellala community.

1180/2003 On the north wall of front mandapa of the same temple. Tamil. Virarajendra r.y. 3 (A.D. 1268) It records a gift of money for burning a twilight lamp by a lady who was the wife of an individual from Padaithalai clan of Vellala community.

1181/2003 On the north wall of front mandapa of the same temple. Tamil. Thiribuvanaviradeva (Vira chola III) r.y. 4 (A.D. 1172). It records a gift of money by four individuals from Vellala and trader communities.

1182/2003 On the north wall of front mandapa of the same temple. Tamil. Virapandya r.y. 15 (A.D. 1280). It records a gift of tank which indiscorded condition for long time as devadana to the temple of Goddess. The reconstruction work was entrusted with Ur assembly of Vijayamangalam.

1183/2003 On the east wall of front mandapa of the same temple. Tamil. Vikrama chola II r.y. 4 (A.D. 1259). It records a gift of money by an individual from Vijayamangalam. The money was deposited with siva brahmana of Nageswara temple.

**1184/2003** On the east wall of front mandapa of the same temple. Tamil. Vikramachola-III r.y. 13 (A.D. 1286). It records a gift of money by a merchant.

**1185/2003** On the east wall of front mandapa of the same temple. Virachola III r.y. 4 (A.D. 1172). It records a gift of money (two accus) by an individual from Kings regiment.

**1185A/2003** On the south wall of front mandapa. Tamil. Abimanachola Rajadhiraja (A.D. 1100). It records a gift of money for burning a perpetual lamp.

**1186/2003** On the south wall of front mandapa. Tamil. Abimanachola Rajadhiraja r.y. nil ($12^{th}$ century A.D.). It records a gift of land by King.

**1187/2003** On the south wall of front mandapa of the same temple. Tamil. Virapandya r.y. 19 (A.D. 1284). It records a gift of money (sriyakki) by a dancing girl.

**1188/2003** On the south wall of front mandapa of the same temple. Tamil. Rajadhiraja Viranarayanan r.y. nil ($12^{th}$ century A.D.). It records a gift of taxes in grain by the King. A part of the taxes from Uttamachola chathurvedimangalam four nali of parakesari measure was equates with 37 nali of Viranarayanan nali.

**1189/2003** On the south wall of front mandapa of the same temple. It records a gift of idol of goddess and money for marriage rituals of God and Goddess by a lady who was the wife of Kangaya tharaiyan from sathuvay clan of Vellala community who was a native of Vijayamangalam.

**1190/2003** On the south wall of front mandapa of the same temple. Tamil. Vikramachola II r.y. 7 (A.D. 1263). It records the several gift made by money individual burning the light of Kulothunga II and Virarajendhra of Konguchola line.

**1191/2003** On the south wall of front mandapa of the same temple. Tamil. Kulothunga chola-I r.y. 13( A.D. 1162). It records a gift of money (Palansalagai accu) and for performing rituals and burning perpetual lamp.

**1192/2003** On the north wall of front mandapa of the same temple. Tamil. Virarajendhra r.y. 3 (A.D. 1210). It records the several gift of money(sriyakshi palan salagai accu) by an individual by name Kovan maniccar Unnadi from Panankadai of Vellala community.

**1192A/2003** On the south wall of front mandapa of the same temple. Tamil. No King. 13th century A.D. It records a gift of money (sriyakshi palan salagai accu) by an individual from Vellala communnity.

**1193/2003** On the west wall of same mandapa of the same temple. Tamil. It records the king's order various vadakongu nattu kani rights of Sivabrahmana and Dhanattar.

**1194/2003** On the west wall of same mandapa of the same temple. Tamil. Virachola III r.y. 11 (A.D. 1284). It records a gift of money by a lady, who was the wife of a Vellala Ilamazhai for burning twilight lamp.

**1195/2003** On the same wall of front mandapa of the same temple. Tamil. Virarajendhra 14 (A.D. 1221). It records a gift of money(four Kalanju) by Devan alias Siva kalyana nampi from Sathupadi clan of vellala community. This gift was utilised for the rituals food offering and ninty lamps during sivarathri festival.

**1196/2003** On the north wall of Amman temple. Tamil. It records an order of king issued to the Sivabrahmana's in all temples in Kuruppu nadu to follow the system which was in existence in Vadaparicara nadu. According to the system in Vadaparicara nadu one fourth of the income of sivabrahmins must be given to the uvaccas.

**1197/2003** On the north wall of Amman temple. Tamil. Virapandya r.y. 9 (A.D. 1274). It records a gift of money (Palansalagai accu) by an individual from Vellala communnity.

**1198/2003** On the north wall of Amman temple. Tamil. Virapandya. r.y.12 ( A.D. 1277). It records a gift of money (a sriyakki palansalagai accu) by a lady from dancing group for burning twilight lamp.

**1199/2003** On the south wall of Amman temple in Nageswara temple. Tamil. Viravallala III r.y. nil (14th century A.D.). It records a gift of village by nadu assembly to the Nageswara temple for rituals and renovations.

**1200/2003** On the north wall of front mandapa of Amman temple. Tamil. Sundarapandya r.y. 27 (A.D. 1212). It records a gift of money (140 panam) for burning a perpetual lamp by an individual from Venmani clan of Vellala communnity.

**1201/2003** On the north wall of front mandapa of Amman temple. Tamil. King's name not mentioned, Saka 1265 (A.D. 1343). It records the agreement of ur assembly and ur officials for giving correct measurement of things to the Nageswara temple.

**1202/2003** On the same wall of the same temple. Tamil. Sundarapandya r.y. 27. (A.D. 1312 ). It records a gift of 140 panam by Ur assembly by selling paddy into temple treasury. The money entrusted with Sivabrahmins.

**1203/2003** On the west wall of first prahara of Nageswara temple. Tamil. Rajadhiraja r.y. 14+1 (A.D. 1100). It records a gift tank of as tax free to the Nageswara Mudaiyar temple.

**1204/2003** On the slab near gopura near prakara wall. Tamil. Rajadhiraja Viracholan r.y. 5 (A.D. 1122). It records a gift of land by a lady, the wife of Silaamban Neelan, who was a member of Vellai clan of Vellala community.

**1205/2003** On the west wall of Someswara temple. Vijayamangalam. Tamil. Virarajendra r.y. 3 (A.D. 1210). It records a gift to Thirunattiyalvar by Ur assembly of Sirukalanci, Virarajendra Kaalan and Rajaganbirapidaran.

**1206/2003** On the west wall of Someswara temple. Tamil. Sundarapandiya r.y. 28 (A.D. 1313). It records a gift of money by an individual of Vellala communnity.

**1207/2003** On the east wall of the mandapa in Chandraprabha temple. Grantha and Tamil. Veera Harihara Rayar. (15th century A.D.). It records a gift of village Sengarpalli to the Aniyadalagiyar in Vijaymangalam for offering by Nattars of (Nadu assembly) Vadaparicara nadu Vaingarai nadu, Nalurparru nadu, Perur nadu, Kuruppu nadu and Veera chola nadu.

**1208/2003** On the post in the Vadhayamandapa of Chandra prabha temple.Tamil. King's name not mentioned (9th century A.D.). It records the death of Puliyapai, the sister of Chamundarayan at the end Salleganai.

**1209/2003** On the pillar in the Vadhaya mandapa in the same temple. Tamil. Kulothunga I r.y. 14 (A.D. 1163). It records a gift of land for rituals in the Virasangathaperumpalli by an individual by name Irunkolan who was performing nadukaval duty. It is interesting to note that gift is mentioned as devadana and not as palli chanda.

**1210/2003** On the door jamb of Nirutha mandapa of the same temple. Tamil. King's name not mentioned (12th century A.D.). It records a gift of money (two anaiaccu) for performing rituals in front of Konguvelir Devasiriyar and their friends during Sankiranthi and Karthigai festivals.

**1211/2003** On the eastern door jamb of Nirutha mandapa of the same temple. Tamil. Virarajendra r.y. 46 (A.D. 1257). It records a gift of door jamb by an individual from Padaithalai clan of Vellala communnity.

**1212/2003** On the slab in the Beema theertha well in the same temple. Tamil. Virapandya r.y. 20 (A.D. 1288). It records some gift by a Vellala from Vadakarai nadu.

1213/2003 On the Beema theertha well. Fragmentary. (13th century A.D.). It mentions Virasangatha perumpalli.

1214/2003 On the eastern adittana of Chandraprabha temple. Kannada. It records the construction of temple.

1215/2003 On the slab in front of Vadhya mandapa of the same temple. Sanskrit. It says that one deeply involved in the beauty and fame of Brahad katha.

1216/2003 On the south vidaba of Nageswaramudaiyar temple. Tamil. (A.D. 1884). It records the construction of several parts in the temple by Nagappa gaundar from Kampuliyampatti.

1217/2003 On the north side Vidhana of mandapa of Nageswara temple. Tamil. Queen Victoriya (A.D. 1869). It records the construction of some parts of temple and Garudasthampa.

1218/2003 On the wooden door of Vijayapuriamman temple. Tamil. (A.D. 1910). It records a gift of door by an individual from Vijayamangalam.

1219/2003 On the roof of Nalla Kinarru Pillayar koil mandapa in Vijayamangalam (A.D. 1910). It records the gift of 2 Acre land donated to Muthu vinayaka temple.

## VELLODU

1220/2003 On the east, north walls of Sarvalingeswara temple. Tamil. Virapandya r.y. 15 (A.D. 1280). It records the conferment of same rights upon Kammala community the Kankaya nadu and Punthurai nadu.

1221/2003 On the south-east walls of the same temple. Tamil. Vijayanagara King (16th century A.D.). It records a gift of lands which were irrigated from several tanks.

1222/2003 On the north wall of sanctum sanctorum and ardha mandapa of the same temple. Tamil. Virapandya r.y. 15 (A.D. 1280). It records a gift of tank as Kudininga Devadana from lands irrigated from this tank one third of income must be given to the temple.

1223/2003 On the north and west wall of mahamandapa of Sarvalingeswara temple. Virananjaraya Udaiyar (16th century A.D.). It records the decision made by nadu assembly of Punthurainadu for conducting Thaipoosa festival for eleven

days. They also agreed to meet the expenditure of this festival. The members of nadu assembly were haild from 32 villages from this nadu. The details of materials used and the puja were enumurated, also the names of the sign ateries were given.

**1224/2003** On the south-west walls of Sarvalingeswara temple. Tamil. Veera Hariyanna Udaiyar. (16th century A.D.). Records the demarcation of boundaries of Vellodu.

**1225/2003** On the pillar in the mandapa of above temple. Tamil. Ummathur chief Virananjaraya Udaiyar r.y. nil (16th century A.D.). It records a gift of four pillars in the mandapa which was built Mudalikavundar from Punthurai nadu.

**1226/2003** On the slab in the south wall. It records a poetry in venbametre which eulogists the chief. It speeks of ladies who fell in love on the chief.

**1227/2003** On the door jamb of entrace of Ponkaliyamman temple. (19th century A.D.). It records the construction of some parts of this temple.

**1228/2003** On the west side of peeda of horse in Rajakoil. Tamil. (19th century A.D.). It records the horse donated by an individual.

**1229/2003** On the posts swinging. Tamil. (19th century. A.D.). They records the name of person who donated these posts.

**1230/2003** On the south wall of sanctum sanctorum and Ardha mandapa of Sarvalingeswera temple. It mentions several nadu and sivabrahmanas of this temple.

### Velliravali

**1231/2003** On the west wall of Kariyakali amman temple near Mankuttai. Tamil. King's name not mentioned (A.D. 1804). It records the renovation of Kaliamman temple by Subramaniya swamy, son of Subramaniya Goundar and grand son of Thiruvenkata Goundar.

### Goundaccipalayam

**1232/2003** On the roof of mandapa of Palamudai amman temple. It records the construction of Palamudai amman temple.

### Nasiyanoor

**112/2005** On the north wall of Muventheesvarar temple. Tamil. Nancaraya Udayar. It records a gift of taxes by nadu assembly for renovation and rituals in the temple

113/2005 On the south wall of the same temple. Tamil. Kumara Virupatcirayar. (A.D. 1447). It records a decision made by assembly according to which each family must give one panam for festival.

114/2005 On the west wall of same temple, Tamil. Kempaiya Udaiyar (16th century A.D.). It records a gift of Devadana to the temple. It mentions that tank and lands were gifted to the temple.

115/2005 On the slab in the same temple. Tamil. (16th century A.D.). It records an order which says that Purattupanam and Manavaralipanam must be given to the temple.

116/2005 In the Amman sannathi of the same temple. Tamil. Virupatcirayar. It records a gift of gold by Gopalan from Pambadi.

117/2005 On the Pillar in the Amman sannathi of the same temple. Tamil. Virananjarayar (16th century A.D.). It records a gift of two pillar by Thirumalainathar Koppanan, who was a village accountant.

118/2005 On the wall of Pillaiyar temple in the same temple. Tamil. (A.D. 1772). It records the construction of Pillaiyar temple by Sempa clan of Vellala community.

119/2005 On the Eluthupparai, north side of the Muniappan temple. Tamil .Vijayanagara Accutharaya (A.D. 1536). It records a gift of land to village accountant Periyaperumal Damodarappillai by Ur assembly and village chiefs.

120/2005 On the left Vidhana of Adinarayana Perumal temple at Naciyanur. Tamil. (A.D. 1827). It records a renovation of stone mandapa which was submit by Velappa Goundar which met a destruction in course of time. The renovation works done by the members of Kurā kula clan of Vellala community.

121/2005 On the northern vidana of the same temple. Tamil. (A.D. 1940). It records the construction of front mandapa by Velappa Goundar son of Nallappa Goundar. It also mentions flouring works by Kurai clan of Vellala community from Naciyanur.

122/2005 On the copper spear in the Madhura Kali amman temple. It records a gift of the spear by Amarapathi Goundar from Naciyanur. It also mentions the name of gold smith

## Mosakkuttivalasu

123/2005 On the right side of the door jamb of Uttama Choliswara temple. Tamil. Kulothunga I. It records a gift of money (one accu) by Thittai Koil Nambi from Uttamachola chathurvedimangalam for burning twilight lamp.

**124/2005** On the left side of the door jamb of Uttama Choliswara temple. Tamil. Kulothunga I r.y. 11 (A.D.1218). It records a gift of money (one and half accu) for Sivarathri festivals by Seyagangan alias Thambiran Thozhan.

**125/2005** On the slab in the forest of Mosakkuttivalasu. Tamil. (A.D.1334). It states that gift of Uttamachola chathurvedimangalam to Sevur Amara Perumal by Singaya Thennayakkar.

**126/2005** On the slab of the Arumai Nacciyamman Temple. Tamil. (A.D. 1336). The temple constructed by Sikka Gopalan in Uttamachola chaturvedimangalam.

## PIDARIYOOR

**127/2005** On the slab in the garden of Marappa Gounder Tamil. (A.D. 1531). It records a gift of toll tax by Viswanatha Nayakkar.

**128/2005** On the slab in the northern direction of Siva temple in the land of Karuppanna Gounder. Tamil. Virappanayakkar (A.D. 1572). It records an order of officials which mentions about the decision made by nadu assembly of Punthurai nadu. According to this decision each family which came to settle at Pidariyur must be levied five panams.

**129/2005** On the door jamb of Amman temple. Tamil. Virarajendra (A.D. 1225). It records a gift of pillar by Manickachathiran who was a village head (Gamindan).

## CHENNIMALAI

**130/2005** On the pillar in the temple on the hill. Tamil. (A.D. 1710). No detail is available.

**131/2005** On the roof near door jamb. Tamil. (A.D. 1723). It mentions the name Palani Thattan, son of Velathattan.

**132/2005** On the western wall of kitchen. Tamil. (A.D. 1856). It records the construction of kitchen by Kuttiya Gaunder, son of Chinna Gaunder from Porulandhai clan.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. விசயமங்கலம் | 1 |
| 2. வெள்ளோடு | 90 |
| 3. வெள்ளிரவளி | 104 |
| 4. கவுண்டச்சிபாளையம் | 106 |
| 5. நசியனூர் | 107 |
| 6. மொசக்குத்திவலசு | 121 |
| 7. பிடாரியூர் | 126 |
| 8. சென்னிமலை | 131 |
| சொல்லடைவு | 134 |
| நிழற்படங்கள் | 139 |

த.நா.அ. தொல்லியல் துறை　　　　தொடர் எண் :- 1158/2003

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | ஈரோடு | ஆட்சி ஆண்டு : | 15 |
| வட்டம் : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு : | சக ஆண்டு 1202<br>கி.பி.1280 |
| ஊர் : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு<br>ஆண்டு அறிக்கை : | 544/1905 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | - |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு<br>எண் : | 1 |
| அரசன் : | வீரபாண்டியன் | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலம் திருமேற்கோயில் நாயனார் சித்திரமேழி விண்ணகர நாயனார் கோயில் நம்பிமார்களுக்கும், ஸ்ரீவைணவர்கட்கும் கற்றாயங்காணி வீரசோழச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் கொடுத்த கொடை குறிக்கப்படுகிறது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க சகரயாண்டு ஆயிரத்திரு நூற்றிரண்டு கோவிராசகேசரி பந்மரான திரிபுவனச்சக்கரவத்
2. திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு யாண்டு பதிநைந்தாவது துலா ஞாயிற்று அமறபட்சத்து திங்கட்கிழமையும் தசமியும் பெற்ற உத்தரத்து நாள் குறுப்பு நாட்டு வி
3. சயமங்கலத்து திருமேற்கோயில் நாயனார் சித்திரமேழி விண்ணகர நாயனார் கருமாணிக்காழ்வார் கோயில் நம்பிமாற்கும் ஸ்ரீவைஷ்ணவர்க்கும் வீரசோழவள
4. நாட்டு பிரமதேயம் கற்றாயன்காணியாந ஸ்ரீவீரசோழச் சதுர்வேதிமங்கலத்து சபையோம் உபயசாதனம் பண்ணிக்குடுத்த பரிசாவது திருக்குடந்தை காசியப கோத்திரத்து
5. கோவிந்தன் கருமாணிக்காழ்வான் இந்நாயனார்க்கு திருநந்தாவிளக்கிற்கு ஸ்ரீபண்டாரத்தில் ஒடுக்கின பணமாய்க் கைக்கொண்ட பணம் ௨௰௩ நா

6. ங்கள் கைக்கொண்டு இஞ்ஞாயிறு முதல் மாதம் ஒன்றுக்கு குறுப்பு நாழியால் முன்னாழி மூவுழக்கே இரண்டரை செவிடு எள்ளெண்ணெய்யாக ஆ . . .

7. ழி மூவுழக்கு எண்ணெய் நம்பிமார் கற்றாயன்காணியிலே வந்து அளவுகண்டு இலச்சினையிட்டு ஆளிட்டு எடுப்பிச்சுக் கொண்டுவந்து காட்டிக்குடுப்போமாகவும் ஆட்

8. களுக்கு எண்ணெய் தண்டுந்துணையும் சோறிடுவோமாகவும் இப்படிக்கு எங்கள் மக்கள்மக்கள் சந்திராதித்தவரை எண்ணெய் அளந்து போக . . . .உ

9. பய சாசனம் பண்ணிக்குடுத்தோம் நாயனார் கருமாணிக்காழ்வார் வீரசோழச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோம் இப்படிக்கு வாச்சியன் வடகொங்கன்

## த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 1159/2003

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : சகம் 1202 |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : கி.பி.1280 |
| ஊர் | : விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 545/1905 |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தமிழ் | | |
| அரசு | : கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : 2 |
| அரசன் | : வீரபாண்டியன் | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : பெருமாளின் திருவிடையாட்ட ஊரான கூடூர் ஊரார் நந்தாவிளக்கு எரிக்க மாதம்தோறும் குறுப்பு நாழியால் மூன்று நாழி எண்ணெய் அளக்க ஒப்புக் கொண்டனர். கண் பார்வை பெற்ற ஒருவர் நந்தவனம் கொடையளித்துள்ளார்.

### கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்ம[ங்க] . . . [ஆயிர]த்திருநூற்று இ[ர]ண்டில் கோராஜகேஸரி வஹ்நரான த்ரிபுஹ[வனச்சக்ர]வத்திகள் ஸ்ரீவீரபா
2. ண்டிய ஷேவற்கு யா[ண்டு] . . . குறுப்பு ந[ாட்]டு [விசை]யமங்கலத்துத் திருமேற்கோயிற் சித்திரமேழி விண்ணகரெம்பெருமான் கருமாணிக்கா
3. ழ்வார் திருவிடையா[ட்டங்] கூடூர் . . . கனே[ன்]யின்னாயனார் கருமாணிக் காழ்வாற்குத் திருநந்தா விளக்கு வைக்க நாங்கள் உதகம் பண்[ணி]ன விளக்கொன்றுக்கு
4. மாதந்தோறும் குறுப்பு நாழியால் முந் . . . ண்ணையி[ற்] கோயில் [ந]ம்பிமார் ஸ்ரீவைஷ்ணவர் ஸ்ரீகாரியஞ் செய்வார்கள் வசம் சந்திராதித்தவரை மக்கள்மக்கள் அ

5. [ள]ந்து போதுவோமாகச் சம்[ம]தித்து . . . . . காட்டூரில் ஊரும் ஊராளிகளோமும் ஸ்ரீபண்டாரத்துக்கு

6. . . . லைவகை அருமாரி திரு . . . போது கரியமாணிக்காழ்வ[ா]ர் கண்கொடுத்தபோது உதகம் பண்ணின

7. [திரு]நந்தாவனம்

---

(6.7 வரிகள் பிற்கால எழுத்துப்போல் காணப்படுகிறது) (கி.பி. 16-ஆம் நூற்றாண்டு) இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் இப்பகுதிக்கு 545A எண் கொடுக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : 10 |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : கி.பி.1217 |
| ஊர் | : விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 546/1905 |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தமிழ் | | |
| அரசு | : கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : 3 |
| அரசன் | : வீரராசேந்திரன் | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கம் வெள்ளாளன் சாத்தந்தை குல சிறியான் தேவனான முடிகொண்ட சோழமாராயன் திருப்படிமாற்று அமுதுபடிக்கு மூலப் பொருளாக 29 அச்சு பண்டாரத்தில் வைத்தான். இம்மூலப் பொருள் மூலம் நாள்தோறும் நான்கு நாழி அரிசி அமுது செய்ய அளிக்கப்பட்டது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க கோவி ராஜகேசரிவந்மரான த்ரிபுவனச்சக்ரவத்திகள் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருந
2. ல்லியாண்டு பத்தாவது ஐப்பசித் திங்களில் குறுப்பு னாட்டு விசையமங்கலத்துத் திருமேற்கோயில் சித்திரமேழிவிண்ணகராழ்வாற்குத் திருப்படிமாற்றுக்கு இருபத்தொன்பதச்சு எ
3. ம்பெருமான் ஸ்ரீபண்டாரத்து ஒடுக்க இவ்வமுதுபடி நித்தம் னானாழி யரிசியமுதுபடி செய்வதாக கல்வெட்டுவித்தேன் விசையமங்கலத்து வெள்ளாளன் சாத்தந்தைகளில் சிறியான் தேவனான
4. முடிகொண்டசோழமாராயனேன் இதந்மஞ் சந்த்ராதித்தவரை செல்வதாகவு மித்தன்மம் இடங்கை தொண்ணூற்றொன்பது . . . ரக்ஷை இதந்மழி இற
5. க்குவான் வழிவழியெழச்சமறுவான்

த.நா.அ. தொல்லியல் துறை　　　　தொடர் எண் :- 1161/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 12 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1277 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 547/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 4 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : வடகரை நாட்டுக் குறிச்சியைச் சேர்ந்த வெள்ளாளர்களில் வேந்தன் குல வேந்தன் வாமதேவன் சந்தியா விளக்கு எரிக்க ஸ்ரீயக்கிபழஞ்சலாகை 4 அச்சுக் கொடையாகக் கொடுத்தான். கோயில் நம்பிமார் மூவர் விளக்கு எரிப்பதாக ஒப்புக்கொண்டனர்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனசக்ரவத்திகள் ஸ்ரீவீரபாண்டியதேவர்க்கு யாண்டு ய௨ வது ஆ[வ*]
2. ணி திங்கள் முதலாக வடகரை நாட்டு குறுச்சி வெள்ளாளன் வேன்தன்களில் வே
3. ன்தன் வாமதேவனேன் விசயமங்கலத்து சித்திரமேழிவிண்ணகரெம்பெருமான் கருமாணிக்காழ்வார்
4. க்கு வைத்த ஸந்த்யாதீவம௧ ஒன்றுக்கு ஒடு[க்]கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ச ங்கைக்கொண்டோம்
5. ஸ்ரீகோயில் காணிஉடைய ஸ்ரீவைவாநஸ ஸூத்ரரில் நம்பிமாரில் கௌசிகன் மலைக்கினிய[ன்]றான் ஹட்டநும் மௌதமன்
6. சொக்கதேவ வரதரும் பெரிய பெருமாளும் இமூவோம் குடங்கொண்டு கோயில் புகுவான் இதிருவிளக்கு சந்த்ராதித்த
7. வரை எரிப்பதாக கல்வெட்டிக் குடுத்தோம் ஸ்ரீவைஷ்ணவரக்ஷை உ

## த.நா.அ. தொல்லியல் துறை　　　　தொடர் எண் :- 1162/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 23 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1308 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 548/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 5 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் முன்மண்டப கிழக்குச் சுவர் வாயில் வடபுறம்.

குறிப்புரை : விசயமங்கலத்து படைத்தலை வேளாளர் திருவானி பெரியதேவனான வாணராயன் திருமேற்றிசை கோயிலான கருமாணிக்கப் பெருமாள் கோயிலில் சந்தி தீபம் வைத்தார்.

### கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான திரிபுவனச்சக்ரவத்தி
2. சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு உ௰௩ . . . [கு]
3. றுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ள[ாளன்]
4. படைத்தலைகளில் திருவானி பெரியதே[வனான]
5. வாணராயனேன் தி[ரு]மேற்திசைக் கோயிற் சி[த்திர]
6. [மேழி விண்ண]கர் எம்பெருமான் [க]ருமாணி[க்காழ்வார்] சந்தி
7. யாதீப விளக்கொன்றுக்கு இக்கோயிற்காணி உடைய . . . .
8. காசிப கோத்திரத்து அழகிய மணவாள பட்டன் [சிங்]கப்பெரு . . . .
9. விளக்கொன்றுங் கைக்கொண்[டேன்] சந்திராதி[த்தவ*ரை] . . . . . .
10. க இக்கோயில் [புகுவார்] எல்லாம் [செலு]த்துவதாக இது ஸ்ரீவயி . . . . ஷ்ணவ ரக்ஷை

## த.நா .அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 1163/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 28 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1313 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 549/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 6 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் முன்மண்டப கிழக்குச் சுவர் வாயில் வடபுறம்.

குறிப்புரை : விசயமங்கலத்து படைத்தலை வேளாளர் விச்சன் சீட்டனான தப்பிலாவாசகன் சந்தியாதீப விளக்கு வைக்க பொன் ஓர் அச்சுக்காகப் பத்துப் பணம் மூலப்பொருளாக வைத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான திரிபுவனசக்ரவத்திகள் சுந்தரபாண். . . .
2. வற்கு யாண்டு உ௰அ . . . குறுப்பு நாட்டு விசயமங்கலத்து . . . .
3. ளன் [படைத்தலைகளில்] விச்சன் சீட்டனான தப்பிலாவாசனேன் திருமேற் கோயில் . . .
4. விண்ணகரெம்பெருமான் கருமாணிக்காழ்வாற்கு சந்தியா தீப விளக்கொ . . .
5. கோயிற் காணியுடைய ஬்ராஹ்மணன் காசிப கொத்ரத்து அழகிய மணவா . . . .
6. வேங்கடமுடையானும் யென்தம்பி சிங்கரும் இவ்வச்சொன்றுக்கு ப ய இப் . . . .
7. கைக் கொண்டோம் இவ்விருவோம் சந்திராதித்தவரைெ . . . . .
8. த்தகுடங்கொடு கோயில் புகுவாரெலாம் செலுத்துவதாக இது ஸ்ரீவைஷ்ணவர
9. ரக்ஷை உ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 27 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1312 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 550/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 7 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் முன்பண்டபம் கிழக்குச் சுவர் வாயில் இடதுபுறம்.

குறிப்புரை : பாண்டிய நாட்டைச் சேர்ந்த சூரியதேவனான குவலயத்தரையன் சந்தியா தீபம் வைக்க ஓர் அச்சுக் கொடுத்தார்.

## கல்வெட்டு :

1. . . . . கோச்சடபன்ம[ரா]ன த்ரிபுவ[ன]ச்சக்ரவத்திகள் ஸ்ரீ ஸுந்தரபாண்டிய தேவற்கு
2. . . . [௨]௰௭ [ஆ]வது குறுப்பு நாட்டு விசையமங்கலத்துத் திருமேற்கோயிற் வித்ரு
3. மேழி விண்ணகர்நாயனார் கருமாணிக்காழ்வாற்குப் பாண்டிமண்டலத்துக் கருங்
4. . . . . சூ[ரி]ய தேவனான குவலயத்தரையன் வைத்த ஸந்த்யா
5. . . . க்கு இ[க் கோயில் காணி]யுடைய ப்ராஹ்ம[ண] . காஸ்யப கோத்ரத்து அழகிய மணவாளற்
6. . . . . .ப்பெருமாளேன் கைக்கொண்ட அச்சு ஒன்றும் கொண்டேன் இவ்விளக்குச்சந்த்ரா
7. . . . . ங்கொண்டு கோயில் புகுவாரெல்லாஞ் செலுத்துவதாக இது ஸ்ரீவைஷ்ணவரக்ஷை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 24 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1309 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 551/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ், கிரந்தம் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 8 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் முன்மண்டபம் கிழக்குச் சுவர் வாயில் இடதுபுறம்.

குறிப்புரை : விசயமங்கலத்துக் கைக்கோளரில் குமரன் எடுத்தானான சிங்கப்பெருமாள் என்பவர் சந்தியாதீபம் ஒன்று வைத்தார்.

## கல்வெட்டு :

1. . . . கோச்சடபன்ம[ரா]ன திரிபுவன[ச்சக்கர]வத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டி.
2. . . . வற்கு யாண்டு ௨௰௪ வது தைத் திங்கள் முதல் குறுப்பு நாட்டு விசைய மங்கலத்து
3. . . . [மக]ன் . . . ரில் கைக்கோளரில் குமரன் எடுத்தானான சிங்கப்பெருமான்
4. . . . ன் கருமாணிக்காழ்வாற்கு வைத்த சந்தியா தீபவிளக்கு ஒன்றுக்கு . . . .
5. . . . க்கொண்டு இக்கோயிற்காணி உடைய ப்ராஹ்மணன் காஸ்யபகோத்ரத்து அ[ழ]கி[ய] . . .
6. . . . ன் சிங்கப்பெருமாளேன் குடங்கொ[ண்]டு கோயில் புகுவான் சன்திரா[தித்தவரை]
7. . . . எரிப்பதாக இது ஸ்ரீ[வை]ஷ்ணவர் ரக்ஷை

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1166/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | பிரபவ |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1327 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 552/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ், கிரந்தம் | | | |
| அரசு | : | போசளர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 9 |
| அரசன் | : | மூன்றாம் வீரவல்லாளன் | | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் முன்மண்டபம் தெற்கு ஜகதி.

குறிப்புரை : கருமாணிக்காழ்வார் கோயில் திருப்பணிக்கும், திருநாள் தேவைகளுக்கும் கொடுத்த கொடை.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீமந் மஹாமண்டலேச்வர ஹொய்சள ஸ்ரீவீர வல்லாள தேவர்
2. ப்ருதிவிராஜ்யம் பண்ணி அருளா நின்ற ப்ரபவ ஸம்வத்சரத்து நாயினார்
3. சித்திரமேழி விண்ணகரெம்பெருமான் கருமாணிக்காழ்வார் திருப்பணி திரு
4. நாட்தேவைக்கு . . . முளைப்பனவும் குளமும் குளக்கீழ் வயலும் இவூர்க்கடமை
5. திருவிடையாட்ட இறையிலி உதகம் பண்ணிக் குடுத்தோம் . . இவை ஒட்டச்சு காலும் . . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 2 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1287 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 552/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 10 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் முன்மண்டபம் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : குன்றத்தூர் வேளாளர் கொள்ளிகுலச் சொக்கன் என்பவர் மனைவியும் உடையான் என்பவர் மகளுமான குப்பாண்டி என்பவர் சந்தியா தீபம் வைக்க ஓர் அச்சுக் கொடுத்தார்.

## கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடபன்மரான திருபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ[சு]ந்தரபாண்டிய தே[௨]
2. வற்கு யாண்டு உ ஆவது ஆடி மாதம் குறுப்பு நாட்டுக் குன்றத்தூர் வெள்ளாழன்
3. கொள்ளிகளில் சொக்கன் மனைக்கிழத்தி உடையான் மகள் குப்பாண்டியேன் நா
4. யனார் விக்ர[மே]ழி [விண்]ணகரெம்பெருமான் கருமாணிக்கா[ழ்]வார் [கோ]யிலுக்கு
5. வைத்த ஸந்த்யா[தீபம்] ஒன்றுக்குப் பண்ட[ாரத்தில்] ஒடுக்கின அச்சொன்று இது [ஸ்ரீவைஷ்ணவரக்ஷை]

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1168/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 17 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1282 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 554/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 11 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் முன்மண்டபம் வடக்குச் சுவர்.

குறிப்புரை : காங்கய நாட்டுப் பரஞ்சேர் பள்ளி வேளாளர் ஆவகுல வீரகாமிண்டன் உடையாண்டான் என்பவர் மனைவி வாமதேவர் மகள் பிள்ளை அம்மை சந்தியா தீபவிளக்குக்கு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரிபன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீவீரபாண்[டி]ய தேவற்கு யாண்டு ௰௭ வது ஆவணி திங்கள் முதலாக காங்கயனாட்டில் பர
2. ஞ்சேர் பள்ளிவெள்ளாழன் ஆவகளில் வீரகாமிண்டன் உடையாண்டான் மனை கிழத்தி வாமதேவர் மகள் பிள்ளை அம்மை விசையமங்கலத்துச் சித்திரமேழி விண்ண
3. கரெம்பெருமான் கருமாணிக்காழ்வாற்கு வைத்த ஸந்த்யாதீபம் ஒன்றுக்கு ஒடுக்கின ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்றுங் கைக்கொண்டோம் இக்கோயில்க் கா
4. ணிஉடைய வைகாநஸ ஸூத்ரத்தில் நம்பிமாரில் மௌதமன் சொக்கத் தேவர் வரதருமிவன் தம்பி பெரிய பெருமாளுமிவ்விருவோங் குடங்கொண்டு இக்கே
5. காயில் புக்கவன் [சந்த்]ராதித்தவரை எரிப்பதாக கல்வெட்டிக் குடுத்தோம் இது ஸ்ரீவைஷ்ணவரக்ஷை:-

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1169/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 2 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | சகம்1179 கி.பி.1257 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 555/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 12 |
| அரசன் | : | இரண்டாம் விக்கிரமசோழன் | | | |

இடம் : கருமாணிக்கப் பெருமாள் கோயில் தெற்குப் பிரகாரத்தில் உள்ள தூண்.

குறிப்புரை : படைத்தலை வேளாளர் நங்கன் என்பவர் தம் கொடையாக திருநிலைக்கால் செய்தளித்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ [வி]
2. கூ₂௨ சே[ாழ தே] . .
3. வற்கு திருவெ
4. வழதிட்டு[ச்]
5. செல்லா [நின்ற]
6. திருநல்லி[யா]
7. ண்டு இர[ண்]
8. டாவது ச[கர]
9. யாண்டு [ஆ]
10. யிரத்தொ[ருநூ]
11. ற்றெழுப[த்தொ]

12. ன்பதில் கு[றுப்பு]

13. நாட்டு வி[சைய]

14. மங்கலத்து [வெ]

15. ள்ளாளன்[படை]

16. த்தலைகளில்

17. றையன் தி . . .

18. நங்கனேன் . . .

19. நிலை[க்]கால் [செய்]

20. வித்தேன்

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1170/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 4+1 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1212 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 556/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 13 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : குறுப்பு நாட்டு உகாப்பாடி ஊரவர் இராசராசபுரம் சிவப்பிராமணர் ஆலங்காட்டுப் பாண்டி உடையானான சைவ சிகாமணி பரதாயனுக்கும், விசயமங்கலம் ஆத்திரேய கோத்திரம் ஆளவந்திக்கும் கோயில் காணியளித்து அவர்கள் பெறும் உரிமைகளையும் எழுதித் தந்தனர்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ [கோவி]ராசகேசரிபன்மராந
2. திருபுவனச்சக்கர[வத்திகள் ஸ்ரீ]வீரரா[சேன்திர]
3. தேவற்கி யாண்டு ச வதற்கெதிர் குறுப்பு நாட்டு
4. உகாயப்பாடி ஊரோம் இராசராசபுரத்து திருநாகீசுர
5. முடையார் கோயில் காணி உடைய சிவப்பிராம
6. ணரில் ஆலங்காட்டு பாண்டி உடையாந்நாந சைவசிகா
7. மணி பரதாயனும் விசையமங்கலத்து திருநாகீஸ்வ
8. முடையார் கோயில் காணி உடைய சிவபிராமணர் ஆயன் ஆள
9. வந்தி குறுப்பு நாட்டு பட்[ட]ரும் இவிருவற்கும் நாங்காணி செய்து குடுத்த
10. பரிசாவது எங்களூர்த் தேவக்கோயிலும் பிள்ளையார் கோயிலும் மற்றும்

11. ஏழுவநமுனைப்பநவும் இவகளுக்கு காணிசெய்து குடுத்தோமாண்

12. குல ஆண்டு வரைய் பநந்தாக்கல காணியும் பண்ணி நாலு வகையு

13. ம் இருநாழிகாணியும் [னான்கு] நாழி பயறு நாழி கொள்ளு நாழி . .

14. ண்ணா ஆண்டு வரை குடுப்போமாகவும் இது மாணி . . .

15. கோயிலுக்கு அமுதுபடி ஊரோம் வைப்போமாகவும் . . .

16. . . . நாங்கள் மெச்சுபேர் கழனி தயிரமுது நெயமுது . . .

17. வாராகவும் பிடியிவர்கு கறியமுதுங் குறுணி

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1171/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 42 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1249 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 557/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 14 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |
| இடம் | : | நாகீசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவர். | | | |
| குறிப்புரை | : | விசயமங்கலம் வேளாளரில் சாத்துவாய் குல உடையான் என்பவர் சந்தியா தீபம் வைக்க ஸ்ரீயக்கி அச்சு ஒன்று கொடுத்தார். | | | |

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ நன் மங்கல
2. ஞ்சிறக்க வீரராசேந்திர தே
3. தவற்கு யாண்டு நாற்பத்தி
4. ரண்டாவது காத்திகை ம
5. ாத முதலாகக் குறுப்பு நாட்டு விசை
6. யமங்கலத்து வெள்ளாளன் சாத்து
7. வாய்களில் உடையானுடையாநே
8. ன் ஆளுடையார் திருநாகீஸ்வரமு
9. [டை]யாற்குச் சந்தியாதீபம் ஒந் .
10. றுக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கியொன்றுங்

11. கொண்டோம் இக்கோயில் காணிஉடைய சிவஸ்ராஹ்ணரி

12. . . . த்து ஆளவந்த . . . க்கஷிய . . .

13. மாடல கோத்திரத்து உடையானவனாசிய

14. ஈன வேதநாயக பட்டனும் பிள்ளையாழ்வி வாழவ . . .

15. . . . குடங்கொடு கோயில் புகுவார் சந்திராதி

16. த்தவரை யெரிப்போமாகவும் இத்தன்மம் ப

17. ன்மாஹேஸ்வர ரக்ஷை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 41 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1248 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 558/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 15 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவர்.

குறிப்புரை : பிடாரியூர் திருமுகமலர்ந்தநாதர் கோயில் சிவபிராமணன் மார்க்கண்டேய கோத்திர சைவபுரந்தரச் சக்கரவர்த்தி நாகீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைக்கப் பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு
2. நாற்பத்தொன்றாவது பங்குனி மாதம் பழம்பூ
3. ந்துறை நாட்டுப் பிடாரியூரில் ஆளுடையார்
4. திருமுகமலர்ந்த நாயனார் கோயிலிலே
5. மார்க்கண்டேய கோத்திரத்து சிவபிராமணன்
6. சைவபுரந்தரச் சக்கரவர்த்தியேன் குறுப்
7. புநாட்டு விசையமங்கலத்தில் திருநாகீ
8. சுவரமுடையாற்கு சந்தியாதீபம் ஒன்றுக்கு
9. ஒடுக்கின பழஞ்சலாகை அச்சொன்றுக்கு
10. இக்கோயில் காணியுடைய வாச்சிய கோத்திரத்து ஆ

11. ளவந்தி மாணிக்கன் உள்ளிட்டாரும் மாடலகோத்திர

12. த்து உடையான் அவிநாசி உள்ளிட்டாரும் பிள்ளையாழ்

13. வி வாழவந்தானும் கைக்கொண்டோம் சந்திராதித்தவரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 29+1 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1237 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 559/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 16 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் கருவறை கிழக்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலம் படைத்தலை வேளாளர்களில் திருவானைக்கா சொக்கன் என்பவர் சந்தியா தீப விளக்கு வைத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்த்ர தேவ
2. ற்கு யாண்டிருபத்தொன்பதாவத
3. ற்கெதிர் ஆநித்திங்கள் முதலாகக் குறுப்
4. பு நாட்டில் விசையமங்கலத்திருக்கும்
5. வெள்ளாளன் படைத்தலைகளில் திருவானைக்கா
6. சொக்கநேன் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடை
7. . . . . . .
8. . . . . . .
9. . . . . . த்து ஆளவந்த மாணிக்கனும் ஆள
10. . . . . . மாடலமோத்ரத்து அப்பன் . . .
11. . . . த்ரத்து உடையானவினாசியும் உடையான்
12. . . . கோயில் புகுவார் சந்தியா திபம் ஒன்று . . .

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1173A/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 41 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1248 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 560/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 17 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் கருவறை கிழக்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலம் வேட்கோவர் கோச்சன் மகளும் பெரியான் மனைவியுமான நங்கி என்பவள் சந்தியா தீப விளக்கு வைக்க பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்
2. டு நாற்பத்தொந்றாவது தைத் திங்கள் முதல் [கு]
3. றுப்பு நாட்டு விசையமங்கலத்திருக்கும்[வே]
4. [ட்] கோவரில் கோச்சந் மகள் பெரியாந் மனைக்கிழ
5. த்தி நங்[கை]யேந் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடை
6. டயாற்கு சந்தியாதீபத்துக்கு ஒடுக்கின பழஞ்சல
7. ாகை ஒன்றுங் கொண்டோம் இக்கோயிற் காணி
8. யுடைய சிவப்பிராமணரி[ல்] ஆத்ரேய கோத்ரத்து
9. ஆளவந்தி மாணிக்கநும் ஆளவந்தி பிழைபொ
10. றுத்தாநும் மாடல கோத்ரத்து அப்பந் சம்பந்

11. தநும் உடையாந் அவிநாசியும் உடையாந் வே

12. தநாயகபட்டநும் குடங்கொண்டு கோயில் புகுவார்

13. [சந்]தியா தீபம் ஒன்று எரிப்பதாக சந்திராதித்தவை[ர]

14. செல்வதாக இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 13 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1220 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 561/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 18 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் கருவறை கிழக்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலம் ஊர்ச்சபையார் சிவப்பிராமணன் குநிச்சன் உடையானான நாற்பத்தெண்ணாயிரச் சக்கரவத்திக்கு கோயில் உரிமையில் சரிபாதி அளித்தனர்.

**கல்வெட்டு :**

1. கோவிராசகே[ச]ரி . .
2. ன திரிபுவநச்சக்கர . . .
3. வீரராசேந்திர தேவற் . . .
4. மூத்திட்டுச் செல்லா நி[ந்] . . .
5. ல்லியாண்டு பதிமூன்றா[வ] . . .
6. மார்கழித் திங்கள் முதல் [வி] . . .
7. கலத்தூரோம் விசையன் . . .
8. த்திருக் குஞ்சிவஸ்ராமணந் . . .
9. த்திர குநிச்சன் உடையாநான . . .
10. தெண்ணாயிரச் சக்கரவத்தி . . .

11. ளு[டை*]யார் திருநாகீஶ்வரமுடைய . . .

12. [லிற்] செம்பாதியாலுள்ள பிராெ . . .

13. வதாக அமைத்துக் குடுத்தோம் . . .

14. க்க சந்திராதித்தவரை இத்தந்மமு . . .

15. விலையொற்றி . . .

## த.நா.அ. தொல்லியல் துறை  தொடர் எண் :- 1175/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 29+9 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1245 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 562/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச்சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 19 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலம் வேளாளரில் கொள்ளிகுல சொக்கன் தேவன் சந்தியா தீப விளக்கு வைக்க ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார்.

### கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [வீரரா]ஜேந்தி[ரதேவ]ற்கு யாண்டு இருபத்தொன்பதாவதற்க்
2. கெதிரொந்பதாவது தைத்திங்கள் முதலாகக் குறுப்பு நாட்டில் விசையம
3. ங்கலத்தில் வெள்ளா[ள]ந் கொள்ளி[க]ளில் ெ[ச]ாக்கந் தேவநேன் ஆளுடயார் தி
4. ருநாகீஸ்வரமுடையாற்குச் சந்தியாதீபத்துக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி ப
5. ழஞ்சலாகை ஒந்று கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய
6. சிவப்ராமணரில் ஆத்ரேய கோத்திரத்து ஆளவந்தி மாணிக்கநும் ஆள .
7. வந்திபிழை பொறுத்தாநு மாடலகோத்ரத்து உடையான் அவிநாசியும்
8. உடையான் வேதநாயகபட்டநும் குடங்கொண்டு கோயில் புகுவா
9. ர்ச் சந்தியாதீபம் ஒரு விளக்கெரிப்பதாகவும் சந்திராதித்த வரை
10. எரிச்சு வருவதாகவும் இத்தந்மம் பந்மாஹேஸ்வர ரக்ஷை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 15+5 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1227 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 563/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச்சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 20 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் கருவறை தெற்குச் சுவர்.

குறிப்புரை : பூவாணிய நாட்டு ஆவணிப் பேரூர் வேளாளரில் புள்ளர் குல நடுவிலான் என்பவர் மனைவி சிறுபெண் அவள் மகன் பிள்ளனின் நன்மைக்காக பெரிய நாச்சியார்க்குத் திருஆரம் காக்கல் ஊராணியோடு ஒக்கும் பொன்னும் சந்தியா தீபத்துக்கு பழந்திருவாகை ஒன்றும் கொடை அளித்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேஂந்த்ரதேவற்கு யாண்டு பதினைஞ்சாவத
2. ற்கெதிரைஞ்சாவது கார்த்[திகை] திங்கள் முதல் பூவாணிய நாட்டில் ஆவணி பேரூரிலி
3. ருக்கும் வெள்ளாளன் புள்ளர்களில் நடுவிலாந் மனைக்கிழத்தி சிறுபெ
4. ண்ணேந் எந்மகந் பிள்ளநுக்கு நந்றாக விசையந்மங்கலத்தில் ஆளுடை
5. யார் திருநாகீஸ்வரமுடையார் பெரிய நாச்சியாற்குத் திருவாரமாந காக்கல்
6. ஊராணியோடொப்ப[து] . . . ருகழைஞ்சு பொன்னால் சாத்திநேன் ஊரா[ர்]* . . .
7. கைய்வசம் சந்தியாதீபம் ஒந்றுக்கு ஒரு பழதிரு[வ]ாகை ஒந்றுங் கைக்கொண்டோ

8. ம் யிக்கோயில் காணியுடைய ஶிவப்ராஹ்மணரில் மாடல கொத்ரத்து உ

9. டையாந் அவிநாசியும் உடையாந் வேதநும் மாடலகொத்ரத்துத் தே

10. ற்றி அப்பனும் ஆதைரய கொத்ரத்து ஆளவந்த மாணிக்கநும் ஆளவந்த பிழை

11. பொறுத்தாநும் குடங்கொ[ண்]டு கோயில் புகுவார் சந்திர[ா]தித்த வரை மக்கள் மக்கள் விளக்கொ .

12. . . . போமாகவும் [இ]த்தன்மம் பந்மாஹேஶ்வரிரக்ஷை

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1177/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 3 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1268 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 564/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 21 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் முன்மண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : நித்தசோழ வளநாட்டுக் கிழாலூர்க் கூற்றம் மாத்தூர் வியாபாரி மலரியூருடையான் அறிவுடையான் தில்லைநாயகன் சந்தியா தீபம் வைக்க ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்[டி]ய தேவற்கு யாண்டு மூன்றாவது அப்பிசி மாத முதல் நித்த சோழவள நாட்டுக் கிழா[லூ]ர்க் கூற்றம்
2. மாத்தூரில் யிருக்கும் வியாபாரிகளில் மலரி[யூ]ருடையான் அறிவுடையான் தில்லைநாயகனேன் விசையமங்கலத்
3. து ஆளுடைய[ா]ர் திருநாகீஸ்வரமுடையாற்கு வைத்த சந்தியா தீபமொன்றுக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாை
4. க அச்சொன்றுங் கைக்கொண்டோமிக் கோயிற் காணியுடைய ஶிவப்ராஹ்[ண*]ன் மாடலகோத்ரத்து உடையான் வேத
5. னாயகபட்டனும் ஆத்ரேய கோத்ரத்து ஆளவந்தி பிழைபொறுத்[தா]நும் யிவி[ள]க்கொன்றும் சந்த்ராதித்தவரை யெரிப்போமா[னோம்]

# த.நா.அ. தொல்லியல் துறை  தொடர் எண் :- 1178/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 16 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1301 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 565/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 22 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் முன்மண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலம் படைத்தலை வேளாளரில் நம்பி விளக்கு வைக்க நூற்று இருபது பணம் மூலப் பொருளாக வைத்தார்.

## கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸுந்தரபாண்[டி]ய தேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற . . . ௰௬ வது தைம் மாதம் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளாழந் படைத்தலைகளில் [ந]ம்பி உலகுடையானேன் விசையமங்கலமான ஆ[வ]னி
2. [பு]த்தூரில் நாயனார் விக்ரமசோழீஸ்வரமுடையாற்கு வைத்த திரு . . . றுக்கு ஒடுக்கிந பணம் நூற்றிருபதுங் கைக்கொண்டோமிக் கோயில் காணியுடைய சிவப்ராஹ்மணரில் கௌசிக கோத்ரத்து [மு]தல் உத்த
3. [பூ]பதினாயகனுள்ளட்டாரும் காஸ்யப கோத்ரத்து பிறைசூடி அப்ப . . . க்ரவித்தனுள்ளிட்டாரும் மாடலகோத்ரத்து பிள்ளையாழ்வி வாழவந்தானுங் குடங்கொண்டுகோயில் புகுவான் சந்த்ராதித்யவரை எரிப்பதாக இது
4. பன்மாஹேஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை　　　　தொடர் எண் :- 1179/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 5 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1270 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 566/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 23 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் முன்மண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலம் படைத்தலை வேளாளர்களில் நேரிய மூவேந்தவேளான் அவினாசி எண்பவர் சந்தியா தீபம் ஒன்றுக்கு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு அஞ்ச[ா]வது அற்பசித் திங்கள் முதல் கு
2. றுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் நேரிய மூவேந்தவேளான்
3. அவினாசியேன் ஆளுடையார் திருனாகீஸ்வரமுடை[ட]யாற்குச் சந்தியா தீபம் ஒன்றுக்
4. கு ஒடுக்கிந அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகையொ[ன்]றும் கைக் கொண்டோமிக்கோ
5. [யில்] கா[ணி]யுடைய சிவப்ராஹ்மணன் ஆத்ரேய கோத்ரத்து ஆளவந்த பிழைபொறுத்தா
6. னுமாடல கோத்ரத்து உடையான் வேதனாயக பட்டனும் இவ்விருவர் குட
7. ங்கொ[ண்]டு கோயில் புகுவான் சந்திராதித்த வரை விளக்கொன்று எரிப்ப
8. தாக இத்தன்மம் பன்மாஹேஸ்வர ரக்ஷை

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1180/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 3 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1268 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 567/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 24 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் முன்மண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலம் படைத்தலை வேளாளர் நம்பி என்பவரின் மனைவி பிள்ளை பாவை பிள்ளையம்மை சந்தியா தீபம் ஒன்றுக்கு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. [ஸ்வஸ்திஸ்ரீ] வீரபாண்டிய தேவற்கு யாண்டு மூன்றாவது மார்கழி [மாத]ம் குறுப்பு நாட்டு விசையன்மங்கலத்து
2. வெள்ளாளன் படைத்தலைகளில் நம்பி மனைக்கிழத்திபிள்ளை பாவை பிள்ளையம்மையேன் ஆளுடையார்
3. திருநாகீ*ஸ்வர*முடையாற்கு வைத்த [ச]ந்தியா தீபமொன்றுக்கு [ஒ]டுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை ஒ
4. ன்றுங் கைக்கொண்டோமிக் கோயிற்காணி உடைய சிவ[*ப்ரா*]ஹ்மணரில் ஆத்ரயகோத்ரத்து ஆளவந்த பிழை
5. பொறுத்தானும் மாடல*கோத்ர*த்து உடையான் வேதநாயகபட்டநும் குடங்கொண்டு கோயில்பு
6. [குவார்*] இது சந்திராதித்தவரை செல்வதாக இது பன்மாஹே*ஸ்வர ரக்ஷை*

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1181/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 4 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1172 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 568/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 25 |
| அரசன் | : | திரிபுவன வீரதேவன் வீரசோழன் III | | | |

இடம் : நாகீசுவரர் கோயில் முன்மண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : நாகீசுவரமுடையார்க்கு நித்தியப்படி கறியமுதுக்காக விசயமங்கலம் படைத்தலை வேளாளரில் தேவன் கூத்தப்பெருமாளும் தேவன் பராக்கிரமன் ஓர் அச்சு 4 பணமும், படைத்தலை வேளாளரில் நல்லிசையாளன் மகள் அஞ்சாதான் மனைவியுமான நம்பியம்மை ஓர் அச்சு 4 பணமும் காங்கயம் வியாபாரி திருநாகீசுவரமுடையான் ஓர் அச்சு 4 பணம் ஆக 4¼ அச்சு அளித்தனர்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ *திரிபு*வனவீரதேவற்கு யாண்டு நாலாவது குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளா
2. ழன் படைத்தலைகளில் [தே]வன் கூத்தப்பெருமாளும் தேவன் பராக்கிரநும் அச்சொன்றும் பணநாலும் மே .
3. ற்படியூரில் வெள்ளாழன் படைத்தலைகளில் அஞ்சாதான் மனைகிழத்தி நல்லிசையாளன் மக .
4. ள்ளைம்பியம்மை யொடுக்கின அச்சொன்றும் பணநாலும் காங்கயனாட்டுக் காங்கயத்திருக்கும் வி .
5. யாபாரி நம்பி திருநா[கீ] . . . டயான் ஒடுக்கின அச்சொன்றும் [பணநா]லும் ஆக அச்சு நாலே காலும் இவ்

6. வூர் ஆளுடையார் திருநாகீ[ஶ்வர]முடையாற்கு நித்தப்படிக் கறியமு[து]க்கு உரியக் கணபின் கறியமுதுமி

7. தற்க்கு வேண்டும் விஞ்சனாதி . . . டுச் செலுத்து . . . . . . காணி உடைய சிவப்ராஹ்

8. ணன் சூத்ரய மொத்ரத்தில் . . . த்ர . . . த்து உடையார்

9. வேதநாயக பட்டநும் . . . செலுத்து . . . [புகுவார்] இத்தன்மம்

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1182/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 15 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | சகம் 1202 கி.பி. 1280 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 569/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | தெ.இ.கோ.சா.I, 267 |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப்பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 26 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : நாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டப வடக்குச் சுவர்.

குறிப்புரை : இது வீரபாண்டியன் அதிகாரிகள் மூலம் விசயமங்கலம் வணிகர்கட்கும் ஊரார்கட்கும் அளித்த ஓலை, விசயமங்கலம் வாகைப்புத்தூரில் வடக்கு வாசி வாகைக்குளம் நெடுநாளாக பாழ்பட்டுக் கிடந்தது. இதனை மீண்டும் வெட்டி நாகீசுவரமுடையார் திருக்காமக்கோட்ட தேவதானமாக அளிக்க ஆணையிடப்பட்டது.

**கல்வெட்டு :**

1. [ஸ்வஸ்திஸ்ரீ] திரிபுவனசக்கரவத்தி கோனேரிமைகொண்டான் ஸ்ரீவீரபாண்டிய
2. தேவனேன் யெமக்குச் செல்லாநின்ற யாண்டு பதினஞ்ச[ா]வது சகரை யாண்டு ஆ
3. [யிர]த்திரு [நூ]ற்றிரண்டு . . . முதல் குறுப்பு நாட்டு விசையன்மங்கலத்து [வணி]
4. கரும் ஊரார்களுக்கும் தங்களூரில் வாகைப்புத்தூரில் வடக்கு வாசியில் வாகைக்குளம் நெடுனா[ள்]ப
5. ாழ்பட்டுக்கிடக்கி[ற]தாகக் கேட்டோமிக்குளம் தங்களூர் நாயனார் திருநாகீஸ்வரமுடையார் திரு
6. க்காமக்கோட்டத்தாளுடைய னாச்சியாற்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட வெஞ்

7. சனத்துக்கும் பலபடி நிமன்தத்துக்கும் யிக்குளம் வீரபாண்டியப் பேரேரி என்
8. [று] வெட்டி யிக்குளமமும் யிக்குளக்கீழ் நிலமும் நீர்ரேறின இடமெல்லாம் யிறையிலி தேவ
9. தானமாக [வி]ற்று . . . க்கி முன்றத்து . . . ருத்தி . . . ஒன்று வாரிய . . . போதுவார் ச . . .
10. ள்ள அழிவு சோர்வு தாங்களே செய்வர்களாக இப்படி சந்திராதித்தவற் செல்வதாக கல்லிலு
11. ம் செம்பிலும் வெட்டியனுபவிக்க கடவதாக நம் ஓலை குடுத்தோம் இப்படி இவை . . நன்தமரானா
12. ர் பாற்ப்படுத்துக் குடுக்க இது *ஸஹாஸ்ரீபஷூர ஶஹெ்* இவை காலிங்கராயன் எழுத்து உ
13. இவை விழுப்பாதராயன் எழுத்து உ இவை கச்சியராயன் எழுத்து உ இத்தன்மம் யிறங்கல் பண்ணு
14. வான் வழிவழி . . . . . வான் உ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 3+1 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1259 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 570/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 27 |
| அரசன் | : | இரண்டாம் விக்கிரமசோழன் | | | |

இடம் : நாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டப கிழக்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலம் பெருமாள் மாலையுடையார் என்பவர் சந்தியா தீபம் ஒன்றுக்கு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்ரமசோழ தேவற்கு யாண்டு மூன்றாவத[ற்] கெதிராவது வைகாசி மாத முதல் குறுப்[பு]
2. நாட்டு விசையமங்கலத்து பெருமாள் மாலை . . . உடையாந் . . . [திரு]நாகீஸ்வரமுடையா
3. ர்க்கு வைத்த சந்தியா தீபமொன்றுக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை யொன்றுங் கைக்கொண்டோம்
4. கோயிற் காணியுடைய சிவப்பிராமணன் ஆத்ரேய கோத்ரத்து ஆளவந்தி பிழைபொறுத்தா
5. . . . . [ட]ல கோத்ரத்து உடையான் வேதனாயக பட்டனும் குடங்கொண்டு கோயில்
6. [புகுவாரே] சந்திராதித்தவரை யெரிப்போமாகவும் இத் . . . ன் மாஹேஸ்வர ரக்ஷை

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : 13 |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1286 |
| ஊர் | : விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 571/1905 |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தமிழ் | | |
| அரசு | : கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : 28 |
| அரசன் | : மூன்றாம் விக்கிரமசோழன் | | |

இடம் : நாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டப கிழக்குச் சுவர்.

குறிப்புரை : காங்கய நாட்டுப் பட்டாலி வியாபாரி பெரியான் ஆண்டையான் சந்தியா தீபம் ஒன்றுக்கு ஓர் அச்சுக் கொடையாகக் கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்ரமசோழ தேவற்கு யாண்டு பதின்மூன்றாவது . . . மாதத்துக் காங்கய [நாட்டு]
2. ப் பட்டாலியில் வியாபாரி பெரியானாண்டான் விடியர் . . [லவா]னேன் விசையமங்க[ல]த்து
3. ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையாற்கு சந்தியாதீபமொன்றுக்கு ஒடுக்கின அச்சொன்று இவ்வச்சொ
4. ன்றுங் கைக் கொண்டோமிக் கோயிற் காணியுடைய ஶிவப்ரா . . . ன் ஆசூய ஜெரீ[சூ]த்த ஆளவந்தி பிழை
5. பொறுத்தானு மாடலஜொசூத்த உடையான் வேதநாயக . . . .
6. ரயெரிப்போமாகவும் குடங்கொண்டு கோயில் புகுவான் எரிப்ப . . . பஜாஜெஸ்ஹ[ர ர]க்ஷை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 4 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி. 1172 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 572/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 29 |
| அரசன் | : | திரிபுவனவீரதேவன் மூன்றாம் வீரசோழன் | | | |

இடம் : நாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டப கிழக்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலத்துப் பெருமாள் படைகளில் கெசத்தபடையினர் சந்தியா தீபம் இரண்டுக்கு இரண்டு அச்சுக் கொடுத்தனர்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன வீரதேவற்கு யாண்டு நாலாவது காத்திகை மாதம் குறுப்புனாட்டு விசையம[ங்கலத்]
2. து பெருமாள் [பை]டகளில் கெசத்தபடை[யா]ன் விசையமங்கலத்து ஆளுடையார் திருநாகீஸ்வரமு
3. டையாற்கு சன்தியாதீபம் யிரண்டுக்கு ஒடுக்கின அச்சு இரண்டு [யீவச்சிரண்டுங்] . . .
4. டோம் இக்கோயில் காணிஉடைய சிவப்பிராமணந் ஆதூய[மொ]தூத்து ஆளவன் . . .
5. [தா]னும் மாடல மொதூத்து உடையான் வேதனாயகபட்டனும் இவ்வ . . .
6. ரிப்போமாகவும் குடங்கொண்டு கோயில் புகுவான் எரிப்பதாகவும் இத்தன்மம் பன்மாஹேஸ்வர ரக்ஷை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | சகம் 1022 கி.பி. 1100 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 573/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 30 |
| அரசன் | : | கோ அபிமான இராசதிராசன் | | | |

இடம் : நாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டப தெற்குச் சுவர்.

குறிப்புரை : கோயிலில் நந்தா விளக்கு வைத்த விபரம் தெரிகிறது. கல்வெட்டின் பிற்பகுதி அழிந்துவிட்டது.

## கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [கோஅபி]மான ஸ்ரீராஜ[ாதி]ராஜனேன் எமக்குச் செல்லானின்ற யாண்டு பதி . . . வதற்கெதிராமி ரண்டு ஶகரையாண்
2. டு ஆயிரத்திருபத்திரண்டு குறுப்பு னா[ட்]டு விசையமங்கலத்து ஆளுடையார் திருநாகீ[ஸ்வ]ரமுடையாற்குத் திருநந்தா விளக்கு வைத்த விளக்கொன் . . .

## த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 1186/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 574/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச்சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 31 |
| அரசன் | : | இராசதிராசன் | | | |

இடம் : நாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டப தெற்குச் சுவர்.

குறிப்புரை : திருநாகீசுவரமுடையாற்கு கறிஅமுது படிக்காக மன்னன் இராசாதிராசன் நிலம் கொடையளித்துள்ளான்.

### கல்வெட்டு :

1. கோ[அபிமான] . . . சோழ *ஸ்ரீஇராஜா*[*யிராஜ*னே]ன் [நமக்கு] செல்லா நின்ற யாண்[டு]
2. . . . ண்டு [குறுப்பு நாட்டு] . . .
3. ங்கலத்து ஆளுடையார் திருநாகீ*ஸ்வர*முடையாற்குக் கறிஅமுது படிக்கு நாங்
4. [கள்] முடவந்தை யிறையிலி ஏகபோகமுற்றூட்டும் விட்டுக்குடுத்தோம் இரா
5. *ஜாயிராஜ*னேன் கூத்தற்கு சந்திராதித்தவரை செல்வதாக [ந]ந்தமரானார் பாற்[ப]டு
6. த்துக் குடுத்த இது . [*ஸ்ரீ*]ஹேம*ஸ்வரர*க்ஷை||உ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 19 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1284 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 575/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப்பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 32 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : நாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டப தெற்குச் சுவர்.

குறிப்புரை : தேவரடியாள் சடைமேலிருந்தாள் என்பவள் விளக்கு எரிக்க ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தாள்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபா[ண்டிய] தேவற்கு யாண்டு ய[கூ]வது . . . முத . . . குறுப்பு . . .
2. தேவரடியாள் சடைமேலிருந்தாளேன் ஆளுடை[டயார்] திருனாகீ . . . வைத்த . . .
3. டுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்றுங் கைக்கொண்டோ மிக்கோயில் கா . . .
4. மாடல கொத்தப் பிள்ளையாழ்வி வாழவந்தானும் ஆதையகொத்த சங்கரந் [த]ம்பி(யி) . . .
5. [து] பன்மாகே[ஹஸ்]ர . . .

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1188/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 576/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 33 |
| அரசன் | : | *ராஜாயிராஜ* வீரநாராயணன் | | | |

இடம் : நாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டப தெற்குச் சுவர்.

குறிப்புரை : கோயிலில் உச்சிச் சந்தி திருஅமுதுக்காக பரகேசரியாலும், வீரநாரயணனாலும் அளந்து 37 கலம் தூணிப்பதக்குக் கொடுக்கப்பட்டது. அதில் 18 கலம் இருதூணி (பாதி) வீரசோழ வளநாட்டு உத்தமசோழச் சதுர்வேதிமங்கலத்து இறையிலே கொடுக்கப்பட்டது. ''பரகேசரி'' ''வீரநாராயணன்'' கொங்குச் சோழர்கால முகத்தலளவைகளின் பெயர்கள்.

## கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ ராஜாயிராஜ* வீரநாரா . . .
2. . . . . . .
3. . . . கலத்து ஆளுடையார் திருநாகீ*ஸ்வர*முடையாற்க்கு உச்சி சந்தி . . .
4. . . . பரகேசரியால் நாநாழிக்குங்குறுணியிரு நாழி நெ[ல்லுக்கு] ஆண்டொன்றுக்கு வீர
5. நாராயணநால் முப்பத்தேழுகலனே தூணிப்பதக்கும் வீரசோழவள நாட்டுத்தம
6. சோழ சதுர்வேதிமங்கலத்து இறையிலே கார்பதினெண் கலனே யிரு தூணிக்கு
7. . . . ன் கலனே யிரு தூணிக்கு யாண்
8. . . . . வரை செல்வதாக . . . பாற்படுத்துக் குடுக்க *வைராஹேஸ்வர ரக்ஷை*

## த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 1189/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 8 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 577/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 34 |
| அரசன் | : | குலோத்துங்கன் | | | |

இடம் : நாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டபம் தெற்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலம் வேளாளர்களில் சாத்துவாய் குலக் காங்கயதரையன் மனைவி ஆண்டியான மங்கையர்க்கரசி பெரிய நாச்சியாரை அதாவது இக்கோயில் அம்மனை எழுந்தருளுவித்து, திருக்கலியாண உற்சவம் எடுத்து நாள்தோறும் அமுதுபடி இருநாழி அரிசிக்கும், அடைக்காயமுது ஆறுக்கும், இலையமுது பதினைந்துக்கும் ஆண்டுக்கு இரு பரிவட்டத்துக்கும் விசயமங்கலம் ஊரார் வசம் 19 அச்சு மூலப்பொருளாக வைத்தார்.

### கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு எட்டாவது குறுப்பு நாட்டு விசைய மங்கல
2. [த்து] வெள்ளாள . . . சாத்துவாயிகளில் [காங்கய]தரையன் மனைக்கிழத்தியாண்
3. டியான மங்கையற்கரைசியேன் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையாற்குப் பெரிய நாச்சியா
4. ரை எழுந்தருளுவித்துத் திருக்கல்லியாணம் பண்ணி நாச்சியாற்கமுதுபடி நித்த மிருநாழியரிசிக்கும் அடைக்

5. காயமுதாறுக்கும் இலையமுது பதினைஞ்சுக்குஞ் சந்தியாதீப மிரண்டுக்[கும் ஆண்டொன்றுக்கிரண்டு பரி . .

6. சட்டத்துக்கும் விசையமங்கலத்து ஊரார் வசமொடுக்கின அச்சு[ப் ப]த்தொன்பது இத்தன்மஞ் *சஞ்ரக்ஷிதஞ*

7. வரை உபையம் ஊரார் செலுத்துவதாக [இது பன்மா]ஹேஶ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 1190/2003

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : 7 சகம் 1185 |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : கி.பி. 1263 |
| ஊர் | : விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 578/1905 |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தமிழ் | | |
| அரசு | : கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : 35 |
| அரசன் | : இரண்டாம் விக்கிரமசோழன் | | |
| இடம் | : நாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டபம் தெற்குச் சுவர். | | |

குறிப்புரை : பரகேசரி விக்கிரமசோழனின் (1255-65) ஏழாம் ஆட்சியாண்டில் நாகேசுவரமுடையார் கோயில் முதற்பிரகாரமண்டபம் (முதல் திருச்சுற்று மண்டபம்) இறக்கித் திருப்பணி செய்யப்பட்டது. மண்டபத் திருப்பணி முடிந்ததும் அங்கிருந்து கல்வெட்டுகள் படி எடுக்கப்பெற்று மீண்டும் மண்டபத்தில் வெட்டப்பட்டன. ஏழு கல்வெட்டுகள் மீண்டும் வெட்டப்பட்டுள்ளன. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை. இன்னும் சில, பழைய திருப்பணியின்போது கல்வெட்டுகள் அழிந்திருக்கக்கூடும்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்ரமசோழ தே[வ]ற்கு யாண்டு ஏழாவது [சக]ரை யாண்டு ஆயிரத்தொ[ருநூ]
2. [ற்]றெண்பத்தஞ்சு குறுப்பு நாட்டு விசைய மங்கலத்து ஆளுடையார் திருநாகீஸ்வரமு . . .
3. யார் கோயில் முதற் பிரகார மண்டபமிறக்கித் திருப்பணி செய்யக் கொண்ட
4. படியால் மண்டபஞ் செய்து முன்னாள் வைத்த சந்தியாதீபங்கள் பழங்கல் வெட்[டி]
5. ன படியெடுத்து இம்மண்ட[பத்]தில் வெட்டினபடியாவது ஸ்ரீகுலோத்துங்க சோழ [தே]
6. வற்கு யாண்டு பதினாலாவது விசையமங்கலத்து வெள்ளாளந் படைத்தலைகளில்

7. மாதேவன் ஆளுடையார் திருநாகீஶ்வரமுடையாற்கு வைத்த சந்தியா தீபமொன்றுக் கொடுக்கி

8. ன புதுச்சலாகை அச்சொன்றும் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யா[ண்டு பதினாலா]வது விை

9. சயமங்கலத்துக் கைக்கோளன் மகிழன் தேவன் ஆளுடையார் திருநாகீஶ்வ ரமுடையாற்கு ை

10. வத்த சந்தியா தீபமொன்றுக் கொடுக்கின புதுச்சலாகை அச்சொன்றும் ஸ்ரீவீர ராஜே

11. ந்த்ரதேவற்கு யாண்டு இரண்டாவது [வி]சையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் மா[ணி]

12. க்க தேவன் மனிச்சால் உடையான் பெ[ா]ற்காளி பிள்ளை ஆளுடையார் திருநாகீஶ்வரமுடையாற்கு வைத்த

13. சந்தியா தீபமொன்றுக் கொடுக்கின புதுச்சலாகையச்சொ[ன்]றும் . . . *ரா*ஜேந்த்ரதெவற்கு யாண்டிர

14. ண்டாவதுக்கெதிராவது விசையமங்கலத்துப் பட்டாலி வேட்டுவன் சொக்கஞான சம்பந்தன்

15. ஆளுடையார் திருநாகீஶ்வரமுடையாற்கு வைத்த சந்தியா தீபமொன்றுக் கொடுக்கின பழஞ்சல

16. ாகை அச்சொன்றும் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவற்கு யாண்டு நாலாவது விசையமங்கலத்து வெள்ள

17. ளன் படைத்தலைகளில் திருவானைக்காவள் விச்சா . . .

18. னைக்கிழத்தி ஆளுடையார் திருநாகீஶ்வரமுடையாற்கு

19. வைத்த சந்தியாதீபமொன்றுக் கொடுக்கின பழஞ்[ச]

20. லாகை அச்சொன்றும் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவற்கு

21. ண்டு பன்னிரண்டாவது விசையமங்கலத்து ஒன்ற[ன்] ே[வ]ட்டுவன் . . .

22. இவன் மகன் சிற . . . . . ஆளுடையார் திருநாகீஶ்வ

23. ர முடையாற்கு வைத்த சந்தியா தீபமொன்றுக் கொடுக்கிந

24. பழஞ்சலாகை அச்சொன்றும் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவற்கு யா

25. ண்டு பதினேழாவது விசையன் மங்கலத்து வெள்ளாளன் பா

26. தகளில் நியாயவல்ல[வ] சோழ விழுப்பரையனாயன் எதிரிலிசோ

27. ழன் வைத்த சந்தியா தீபமொன்றுக் கொடுக்கின பழஞ்சலா . . .

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1191/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 13 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1162 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 579/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 36 |
| அரசன் | : | முதலாம் குலோத்துங்க சோழன் | | | |
| இடம் | : | நாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டபம் தெற்குச் சுவர். | | | |

குறிப்புரை : பெருமாள் சாமந்தரில் குலோத்துங்க சோழ விக்கிரமாதித்த தேவன் திருப்புதியதுக்குப் பழஞ்சலாகை அச்சு இரண்டும் சந்தியா தீபத்துக்குப் புதுச்சலாகை அச்சு ஒன்றும் கொடையாகக் கொடுத்தார். “பெருமாள்” என்பது அரசரைக் குறிக்கும் சொல்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்[க சே]சாழ தேவற்கு யாண்டு பதின்மூன்றாவது பெருமாள் சாமந்த[ரி]ல் குலோ
2. த்துங்கசோழ விக்ரமாதித்த தேவனேன் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து ஆளுடையார் திருந[ா]
3. கீஸ்வ ரமுடையாற்குத் திருபுதியிதுக்கு ஒடுக்கினவச்சுப் பழஞ்சலாகை யிரண்டும் ச[ந்]தியாதீப
4. மொன்றுக்கொடுக்கின புதுச்சலாகையச்சொன்றுங் கைக்கொண்டோமிக் கோயிற்காணி
5. [யுடைய] சிவப்ராஹ்மணன் சூர்யதேவமொத்ரத்து தக்ஷிணாமூர்த்தி குறுப்பு நாட்டு பட்டனு மாணிக்க

6. பட்டனு மாடஷொதத்த் தெற்றியப்பனுமிம்முவோம் உபையங் காணங்கலனெல்லளந்து மஞ்ச

7. நாதிட்டபடிச் செலுத்துவோமாகவும் இது சஞாசிதவரைய் செலுத்துவிப் போமாகவுங்குட

8. ங்கொண்டு கோயில் புகுவார் செலுத்துவுதாகவும் இது பஜாஹைஸ்லு ஸகெக்ஷ

## த.நா.அ. தொல்லியல் துறை        தொடர் எண் :- 1192/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 2+1 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1210 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 580/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 37 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டபம் தெற்குச் சுவர்.

குறிப்புரை : கூடூர் வேளாளர் பனங்காடைகுல கோவன் மனிச்சரில் உண்ணாடி சந்தியா தீப விளக்கு எரிக்க ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீர[ரா]ஜேஷ்ரதேவற்கு யாண்டு இரண்டாவதுக்கெதி[ரா]வது கூடூரில் வெள்ளாளன் பனைங்காடகளில் கோ
2. வன் மனிச்சரில் . . உண்ணாடியேன் விசையமங்கலத்து ஆளுடையார் திருநாகீஸ்வ ரமுடையாற்குச் சந்தியா தீபம் ஒன்
3. றுக்கு ஒடுக்கின அ[ச்சு] ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சொன்றுங் கைக்கொண்டோமிக் கோயில் காணியுடைய சிவப்ராஹ்மணரில் மா
4. உடையான் வேதனாயக பட்டனும் ஆசார்ய போத்த ஆளவந்தி பிழை பொறுத்தானு மாடல போத்த அப்பந்பிள்ளை[கு]
5. டங்கொண்டு கோயில் புகுவாந் சந்த்ராதித்த(வரை) எரிப்பதாக இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1192A/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 8 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 581/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 38 |
| அரசன் | : | - | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டபம் தெற்குச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலத்து வேளாளர் ஒருவருடைய மனைவி பொதுவன்பாவை என்பவர் ஒரு சந்தியா தீபத்துக்காக ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார். இறுதிப்பகுதி சிதைந்துள்ளது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ . . . தேவற்கு யாண்டு எட்டாவது தை
2. திங்கள் [மு]தல் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளா
3. ளன் . . . க்கன் மனைக்கிழத்தி பொதுவன்பா
4. வையேன் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையாற்குச் சந்தியா
5. ாதீபம் ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலா
6. கை[ஒ]ன்றும் கைக் கொண்டோம் இக்கோயிற்காணியு
7. டைய சிவப்ராஹ்மணன் காடமோதத்த உடையா
8. ன்வேத நாயக பட்டனும் ஆத்ரேய மோதத்த ஆளவந் . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 582/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | தெ.இ.கோ.சா.I, 270 |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 39 |
| அரசன் | : | திரிபுவனவீரதேவன் (வீரசோழன் III) | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டபம் தெற்குச் சுவர்.

குறிப்புரை : வடகொங்கு நாட்டில் பல நாடுகளைச் சேர்ந்த சிவபிராமணக் காணியாளர்கட்கும் தானத்தார்களுக்கும், திருப்பாண்டிக் கொடுமுடி போன்ற ஊர்களின் தானத்தார்களுக்கும் அரசன் நேரடியாக அளித்த ஓலை.

**கல்வெட்டு :**

1. *ஸ்ரீவபரகேஸரி ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்தி* கோனேரின்மை கொண்டாந் வடகொ
2. ங்கில் நரையனூர் னாட்டு அடிக்கிழத்தளமாந *ராஜராஜ*புரமும் பொங்கலூ[ர்]க்கா னா
3. டும் தென்கரை நாடு அரைய நாடும் தலையூர் னாடும் வடகரை மணல் னாடும் . . .
4. னாடும் கிழங்கனாடும் வெங்கல நாடும் தட்டையூர்னாடு மிடைப்புழுதி னாடும் கா[ங்]க
5. ய னாடும் வீரசோழ வளநாடும் வலுப்புக்கா னாடும் குறுப்பு நாடும் வடபரிசார நாடும் காஞ்சி
6. க்கூவனாடும் பூந்துறைனாடும் கீழ்ப்பா நாடும் வடகரை னாடும் இன்னாடுகளில்
7. *ஸிவப்ராஹ்மண*க் காணியாள(ர்)க்கும் தாநத்தாற்கும் திருப்பாண்டிக்கொடு முடித்தாந தத் . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 11 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1284 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 583/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 40 |
| அரசன் | : | மூன்றாம் விக்கிரமசோழன் | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டபம் தெற்குச் சுவர்.

குறிப்புரை : இளம்மழையில் வேளாளரில் காடை குல அவினாசி என்பவரின் மனைவி தேவன் சொக்கி என்பவர் சந்தியாதீப விளக்கு வைக்க ஓர் அச்சுக் கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்ரமசோழ தேவற்கு யாண்டு பதின்ஒன்றாவது . . .
2. நாட்டு இளம்மழையில் வெள்ளாளழரில் காடகளில் அவினாசி தேவன்ம
3. னை கிழத்தி தேவன் சொக்கியேன் விசையமங்கலத்து ஆளுடையார் திருநாகீஸ்வ
4. ரமுடையாற்குச் சந்தியாதீபம் விளக்கொன்றுக்கு ஒடுக்கின ஸ்ரீயக்கி [பழஞ் சலா]
5. கை அச்சு ஒன்றுங் கைய்க் கொண்டோம் . . . காணி உடைய ஶிவ . . .
6. ஆதித்ய மோதக ஆளவந்திபிழைபொறுத்தானும் மா[ட]ல மே[ாதத்]து . . .
7. ப்பட்டனும் இவ்விளக்கொன்றும் சந்திராதித்தவரை . . .
8. [கா] கோயில் புகுவான் எரிப்பானாகவும் இத்தன்மம் பன் மாஹே. . . .

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1195/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 14 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1221 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 584/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 41 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் முன்மண்டபம் மேற்குச் சுவர் வாயில் இடதுபுறம்.

குறிப்புரை : விசயமங்கலம் வேளாளரில் சாத்துப்படி குலஉடையான் தேவனான சிவ கல்யாண நம்பி என்பவர் சிவராத்திரி நான்கு கால வழிபாட்டுக்கும் எல்லாப் பொருள்களுக்கும் கொடுத்தது மூன்று கழஞ்சு, நான்கு சந்தி அமுதுபடிக்குத் தூணிப் பதக்கும், 90 விளக்குகளும் கொடையாகக் கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பற்மரான திரிபுவனச்சக்கிரவத்திகள் ஸ்ரீ[வீ]ரராஜே
2. ந்திரதேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லானின்ற திருநல்லியாண்டு பதினாலாவது
3. குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளாள சாத்துபாடிகளில் உடையான் தேவனா
4. ன சிவகல்லியாண நம்பியேன் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையாற்குச் சிவராத்திரிக்கு
5. வேண்டுவதுக்குக் குடுத்த பொருள் முக்கழஞ்சுக்கும் அமுதுபடி நாலு சந்திக்கும் தூணிப்ப
6. தக்கும் திருவிளக்குத் தொண்ணூறும் இதுக்கு வேண்டும் விஞ்சநாதிகள் . . . . அட்டுவதாக

7. கைக்கொண்டோம் யிக்கோயிற்காணியுடைய ஶிவப்ராஹ்மணரில் ஆத்ரேய கோத்ரத்து ஊஷி

8. ணாமூத்தி யாளவந்தியான குறுப்புனாட்டுப்பட்டனும் மாடல தெற்றியப் பட்டநும் மாட

9. லகோத்ரத்து குநிசாரநுடையானான நாற்பத்தெண்ணாயிரச் சக்கரவத்தியும் இவ்வனைவோம்

10. இத்தன்மம் சந்த்ராதித்யவரை செலுத்துவதாக இதுபன்மாஹேஶ்வர ரக்ஷை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 14 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1221 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 585/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 42 |
| அரசன் | : | - | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் அம்மன் சன்னதி வடபுறச் சுவர்.

குறிப்புரை : மாதேவர் கோயில், திருமுற்றம் பிள்ளையார் கோயில், பிடாரியார் கோயில், மற்றுமுள்ள கோயில்களிலும் காணியுடைய குறுப்பு நாட்டுச் சிவபிராமணர்கள் இனிமேல் வடபரிசார நாட்டில் உள்ள முறைப்படியே உவச்சர்களுக்கு நான்கில் ஒரு பாகம் கொடுத்து மீதி மூன்று பாகத்தை மட்டும் சிவபிராமணர் கொள்ளவேண்டும் என சண்டிகேசுவரர் பெயரில் ஓலை வழங்கப்பட்டது. தொடக்கத்தில் சண்டிகேசுவரர் ஓலையைக் குறிக்கும் வெண்பா இடம்பெற்றுள்ளது.

**கல்வெட்டு :**

1. ஸ்ரீமாஹேச்வரன் ஓலை ஸாகரஞ் சூழவைய்யத்துக் கண்டிச்வரன் கரும[மா]ராக பண்டே அறஞ்சேதான் சேதான் அறங்காத்தன்
2. பாதந்திறம்பாமற் சென்னிமேல் வைத்து அருளால் ஆதிசண்டேச்வரன் ஆதேசம் நம்பட்டர்கள் குறுப்புநாட்டு சிவப்பிராம
3. ணற்கும் திருமுற்றத்தில் நம்பிமாருக்கும் நம் ஓலை குடுத்தபடியாவது தங்கள் நாட்டில் மாதேவர் கோயில் திருமுற்றம்பி
4. ள்ளையார் கோயில் பிடாரியார் கோயில் மற்றுமுள்ள ஸ்ரீகோயில்களிலும் வடபரிசார நாட்டு மரியாதிப்படியே

5. உடகச்சற்கு நா[ல]த்தொரு கூறு குடுத்து முக்கூறுந்தாங்கள் அனுபோகிப் பார்களாக இது செம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக்

6. கொண்டு [சந்தி]ராதித்தவரை செல்வதாக நம் ஓலை குடுத்தோம் [இ]ப்படிக்கு ஆதி[ச]ண்டே*ஶ்வ*ரன் ஸ்ரீ கணக்கன் எழுத்து இது [ப]*ன்மாஹேஶ்வர ர*[*க்ஷை*]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 9 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1274 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 586/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 43 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் அம்மன் சன்னதி வடபுறச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலத்து படைத்தலை வேளாளர்களில் தேவன்கூத்தப் பெருமாள் என்பவர் திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார்க்குச் சந்தியா தீபம் ஒன்று எரிக்க ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடை கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு ஒன்பதாவது காத்திகைத் தி[ங்கள்] முதலாகக் குறுப்பு னாட்டு விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளி[ல்] தேவன் கூத்தப்பெ
2. பருமாளேன் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையார் திருக்காமக்கோட்டத்தாளுடை நாச்சியாற்கு வைத்த சந்தியாதீப மெ[ா]ன்றுக் கொடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்ச[லா]கை அச்சொன்று
3. ங் கைக்கொண்டோமிக் கோயிற்காணியுடைய சிவப்ராஹ்மணரில் மாடல[ே]கோத்ரத்து உடையான் வேதனாயகபட்டனும் ஆத்ரேய கோத்ரத்து ஆளவந்தி பி[ழைபொ]றுத்தானும் குடங்கொண்டு கோயில்பு
4. குவோம் எரிப்பதாக இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1198/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 12 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1277 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 587/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 44 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் அம்மன் சன்னதி வடபுறச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலத்துத் தேவரடியாரில் மாணிக்கதேவர் அகமுடையார் பொன்னாச்சி என்பவர் திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார் திருக்கோயிலில் சந்தியா தீபம் வைக்க ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபா[ண்]டிய தேவற்கு யாண்டு பன்னி[ரண்ட]ாவது ஆவணித் திங்கள் முதலாக குறுப்பு னாட்டு விசையமங்கலத்துத் தேவரடியாரில் மாணிக்க தேவரகமுடையா[ர்][ெ]பான்னாச்சியேன் ஆளுடை
2. யார் திருநாகீஸ்வரமுடையார்(முடையார்) திருக்காமக்கோட்டத்தாளுடை னாச்சியாற்கு வைத்த சந்தியா தீபமொன்றுக் கொடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சொன்றும் ை
3. கக்கொண்டோ[மி]க் கோயிற் காணியுடைய சிவப்ராஹ்மணரில் மாடல கோத்ரத்து உடையான் வேதனாயக பட்டனும் ஆத்ரேய கோத்ரத்து ஆள வந்த பிழைபொறுத்த
4. ானும் குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தவரை எரிப்பதாக இது பன்மாஹேஸ்வர ரக்ஷை।

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1199/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | துந்துபி |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.14-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 588/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | தெ.இ.கோ.சா.I, 288 |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | போசளர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 45 |
| அரசன் | : | மூன்றாம் வீரவல்லாள தேவர் | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் அம்மன் சன்னதி தெற்குச் சுவர்.

குறிப்புரை : திருநாகீசுவரமுடையார்க்கு திருநாள்படி, பலபடி நிபந்தம், திருப்பணி ஆகியவற்றிக்காகக் குறப்பு நாட்டு ஆமூரான ராகுத்தராய நல்லூர் வருவாய் அனைத்தையும் குறுப்பு நாட்டவர் கொடையாக அளித்தனர்.

## கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீப்ரு[து] வீராஜ்ய சக்ரவர்த்தி ஹொய்சள ஸ்ரீவீரவல்லாள தேவர் ப்ருதிவிராஜ்யம் வண்ணியருளா நின்ற துந்துபி ஸம்வத்ஸரத்து பங்குனி மாதங் குறுப்புனாட்டு நாட்டவரோம் விசையமங்கலத்து ஆளுடையார் திருநாகீஸ்வரமுடைய நாய

2. னார்க்குத் திருநாட்படி பலபடி நிமந்தந் திருப்பணிக்கு எங்கள் நாட்டு ஆமூரான இராகுத்தராய நல்லூர் இன்னாயனாற்கு ஜெவதானமாக இட்டு இவ்வூர்க் கடமை எலவை ஒட்டச்சுக்காலுங் கலம் உப்பாயந் தெண்டவரி தண்ணீர்க்காணம் வேண்டுகோள் வினியோக

3. ந் தறியிறை தட்டார்ப் பாட்டம் ஈழம் புன்செய் மற்றும் எற்போர்ப்பட்டனவும் இவ்வூர் நான்கெல்லைக்குட்பட்ட புன்செயுங் குளமும், குளக்கீழ் வயலும், அனையும் அணைக்கீழ் வயலுங் கீழ்னோக்கிய கிநறும், மேனோக்கிய மரமும் இறையிலி முற்றூட்டாக உதகம்ப

4. பண்ணித்திருச்சூல ஸ்தாபநம் பண்ணிக்குடுத்தோங் குறுப்புனாட்டு நாட்டவரோம் [இத்]தன்மம் விலக்கனைத்தவன்வழிவழி ஏழெச்சமறு[வ]ான் இது பன்மாஹெஶ்வர ரக்ஷெ ஶ்ரீ ஸ்ரீ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 27 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1312 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 589/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 46 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் அம்மன் சன்னதி வடபுறச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலத்து வெண்மணி வேளாளர்களில் துணையந் ஆண்டாந் என்பவன் திருநாகிஸ்வரமுடைய திருக்காமக்கோட்ட ஆளுடைய நாச்சியாற்கு ஒரு நந்தா விளக்கெரிக்க 140 பணத்தினை இக்கோயிலில் உள்ள மூன்று சிவபிராமணர்களிடம் வழங்கியுள்ளான்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ ஊ . . . பாண்டிய தேவற்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லி யாண்டு இருபத்தேழாவது தைத்திங்கள் முதலாக குறுப்பு னாட்டு விசையமங்கலத்து ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையார் திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியாற்[கு] [வி]சையமங்கலத்து வெள்ளாளன்
2. வெண்மணிகளில் துணையந் ஆண்டானாந அம்பலப் பெருமாளேன் வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின பணம் நூற்று நாற்பதுங்கைக் கொண்டோமிக் கோயிற்காணி உடைய ஶிவஸ்ராஹ்மணரில் மாடல மோத்ரத்து வேதன் ஶிவஜ்ஞாநபண்டிதனு மாடலமோத்ர[த்து]ப் பிள்ளையாழ்வி வாழ வந்தானும் ஸூத்ரய
3. மோத்ரத்து சங்கரதினம்பி மாணிக்கனாயக பண்டிதனும் இம்மூவரோம் இவ்விளக்கு முட்டில்யிரட்டி எரிப்பதாகவும் இது மிகமுட்டில் தெண்டமிறுப்பதாகவும் இது சந்த்ராதித்யவரை குடங்கொண்டுகோயில்புகுவான் எரிப்பதாகவும் இது பன்மாஹேஶ்வர ரக்ஷை

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | சகாப்தம் 1265 |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1343 |
| ஊர் | : விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 590/1905 |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : தமிழ் | | | |
| அரசு | : - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 47 |
| அரசன் | : - | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் அம்மன் சன்னதி முன்மண்டப வடபுறச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலத்து ஊரும் ஊராளிகளும் பண்டாரத்தில் அளப்பனவற்றை என்றென்றும் நிறைந்த அளவாக அளக்க வேண்டும் என்று இறைவன் பெயரில் கல்வெட்டினர்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸகாப்தம் ௲௨௱௬௰ரு மேல் ஸ்வபாநு ஸம்வத்ஸரத்து ஐப்ப[சி] மாஸம் ரு தீ நாள் குறுப்பு நாட்டு
2. விசையமங்கலத்து ஊரும் ஊராளிகளோம் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையநாயநார் அருளிச் செயற்படி
3. நிறைத்து அளக்கக் கடவோம் ஆகவும் இந்த நிறைத்தளவு மக்கள் மக்கள் சந்த்ராதித்த வரை நடத்தக் கடவோம்
4. ஆகவும் இத்தன்மம் நடத்துமவர்கள் வம்ஸம் மேல் மேலுந்தழைப்பதாக பாஹஸ்த

## த.நா.அ. தொல்லியல் துறை                    தொடர் எண் :- 1202/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 27, தைத்திங்கள் |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1312 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 591/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 48 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் அம்மன் சன்னதி முன்மண்டப வடபுறச் சுவர்.

குறிப்புரை : விசயமங்கலத்து ஊரார் திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார் பண்டாரத்தில் நெல் விற்றுப் பெற்ற பணம் நூற்று நாற்பதை நந்தா விளக்கு எரிய மூலப் பொருளாக வைத்தனர்.

### கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* *ஸுந்தர* பாண்[டியதே]தவற்கு திருவெழுத்திட்டுச் செல்லா நி[ன்ற திரு] நல்லியாண்டு இருபத்தேழாவது தைத் திங்கள் முதல் குறுப்பு னாட்டு விசை[யன்]மங்கலத்தாளுடையார் திருனாகீ*ஸ்வர*முடையார் திருக்காமக் கோட்டத்தாளுடை னாச்சியார் ஸ்ரீபண்டாரத்தில் நெல் விற்று ஊரார் திருநந்தா விளக்கு ஒன்றுக்கு

2. ஒடுக்கின பணம் நூற்று [ந*]ாற்பதுங் கைக்கொண்டோமிக் கோயிற்காணியுடைய *ஸிவப்ராஹ்மண*ரில் மாடல *கோத்ர*த்து வேதன் *ஸிவஜ்ஞா*[நப]ண்டிதனு மாடல *கோத்ர*த்துப் பிள்ளையாழ்வி வாழவந்தானும் *ஸூத்ரய* *கோத்ர*த்து சங்காதி நம்பி மன்னியப்பனும் இம்மூவரும் இவ்விளக்கு முட்டில்படி

3. யிரட்டி எரிப்ப[தா*]கவும் இது மிக முட்டில் தெண்டமிறுப்பதாகவும் இது *சந்த்ராதித்ய*வரை குடங்கொண்டு கோயி[ல்] புகுவான் எரிப்பதாகவும் இது *பந்மாஹேஸ்வர* *ரக்ஷை*

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1203/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 14+1 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | சகம் 1022, கி.பி.1100 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 592/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 49 |
| அரசன் | : | இராசாதிராசன் | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் முதல் பிராகார மேற்குப்புறச் சுவர்.

குறிப்புரை : கொங்குச் சோழ மன்னன் இராசாதிராசன் விசயமங்கலம் சிவாலயத்தில் கூத்தாடும் தேவர்க்கும் நாச்சியார்க்கும் அமுதுபடிக்காக் குளம் ஒன்றை இறையிலியாக அளித்தார்.

## கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி
2. சிரி
3. ராஜாயிராஜ
4. குச் செல்லா நின்ற யா
5. ண்டு பதினான்கி
6. நெதிராமாண்டு
7. சகரையாண்டாயி
8. ரத்திருபத்திரண்டு
9. குறுப்பு நாட்டு வி
10. சைய மங்கலத்தி
11. ல் ஆளுடை . . .

12. முடையர் கூத்தாடுந்
13. தேவர்க்கும் நாச்சியார்
14. க்கும் அமுதுபடி
15. நம் குளமு . .
16. தை இறையிலி
17. போக முற்றூட்டாக
18. க்குடுத்தோம் குளமு
19. தை இறையிலி ராஜா
20. திராஜநேந் கூத்தா
21. டும் தேவர்க்கு சந்தி
22. ராதித்தவல் செல்வதா
23. க இது நந்தமரர்கள் பா
24. ற்படுத்துக் குடுக்க பன்ம
25. ரஹேஸ்வரர் ரட்சை

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1204/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 5 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | சக ஆண்டு 1044<br>கி.பி.1122 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு<br>ஆண்டு அறிக்கை | : | 593/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு<br>எண் | : | 50 |
| அரசன் | : | இராசாதிராச வீரசோழதேவர் | | | |

இடம் : திருநாகீசுவரமுடையார் கோயில் மேற்குப் பிரகாரக் குத்துக் கல்.

குறிப்புரை : பரஞ்சேர் வழி வேளாளரில் வெள்ளை குலச்சிலம்பன் நீலன் என்பாரின் மனைவி சிட்டன் காவி கொடுத்த நிலக் கொடை கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ சகரை யாண்
2. டு ஆஇரத்து நாற்பத்து நா
3. லில் கோவிராஜாதிராஜ
4. ஸ்ரீவீரசோழ தேவற்கு திரு
5. வெழுத்திட்டுச் செல்லா நி
6. ந்ற திருநல்லியாண்டு அ
7. ஞ்சாவது குறுப்பு நாட்டு வி
8. சையமங்கலத்து மஹாதெ
9. வர் சீநாபுரமுடையாற்கு கா
10. ங்கய நாட்டுப் பரஞ்சேர் பள்
11. ளி இருந்து வாழும் வெள்ளா

12. ளந் வெள்ளைகளில் சிலம்பன்
13. நீலந் மனைக்கிழத்தி சிட்டந்
14. காவியேந் விசையமங்கலத்
15. தில் தெந்நூர் நங்கை நீலி
16. கோயிலில் நத்தத்தில் உகாப்பா
17. டி வழிக்கு இவ்வழி தெற்குப்படை
18. த்தலை பெரிசாத்தந் செக்குவட
19. க்கு சாலைத்தாற்றிக்
20. கு தெற்கு இந்நாற்பால்கெ
21. ல்லை நடுவுபட்ட நிலம்
22. விசயமங்கலத்தில் மா
23. தேவற்கு திருவிழாவுக்கும் தி
24. ருவமுதுக்கும் குடுத்தேன் சி
25. ட்டன் காவியேன் இது பந்ம
26. ாகேஸ்வரர் ரட்சை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 3 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1210 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 594/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 51 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : சோமேசுவரர் கோயில் மேற்குச் சுவர்.

குறிப்புரை : திருநாட்டியமுடைய பிடாரர்க்கு வீரராசேந்திரக்காலன், ராசகெம்பீரப்பிடாரன், சிறுக்கழஞ்சி ஊரவர் ஒருவர் ஆகியோர் கொடுத்த கொடை. கொடை விபரம் தெரியவில்லை.

**கல்வெட்டு :**

1. ஸுவத்
2. திஸ்ரீ வீர
3. ராசேந்திர
4. தேவற்கு
5. யாண்டு
6. ௩ திருநாட்
7. டியம்மு[டை]
8. டயார் . . .
9. பிடா . . .
10. யவர்க்[கு]
11. வீரராசே
12. சந்திரக்
13. காலநு
14. ம் இராச
15. கெம்பீ
16. ரப்பிடா
17. ரநும் சி[று]
18. க்கழஞ்சரி . .
19. ல்தவநா[டை]
20. . . . த . . . ய . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 28 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1313 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 595/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 52 |
| அரசன் | : | சுந்தரபாண்டியன் | | | |
| இடம் | : | சோமேசுவரர் கோயில் வடக்குச் சுவர். | | | |

குறிப்புரை : விசயமங்கலம் படைத்தலை வேளாளர்களில் விச்சன் சிட்டனான தப்பிலா வாசகன் அத்தாணீசுவரமுடையார்க்குச் சந்தியா தீபம் எரிக்க ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவ[ற்கு] யாண்டு இருபத்தெட் . . டா[வது]
2. மார்கழித் திங்கள் முதலாகக் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்
3. ளாழன் படைத்தலைகளில் விச்சன் சிட்டனான தப்பிலா வாசகனேன் [ஆ*ளு]
4. டையார் அத்தாணிஸ்வரமுடையாற்கு வைத்த சந்தியா தீபமொன்று . . .
5. ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை யச்சொன்றுங் கைக்கொண்டோமி . . .
6. யிற் காணி உடைய சிவ(ஸிராமண)ரில் [ஆ]லம்ப[ா]ய கொத்ர[த்]முதல் நாயனார். . .
7. . ந்தரச்சக்ரவர்த்தியும் சங் . . . . . .
8. ங்கநாயக பண்டிதறுங் குடமுங்கொடு . . .

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1207/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | சகம் 1334 கி.பி. 1412 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 596/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | தெ.இ.கோ.சா. I, 272 |
| எழுத்து | : | தமிழ், கிரந்தம் | | | |
| அரசு | : | விஜயநகர் பேரரசு | ஊர்க் கல்வெட்டு எண் | : | 53 |
| அரசன் | : | வீர அரிகர உடையார் | | | |

இடம் : சந்திர பிரபா தீர்த்தங்கரர் கோயில் மகாமண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : கோட்டை சூழ்ந்த வடபரிசார நாடு, வைங்கரை நாடு, நாலூர்ப் பற்று நாடு, பேரூர் நாடு, குறுப்பு நாடு, வீர சோழ வளநாடு ஆகிய ஆறு நாட்டவர்கள் விசயமங்கலம் அணியாழகியார்க்கு செங்கப்பள்ளியைக் கொடையாக அளித்தனர்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ ௳ ௲ ௳ஷெஸ்ரூ ஹரிராய விஹாட௳ ஹாஷெக்குத் தப்புவராயர ம
2. ணூ௳ வக௱ஸ௲௰ ௨ராயிவதி ஸ்ரீவீரஷெவராய உடையார் குமாரன் வீரஹரிஹரராய உடை
3. யற்குச் செல்லா நின்ற நந ஸம்வசுஸரத்து ஐப்பசி ௳ஸ௨ இருபத்தைஞ் சாந்தியதி ரகாஷ௨
4. ஸ . . ஷொக்ஷ௨ ஆகக் கோட்டை சூழ்ந்த நாட்டில் வடபரிசார நாடு வெங்கரை நாடு நாலூற்பற்றும்
5. பேரூர் நாடு குறுப்பு நாடும் வீரசோழ வளநாடும் ஆக இந்த நாட்டு நாட்டவரோம் குறுப்பு நாட்டு விசைய
6. மங்கலத்து நாயிநார் அணியாதழகியார்க்குச் சாதநம் பண்ணிக்குடுத்த பரிசாவது இந்த நாயி

7. ணார்க்கு வ˘ஜைவ˘நஸ்காரத்துக்கு அழிவுதொறுசைக்குமாக குறுப்பு நாட்டு செங்கற் பள்ளி

8. ஊர்க்குளமும் [ெ]தன்பாற்[கெ]ல்லை . . . பாற்கெல்லை நங்கற்கு . . . மேல் பாற்கெல்லை . . . பள்ளம் வடபாற்கெல்லை அமண் பள்ளிக்கு

9. . . பள்ளி சந்தமாகக் குடுத்தோம் இவர் ஊரில் நஞ்சை புந்செய் நாற்பாற்கெல் . . . தோட்டந்தொ . . .

10. . . . புற்று[ம்] எப்பேற்பட்டவை உ[ட்ப்பட]சாதனம் பண்ணிக்குடுத்தோம் ஆறுந[ாட்டு] [நா]ட்டவரோம் நாயி

11. . . . யார்க் . . . தன்ம . . . நினைக்குமவ[ற்] கெங்கையிகரையிற் குராற் பசு

12. பிராமணரையும் . கொன்ற பாவத்திலேயும் ஏழெச்சமறக் கடவார்களாகவும் இந்த பள்ளிச்சந்

13. . . . கோயி . . . [இ]ர][க்ஷிக்க]டவார்களாகவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 597/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | E.I vol VII p.108 |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 54 |
| அரசன் | : | - | | | |

இடம் : சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் வாத்ய மண்டபத்தில் உள்ள நிசீதிகைத் தூண்.

குறிப்புரை : சாமுண்டராஜன் தங்கை புளிஅப்பை சல்லேகனை விரதமிருந்து உயிர் நீத்த நினைவுத் தூண்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ சாமுண்
2. ராஜன் தங்கை புளி
3. அப்பை *நிஸி*திகை
4. கல்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 14 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | சகம் 1085 கி.பி.1163 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 598/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | தெ.இ.கோ.சா.I, 274 |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 55 |
| அரசன் | : | முதலாம் குலோத்துங்க சோழன் | | | |

இடம் : சந்திரப்பிரபா தீர்த்தங்கரர் கோயில் வாத்ய மண்டபத் தூண்.

குறிப்புரை : வீரசங்காதப் பெரும்பள்ளியுடைய தேவர்க்கு இருங்கோளன் நாடு காவலில் அமுதுபடிக்காக நிலம் கொடுக்கப்பட்டது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராச
2. [கே]சரி பந்மராகிய திரி
3. புவனச் சக்கரவத்திகள்
4. ஸ்ரீ குலோத்துங்க சே
5. சாழ தேவற்கு இயாண்
6. டு பதின்மூன்றாவதிநெ
7. திர் சகரையாண்டு
8. ஆயிரத்தெண்பத்த
9. ஞ்சில் விசையமங்க
10. லத்தில் வீரசங்காத
11. ப் பெரும்பள்ளியுடை

12. ய தேவர்க்கு அமுதுபடி
13. க்கு நாம் விட்ட நிலம்
14. குறுப்பு நாட்டில் நிறை
15. . . . . கீழ் சிறகிங்
16. . . . ந்தப் பெறுக . . .
17. . . . விட்ட நிலமா
18. கி வருகிற நிலம்
19. மூன்று பொழி கா
20. லால் முக்கல நெ
21. ல் விதை தேவதா
22. னமாக விட்டோ
23. ந் தேவ காலால்
24. நாநாழி அரிசி அமு
25. தபடி செலுத்தி
26. வருவதாக விசை
27. சயமங்கலத்திற்
28. பள்ளியுடையா
29. ர்களுக்கு இட்டோம்
30. இருங்கோள[ன்] நா
31. டு காவலில் இந்
32. நிலங் குடுத்தே
33. ாம் சந்திராதித்
34. தருள்ளளவும் ந
35. ந்தமர் மாற்ற
36. ப் பெறார்.

## த.நா.அ. தொல்லியல் துறை  தொடர் எண் :- 1210/2003

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | ஈரோடு | ஆட்சி ஆண்டு : | - |
| வட்டம் : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு : | கி.பி.12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : | ARE. 599/1905 |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | தெ.இ.கோ.சா.I, 279 |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | - | ஊர்க் கல்வெட்டு எண் : | 56 |
| அரசன் : | - | | |

இடம் : சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் நிருத்த மண்டபக் கிழக்கு வாயில் நிலை வலப்புறம்.

குறிப்புரை : கொங்கு வேளிர் தேவராச்சாரியார், தோழன்மார் ஆகியோர் எழுந்தருளச் செய்து விஷு அயன சங்கராந்தி, கார்த்திகை விழா எடுத்த விபரம் கூறப்பட்டுள்ளது..

### கல்வெட்டு :

1. . . . கார்த்
2. திகை தி[ங்]கள்
3. கொங்குவேளிரையு
4. தேவராசாரியயை
5. ரயும் தோழன்
6. மாரையும் எழுந்[த]
7. ருளிவித்து விஷு
8. அ[ய]ன ஸங்கி[ராந்தி]
9. தி[ரு]க்காத்திகைக்கு
10. திருஅமுதுபடிக்கு[ம்]

11. இறுக்கும் காலால்

12. அறுநாழியும் திரு

13. காாத்திகைக்கு பன்

14. னிரு நாழியும் கறியமுது

15. திருவிளக்கு இரண்

16. [டுக்]கும் இக்கோயிற்கா

17. [ணி]உடைய ஸ்ரீவ

18. த்ஸ கோத்தி[ரத்தி]ல்

19. சில[வர்]பிள்ளை பெரி[ய]

20. [ந]ாட்டிற் பண்டித

21. [ப்]பெருமாள் கெங்

22. [கை] ஆழ்வான் உள்ளிட்

23. [டா]ற்கும் நான்கு

24. டுத்[த] உபயம் ஆணை அ

25. [ச்சு] ஸ்ரீயக்கி பழஞ்ச

26. [லா]கை அச்சு இரண்

27. [டும்] குடுத்தேன் இது

28. [குட]ங் கொ[ண்]டு கோயி

29. [ல்பு]கவார் சந்திராதி

30. [த்]தவரை செலுத்

31. [து]வதாக இது ஸ்ரீ

32. ஜெைன *ரக்ஷை*

## த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 1211/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 46 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | சகம் 1179, கி.பி.1257 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 600/1905 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | தெ.இ.கோ.சா.I, 276 |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 57 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் நிருத்த மண்டபக் கிழக்கு வாயில் நிலை (இடப்புறம்).

குறிப்புரை : விசயமங்கலம் படைத்தலை வேளாளர்களில் திருவானைக்காவுடைய சொக்கன் திருநிலைகால் செய்தார்.

### கல்வெட்டு :

1. யாண்டு நாற்[பத்]
2. தாறாவது [சக]
3. ரை யாண்[டு]
4. ஆயிரத் தெ[த]
5. ாரு ஹுாற்றெ[ழு]
6. பத்தொன்[ப]
7. தில் குறுப்[பு]
8. நாட்டு விெ[ச]
9. யன் மங்க[ல]
10. த்து வெள்ள[ா]
11. ளன் படை[த்]
12. தலைகளில்
13. திருவானை[க்]
14. காவுடைய[ா]
15. ந் சொக்க[நே]
16. ந் திருந்நிலை[க்]
17. கால் செய்[வி]
18. த்தேந்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : 20 |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : சகம் 1210, கி.பி.1288 |
| ஊர் | : விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : - |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தமிழ் | | |
| அரசு | : கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : 58 |
| அரசன் | : வீரபாண்டியன் | | |

இடம் : சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் சுற்றுச் சுவரின் வெளியே கிழக்குப் பக்கம் உள்ள பீமதீர்த்தக் கிணறு.

குறிப்புரை : வடகரை நாட்டு வேளாளர் ஒருவர் செய்த கொடை, பெயர் முதலிய பிற விபரங்கள் இல்லை.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீர
2. பாண்டிய தேவ
3. வர்க்கு யாண்டு
4. உ௰வது சக
5. ரையாண்டு
6. ஆ௨௱௰ முன்
7. வடகரை நா
8. ட்டில் வெள்ளாளன் . . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : - |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : கி.பி.13-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : - |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தமிழ் | | |
| அரசு | : - | ஊர்க் கல்வெட்டு எண் | : 59 |
| அரசன் | : - | | |

இடம் : சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் பீம தீர்த்தக் கிணறு.

குறிப்புரை : வீரசங்காதப் பெரும்பள்ளி என்ற பெயர்க் குறிப்பு மட்டும் உள்ளது.

**கல்வெட்டு :**

1. விசைய மங்கல
2. த்து வீரசங்
3. காதப் பெரும்பள்ளி
4. உடையார் கோயில் . . .

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1214/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.15-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | கன்னடம் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | கன்னடம் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 60 |
| அரசன் | : | - | | | |

இடம் : சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் கிழக்குச் சுவர் அதிட்டானத்தில் உள்ள இரண்டு வரிக் கல்வெட்டு.

குறிப்புரை : நந்தன ஆண்டு மாசி மாதம் சுக்கிலபட்சம் பிரதமை நாள் அன்று செய்து முடிக்கப்பட்ட ஒரு திருப்பணியைக் குறிக்கிறது. விசயமங்கலம் சமணப்பள்ளியில் அன்றும் அர்ச்சகர்களாக உள்ள குடும்பம் கன்னட மொழி பேசும் குடும்பமே ஆகும். கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டம் 'கெல்லிசூர்' சமணப்பள்ளியில் விசயமங்கலம் பற்றிய குறிப்பு வருகிறது.

இக்கோயிலை முதலில் கட்டத் தொடங்கியவர்கள் கங்கமன்னர்களேயாகும்.

**கல்வெட்டு :**

1. நந்தன வருஷம் மாசி மாதம்
2. சுக்லபட்சப் பிரதமை . . .

## த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 1215/2003

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : - |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : - |
| ஊர் | : விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : - |
| மொழி | : வடமொழி | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தேவநாகரி | | |
| அரசு | : - | ஊர்க் கல்வெட்டு எண் | : 61 |
| அரசன் | : - | | |

இடம் : சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் வாத்திய மண்டபத்தில் உள்ள தனிக்கல். வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கல் உடைக்கப்பட்டுவிட்டது.

குறிப்புரை : உதயணன் என்ற காப்பிய நாயகன் வரலாறு கூறும் நூல் பைசாச மொழியில் குணாட்டியராலும், வடமொழியில் கங்க மன்னன் துர்வி நீதனாலும் "பிருகத் கதா" என்ற பெயரில் எழுதப்பட்டது. விசயமங்கலத்தில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கொங்கு வேளிர் என்பவர் "பெருங்கதை" என்ற பெயரில் பைசாசமொழியில் எழுதப்பட்ட 'பிருகத் கதா'வை தமிழில் பெருங்காப்பியமாகச் செய்தார். 90 செ.மீ. 30 செ.மீ. அளவுள்ள செவ்வகக் கல்லின் முனையில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. கல்லின் இரு முனையிலும் சுவத்திக சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. பிரபை வைப்பதற்கான துளையும் உள்ளது. "பெருங்கதையின் அழகிலும் பெருமையிலும் மூழ்கியுள்ளது" என்பது இதன் பொருள்.

### கல்வெட்டு :

1. ஸ்ரீபிரகத் கதா லாவண்ய ரத் பிரதாபஹ:

## த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 1216/2003

மாவட்டம் : ஈரோடு

ஆட்சி ஆண்டு : -

வட்டம் : பெருந்துறை

வரலாற்று ஆண்டு : கலி 4985 கி.பி.1883

ஊர் : விசயமங்கலம்

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : -

மொழி : தமிழ்

முன் பதிப்பு : -

எழுத்து : தமிழ்

அரசு : -

ஊர்க் கல்வெட்டு எண் : 62

அரசன் : விக்டோரியா மகாராணியார்

இடம் : நாகீசுவரர் கோயில் தென்புற மண்டப விதானம்.

குறிப்புரை : விசயமங்கலம் நாகீசுவரர் கோயிலில் சிலருடைய உதவி பெற்று ஏழுகாப்பந்தி மண்டபம், தீர்த்தக் கிணறு, தென்புற மண்டபம், மகாமண்டபம், தட்டோடு இவற்றை கம்புளியம்பட்டி நாகப்ப கவண்டர் முன்னின்று பழுது பார்த்துத் திருப்பணி செய்த விபரம் கூறப்பட்டுள்ளது..

**கல்வெட்டு :**

1. சொஸ்தி கலியுக சகாப்தம் (4985)இல் செல்லாநின்ற சுபானு வருஷம் சித்திரை மாதம்
2. குருப்புநாடு விஜயமங்கலம் குரு ஸ்தான மடாதிபராகிய கூனம்பட்டி இராஜலிங்க மாணிக்க
3. சுவாமியார்களுடைய நாளையில் மகத்துவம் தங்கிய இந்தியா சக்கரவத்தினியாரவர்கள்
4. அரசாட்சியில் ஈரோடு தாலூக்கா இந்து தேவஸ்தானக் கமிட்டி மெம்பர்களில் இரணியப்ப ஐய்யர் க
5. சாம ஐயர் உ பாலசுவாமி ஐயர் ௩ சீனிவாச ராமானுஜ ஐயங்கார் ச மேற்படி குருசுவாமியவர்கள்
6. சிஷ்யர்களான வடபுர மண்டபத்தில் கண்ட சாசனத்தில் கண்ட படைத்தலை கம்புளியம்பட்டி

7. சின்னரங்கய்ய கவுண்டர் குமாரன் நாகப்ப கவுண்டர் ரு கைக்கோளபாளையம் பழனிமலைக் கவுண்டர்

8. குமாரன் ராமய்ய கவுண்டர் கூ இவர்கள் அனுமதிப்படிக்கு விஜயமங்கலம் தேவஸ்தான தர்ம

9. கர்த்தாக்களான மேற்படி வேளாளரில் சரவணக்கவுண்டர் குமாரன் நடுப்பட்டி மு.மணியம்

10. அனுமந்தக் கவுண்டர் க மேட்டுப்புதூர் சீரங்க கவுண்டர் குமாரன் ரங்கய்ய கவுண்டர் இவர்கள்

11. வசமிருந்த கசர்ப்பணத்திலும் மேற்படி நாகப்ப கவுண்டர் க மேற்படியார் சகோதரர்கள் சிலம்பண

12. கவுண்டர் உ முத்துசாமிக்கவுண்டர் ரூ இவர்கள் சொந்தப் பணத்திலும் கோபாலகிருஷ்ண ஐயங்கார்

13. குமாரன் சேஷ ஐயங்கார் க காளியப்ப கவுண்டன் புதூர் மொசுக்குவுண்டர் மகன் சின்னக் கவுண்டர் உ

14. மூங்கிற்பாளையம் சின்னராம ரெட்டியார் மகன் ரங்க ரெட்டியார் ரூ சாமராஜாபாளையம் சின்ன

15. வெங்கட்ட ரெட்டியார் மகன் சின்ன வெங்கட்ட ரெட்டியார் ச மேற்படி தேவஸ்தான சிப்பந்திகள்

16. இவர்கள் செய்யலான உதவிப்பணத்திலும் சிலவு செய்து மேற்படி நாகப்ப கவுண்டர்

17. முக்கியஸ்தராயிருந்து நாகேஸ்வரசுவாமி சன்னதி கீழ்ப்புறம் ஒழுகாப்பந்தி மண்டபம் சிகஸ்தமாய்

18. பிரிந்து கீழே விழுந்து கிடந்ததையும் தீர்த்தக்கிணறு நடைகிணறாய் சிகஸ்தாயிருந்ததையும்

19. தென்புற மண்டபமும் மகாமண்டபமும் தட்டோடு சிகஸ்தாயிருந்ததையும் துரஸ்து செய்து

20. வைத்தது உபயம் எழுதியது வி. ஆணைய்யர் குமாரன் கிருஷ்ண ஐயர் வேலை செய்தது கொளந்தாக்

21. கொத்தன் மகன் கருப்பக்கொத்தன் ஒட்டுச் செலவு ரு கூய சூஅா அயரூ வருஷம் நாகீஸ்வரசுவாமி துணை.

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1217/2003**

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : - |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : சகம் 1791 கி.பி.1869 |
| ஊர் | : விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : - |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தமிழ் | | |
| அரசு | : - | ஊர்க் கல்வெட்டு எண் | : 63 |
| அரசன் | : விக்டோரியா மகாராணியார் | | |

இடம் : நாகீசுவரர் கோயில் வடபுற மண்டப விதானம்.

குறிப்புரை : விசயமங்கலம் நாகீசுவரர் கோயிலில் கொறட்டுவாசல் மண்டபம், கருட கம்பத்துக் கொறடு ஆகியவை கட்டப்பட்ட விபரம் கூறப்பட்டுள்ளது..

**கல்வெட்டு :**

1. சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம்(1791) கலியுக சகாப்தம் விப வருஷம்
2. ஐப்பசி மாதம் குறுப்புநாடு விசயமங்கலம் வகையறா கிராமங்களில் மிராசுகாரர்கள் அஞ்சு
3. பங்காளிகளும் அவர்கள் அண்ணன் தம்பி மாமன் மைத்துனர் வகையறா பதினொரு
4. கோத்திரத்துக்கும் பட்டக்காரர் பொருளந்தை கோத்திரத்தில் மூணாவது பங்கில் துடுப்பூதி
5. குமாரசாமிக் கவுண்டர் இவர்களுக்குக் குருவாகிய கூனம்பட்டி மாணிக்கவாசகர் மட ராசலிங்க
6. மாணிக்கவாசக சுவாமியார் அவர்களுட நாளையில் இந்திய சர்க்கார் மகாராணியாரவர்கள்
7. அரசாட்சியில் யிங்கிலீசு துரைத்தனத்தில் இந்து மத தேவஸ்தான விசாரணைக்கு பெருந்துறைத்

8. தாலுக்காவுக்கு நேமுகமாயிருக்கிற கமிட்டியார்களில் ஒருவராகிய மேற்கண்ட அஞ்சு பங்காளிகளில்

9. நாலாவது பங்கில் சேர்ந்த சாத்தந்தை கோத்திரத்திலும் கம்புளியம்பட்டி நாகப்பவுண்டர் மகன்

10. சிலம்பகவுண்டர் மகன் மணியம் சின்ன ரங்கய்ய கவுண்டர் யிந்த நாகீசுவர சுவாமி கோயில் ஏழுகாப்

11. பந்தி மண்டபங்கள் சிகஸ்தாயி பிரிஞ்சு விழுந்ததை மேல் கண்டபடி மற்ற கமிட்டியார்களில்

12. கிருஷ்ணய்யர் இரணியப்ப அய்யர் சாமய்யர் சீனுவாசய்யர் பெரிய அண்ணா அய்யர் இவர்களை

13. தருவித்து பார்வையிட்டு அவர்கள் சேர்ந்து எழுதிய உத்தரவின் படிக்கு யிந்த இந்து

14. தேவஸ்தனத்துக்கு தர்மகர்த்தாவாக நேமுகமாயிருக்கிற மேல்கண்ட அஞ்சு பங்காளிகளில்

15. முதலாவது பங்கில் சேர்ந்த சீரங்கனாத கவுண்டர் நாலாவது பங்கில் சேர்ந்த பட்டக்காரக் கவுண்டர்

16. இவர்கள் வசமிருந்த கசர் லாபத் துகையிலும் கண்ட சின்னரங்கய்ய கவுண்டர் சொந்தத்

17. துகையிலும் சிலவு செய்து அஸ்திபாரங்கண்டு பிரித்துப் புதுசாயிக் கட்டிவச்சு கொறட்டு வாசல்

18. மண்டபமும் கெருடகம்பத்துக்குக் கொறடும் சிகஸ்தாயிருந்ததை துரஸ்து செய்து வைச்சது உபயம்

19. சிவமயம்.

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1218/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1895 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 64 |
| அரசன் | : | - | | | |

இடம் : விசயாபுரியம்மன் கோயில் மரக கதவு.

குறிப்புரை : விசயமங்கலம் படைத்தலை வேளாளர்களில் கம்புளியம்பட்டி நாகப்ப கவுண்டர் விசயாபுரியம்மன் கோயிலுக்குக் கதவு கொடையாக அளித்துள்ளார். (இவர் தேவஸ்தானக்குழு உறுப்பினராக இருந்து நாகீசுவரர் கோயில் திருப்பணி செய்துள்ளார்).

**கல்வெட்டு :**

1. மன்மத வருஷம்
2. ஆனி மாதம்
3. 13 தேதி விசைய மங்கலம்
4. விசையாபுரி அம்மனுக்கு
5. கம்பழியம் பட்டி
6. நாகப்பகவுண்டன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கலி 5011, கி.பி.1910 |
| ஊர் | : | விசயமங்கலம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 65 |
| அரசன் | : | - | | | |

இடம் : விசயமங்கலம் நல்ல கிணற்றுப் பிள்ளையார் கோயில் முன் மண்டபம் மேல் விதானம்.

குறிப்புரை : தேவஸ்தான விசயமங்கலம் சின்னப்ப முதலியார் மகன் சபாபதி முதலியார் முத்துவிநாயகன் கோயிலுக்கு கூனம்பட்டி சுவாமியார் அறிவுரைப்படி மூங்கில் பாளையத்தில் இரண்டு ஏக்கர் நிலம் கொடையாக அளித்தார்.

## கல்வெட்டு :

1. கலியுக சகாப்தம் 5011 சௌமிய வருஷம் புரட்டாசி மாதம் 11ஆம் தேதி மடாதிபதியா
2. கிய கூனம்பட்டி ஸ்ரீமாணிக்கவாசகசுவாமி அவர்கள் கட்டளை
3. தேவஸ்தான விசயமங்கலம் சின்னப்ப முதலியார் மகன் சபாபதி முதலியார்
4. முத்து விநாயகனுக்கு மூங்கில்பாளையம் கிராமத்தில் 71 நெம்பர் ஏக்கர் 1
5. 72 நெம்பர் ஏக்கர் 1 ஆக இரண்டு ஏக்கர் பூமியை விநாயகனுக்கு பூசைக்கு மானியம்
6. விடப்பட்டது.

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1220/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 15 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1280 |
| ஊர் | : | வெள்ளோடு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 227/1965-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில் கிழக்கு, வடக்குச் சுவர்.

குறிப்புரை : 'கண்மாளர் ஐவர்' 'பஞ்சகம்மாயர்' ஆகிய விசுவகன்மியர் என்னும் ஆசாரிமார்களுக்குச் சமூதாயத்தில் சில தடைகள் இருந்தன. சமூக வாழ்வுக்கு அவர்களின் சிறப்பான சேவைகளைக் கருதிக் கொங்குப் பாண்டியர் வீரபாண்டியன் காலத்தில் கம்மாளர்கட்கு இருந்த தடைகள் நீக்கப்பட்டன. இத்தடை நீங்கக் காரணமாக இருந்தவன் இந்த அரசாணையில் கையொப்பமிட்ட காலிங்கராயன் ஆவான். இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட இடம் வெள்ளோடு, ஆனால் இவ்வாணையை வேண்டும் இடங்களில் கல்லிலும் செம்பிலும் பொறித்துக் கொள்க எனக் கூறப்பட்டுள்ளது. இந்த ஆணையின் நகல் கல்வெட்டுகள் அந்தியூர், கரூர், கடத்தூர், பாரியூர், பேரூர், மொடச்சூர் ஆகிய இடங்களிலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**கல்வெட்டு :**

1. சுபமஸ்து ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு ௰ரு வது சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் கோனேரிமேல்கொண்டான் காங்கய நாடும், பூந்துறை நாடுள்ளிட்ட பற்றில் கண்மாளர்க்குத் தங்களுக்கு
2. நன்மை தின்மைக்கு பதினஞ்சாவது ஆடி மாதம் முதல் இரட்டைச் சங்கும் ஊதிப் பேரிகை உள்ளிட்டன கொட்டுவித்துக் கொள்ளவும் தாங்கள் புற
3. ப்பட வேண்டுமிடங்களுக்குப் பாதரசை கோத்துக் கொள்ளவும் வீடுகளுக்குச் சாந்திட்டுக் கொள்ளவும் சொன்னோம் இப்படிக்கு ந

4. ம்மோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரை செல்வதாக தங்களுக்கு வேண்டுமிடங்களிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளவும் இவை யாண்டு ௰ரு நாள் உாகூ௰உ காலிங்கராயன் எழுத்து விழுப்பதராயன் எழுத்து

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.16-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | வெள்ளோடு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 228/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | விசயநகரம் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| அரசன் | : | - | | | |

இடம் : வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில் தெற்கு, கிழக்குச் சுவர்.

குறிப்புரை : வெள்ளோடு சர்வலிங்கேசுவரருக்கு சின்னக்குளம், பெரியகுளம், கனகபுரம் குளம், குருக்க குளம் ஆகியன பாயும் நிலங்களை கொடையாகக் கொடுக்கப்பட்டன.

**கல்வெட்டு :**

1. சுபமஸ்து ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் மேல்கரைப் பூந்துறை நாட்டு
2. வெள்ளோட்டில் சிறுவீசுரமுடைய தம்பிரானார்க்கு வெள்ளோட்டுச் சின்னக்குளத்து ஏரிக்கீழ் நிலம் முழுதும் பெரிய ஏரிக்கீழ் நிலம் நாலுமாகவும்
3. கனகபுரம் குளத்து ஏரிக்கீழ் நிலம் பத்து மாவும் குருக்க குளத்து ஏரிக்கீழ் நிலம் ஒரு மாவும் மேல் நோக்கிய மரம் கீழ் நோக்கிய கிணறு நஞ்சை புஞ்சை
4. உண்டானது சந்திராதித்த வரைக்கும் சிலையிலும் செம்பிலும் வெட்டிக் குடுத்தோம் இந்த தர்மத்தை யாதாமொருத்தன் அகிதம் பண்
5. ணாமல் நடத்தினவர்கள் அசுவமேதி யாகம் பண்ணின பலன் பெறுவராகவும் இத்தர்மத்தை அகிதம் பண்ணினவன் கெங்கைக் கரையில் காராம் பசுவைக்
6. கொன்ன தோஷத்திலே போவான்.

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1222/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 15 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1280 |
| ஊர் | : | வெள்ளோடு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 229/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குப் பாண்டியர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 3 |
| அரசன் | : | வீரபாண்டியன் | | | |

இடம் : வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில் அர்த்த மண்டபம், கருவறை வடபுறச் சுவர்.

குறிப்புரை : வெள்ளோட்டு ஊரும் ஊரவரும் தங்கள் ஊர் வடக்கு வாசல் குளத்தை சர்வலிங்கேசுவரருக்கு குடிநீங்காத் தேவதானமாகக் கொடுத்தனர். உழுது பயிர் செய்து மூன்றில் ஒரு பங்கு கோயிலுக்கு அளிக்க ஒப்புக் கொள்ளப்படடுள்ளது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பந்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவர்க்கு யாண்டு ൰ரு வது பூந்துறை நாட்டு வெள்ளோட்டு ஊரும்
2. ஊராளிகளோமும் எங்கள் நாயனார் சறுவேசுமுடையார்க்கு வடக்கு வாசலில் குளம் குடிநீங்காத் தேவதானமாகக் குடுத்தோம்
3. இந்நிலத்தில் நந்தவனத்தில் வச்சு தெங்கு மா இலுப்பை நாயனார்க்கு முற்றூட்டும் ஆவதாகவும் மேல்நின்ற மரம் பனையும் மாவும் இலுப்பையும்
4. நீக்கி இக்குளத்தால் நீர்பாயும் நிலம் அத்துனையும் குடிநீங்காத் தேவதானமாக சந்திராதித்தவரையும் உழுது பயிர் செய்து மூன்றிலொன்று மேல்வாரம் குடுப்போ
5. மாகவும் இப்படி சம்மதித்து நீர்வார்த்துக் குடுத்தோம் வெள்ளோட்டு ஊரும் ஊராளிகளோமும் எங்கள் மகண்மையுள்ள முதன்மைக்கு முச்சூடும் பெறுவோமாகவும்

## த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 1223/2003

மாவட்டம் : ஈரோடு

ஆட்சி ஆண்டு : -

வட்டம் : பெருந்துறை

வரலாற்று ஆண்டு : கி.பி.16-ஆம் நூற்றாண்டு

ஊர் : வெள்ளோடு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 231/1967-68

மொழி : தமிழ்

முன் பதிப்பு : -

எழுத்து : தமிழ்

அரசு : உம்மத்தூர்

ஊர்க் கல்வெட்டு எண் : 4

அரசன் : வீரநஞ்சராய உடையார்

இடம் : வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில் மகாமண்டப வடக்கு மேற்குச் சுவர்.

குறிப்புரை : பூந்துறை நாட்டுச் சபையார் 32 ஊரவரும் வெள்ளோட்டில் கூடி வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயிலில் தைப்பூச விழாவை 11 நாள் கொண்டாட முடிவு செய்தனர். தைப்பூச விழாவுக்கும் அந்தணர்கட்கு உணவிடவும் தேவையான பொருளை வழங்கினர். எல்லோரும் கையெழுத்திட்டுள்ள இந்த ஆவணம் பூந்துறை நாட்டுக் கணக்கன் திருமலைநாதர் கோப்பணன் எழுதியுள்ளார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீமந் மகாமண்டலேஸ்வரன் ஸ்ரீவீரநஞ்சராய உடையார் இராச காரியத்துக்குக் கடவதான வீரநஞ்சராய தேவற்கு செல்லாநின்ற காலத்து மேல்கரைப் பூந்துறை நாட்டு நாட்டவரோம் நிறைவற நிறைந்து குறைவறக்கூடி இருந்து எங்கள் நாட்டு வெள்ளோட்டு சருவேஸ்வரமுடைய தம்பிரானார்க்கு தரும சாதனம் பண்ணிக்

2. குடுத்தோம் சந்திராதித்தவரையில் குறைவறுப்புக்கும் தைப்பூசம் ஒரு நாளை இறை உவப்புக்கும் செல்லும் வெச்சம் நாளொன்றுக்கு அமுதுபடி நாநாழி பருப்பு நாழி நெய்படி ஆறு பழம் இருபது வெல்லம் நாலு எண்ணெய் படி மூன்று மிளகு படி அரை உப்புபடி இரண்டு தேங்காய் ஆறு இளநீர் பத்து பாக்கு நூறு வெற்றிலை இருநூறு மஞ்சள் பலம் பதினொன்று சந்தனம் கற்பூரம் பரிமளம் பலம் இருபத்து நாலு

3. உடையவர் நாச்சியார் நாயகர் நாச்சியார்க்கும் பரிவட்டத்துக்கும் பணம் இருபது பணம் இருபதுக்கு நாற்பது பிராமண போஜனத்துக்கு படி பதினஞ்சு இந்தப் பதினொரு நாளைக்கு அமுதுபடி நாற்பத்தெட்டு நாழி பருப்பு பதினொரு நாழி நெய்பதினாறு நாழி பழம் இருநூற்று இருபது வெல்லம் நாற்பத்து நாலு தேங்காய் இளநீர் நூற்று எழுபத்தாறு மிளகுபடி ஆறு நல்லெண்ணெய் எட்டு நாழி வெண்ணெய் நூற்று எழுபத்தாறு நாழி பரிமளம்

4. பணம் ஆயிரத்தெட்டும் இம்மருவாதி இந்த குறைவறுப்பு நாடு முப்பத்திரண்டு ஊரோமும் சந்திராதித்தவரை நடத்தும்படி கல்வெட்டில் குடுத்தோம் இத்தன்மத்தைக் காத்தவன் பாதம் எங்கள் தலைமேலே இத்தன்மம் விலக்கினவன் ஏழெச்சம் அறுவான் இப்படிக்கு பூந்துறையில் வெள்ளாளன் மேலைச் சாகாடைகளில் அப்பியான் எழுத்து இப்படிக்கு வெள்ளோட்டு வெள்ளாளன் பயிறர்களில் பிள்ளையாண்டான் எழுத்து மேற்படி

5. ஊரில் வெள்ளாளன் சாத்தந்தைகளில் கனகபுர வேளார் பெரியணன் எழுத்து இப்படிக்கு நசையனூரில் வெள்ளாளன் கண்ணர்களில் அழைப்பிச்சான் எழுத்து இப்படிக்கு ஈரோட்டில் செட்டி சமயமந்திரி கெம்பையன் எழுத்து இப்படிக்கு சாத்தனூரில் வெள்ளாளன் வண்ணக்கரில் சிவமாலை எழுத்து இப்படிக்கு காளமங்கலத்து வெள்ளாளன் கண்ணர்களில் தேவணன் எழுத்து இப்படிக்கு பிடாரி ஊரில் வெள்ளாளன் பிரளந்தைகளில் உலகுடையான் எழுத்து

6. இப்படிக்கு பெருந்துறையில் வெள்ளாளன் எருமைகளில் உலகுடையார் எழுத்து இப்படிக்கு எழுமாத்தூரில் வெள்ளாளன் பனங்காடர்களில் பெரியண்ண காகுத்தார் எழுத்து இப்படிக்கு இலவமலையில் வெள்ளாளன் சாத்தந்தைகளில் சடையர் எழுத்து இப்படிக்கு மங்கலத்து வெள்ளாளன் பில்லர்களில் சூரியதேவன் எழுத்து இப்படிக்கு மொடக்குறிச்சியில் வெள்ளாளன் தூறர்களில் ஆவுடையான் எழுத்து இப்படிக்கு அனுமன்பள்ளியில் வெள்ளாளன் செல்லர்களில் பத்தயான் எழுத்து

7. இப்படிக்கு குலவிளக்கில் பாண்டி வேட்டுவரி புலிக்குத்தி தேவன் எழுத்து இப்படிக்கு கிழாம்பாடியில் வெள்ளாளன் கண்ணர்களில் கண்ணப்பன் எழுத்து இப்படிக்கு அறைச்சலூரில் கரைய வேட்டுவரில் குன்றியடவார் எழுத்து இப்படிக்கு குழாநிலையில் வெள்ளாளன் கண்ணர்களில் செம்பியன் எழுத்து இப்படிக்கு குழாநிலையில் வெள்ளைவேட்டுவரில் நல்லணன் எழுத்து இப்படிக்கு நசையனூரில் வெள்ளாளன் செம்பர்களில் பச்சையான் எழுத்து இப்படிக்கு முருங்கைப் பெருந்தொழு நல்ல பெருமாள் எழுத்து

8. இப்படிக்கு பழமங்கலத்து வெள்ளாளன் ஆடகளில் நல்ல பெருமாள் எழுத்து இப்படிக்கு அவிரியூரில் படைத்தலைகளில் பொன்னாண்டான் எழுத்து இப்படிக்கு

தையூரில் வெள்ளாளன் தனஞ்சுகளில் தாய்க்கு நல்லர் எழுத்து இப்படிக்கு பாரியூரில் சேந்த செட்டி கணக்கன் எழுத்து இப்படிக்கு கஞ்சன் பள்ளியில் வெள்ளாளன் ஈஞ்சகளில் கண்ணப்பன் எழுத்து இப்படிக்கு ஈஞ்சையூரில் வெள்ளாளன் ஈஞ்சகளில் சிறுவப்பன் எழுத்து

9. இப்படிக்கு முப்பத்திரண்டு ஊரவர் சொற்படிக்கும் கையெழுத்துப்படிக்கும் இந்த தர்ம சாதனம் எழுதினேன் பூந்துறை நாட்டு வெள்ளோட்டு தருளக்கினிய கவுசிய கோத்திரத்தில் நாட்டுக் கணக்கு திருமலைநாதர் கோப்பணன் எழுத்து

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1224/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.16-ஆம் நூ.ஆ. |
| ஊர் | : | வெள்ளோடு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 232/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | விசயநகரம் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 5 |
| அரசன் | : | வீர அரியண உடையார் | | | |

இடம் : வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில் மேற்கு, தெற்குச் சுவர்.

குறிப்புரை : வெள்ளோடு நாற்பாங்கு எல்லை குறித்துக் கல்வெட்டியது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்தி ஸ்ரீமந் மகாமண்டலீசுவரர் ஸ்ரீவீரஅரியண உடையாற்க்குச் செல்லாநின்ற காலத்து பூந்துறை நாட்டு வெள்ளோட்டுச்
2. சறுவேசுவரமுடை தம்பிரானார்க்காக நாற்பாங்கு எல்லைக்குக்
3. கல்வெட்டிக் குடுத்தோம் எல்லை சந்திராதித்தர் வரை நடப்பதாக இதற்கு
4. அகுதம் பண்ணினவன் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொண்ண
5. தோஷத்திலே போவான்

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1225/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | 16-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | வெள்ளோடு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 233/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | உம்மத்தூர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 6 |
| அரசன் | : | வீர நஞ்சராய உடையார் | | | |

இடம் : வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில் மகாமண்டபத் தூண்.

குறிப்புரை : சர்வலிங்கேசுவரர் கோயிலில் முதலிக்கவுண்டர் மகாமண்டபம் கட்டும்போது பூந்துறை நாட்டுக் கணக்கு திருமலைநாதர் கோப்பணன் நான்கு தூண்கள் கொடையாகக் கொடுத்தார்.

**கல்வெட்டு :**

1. சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேஸ்வரன்
2. வீரநஞ்சராயர்க்குச் செல்லா நின்ற
3. சித்தார்த்தி ஸம்வத்ஸரத்து தை மாதம்
4. முதலிக் கவுண்டர் மகாமண்டபம் கட்டு
5. கையில் மேல்கரைப் பூந்துறை நாட்டுக்
6. கணக்கு வெள்ளோட்டு கௌசிக கோத்
7. திரத்து திருமலை நாதர் கோப்பணன் மகா
8. மண்டபத்துக்கு இட்ட தூண் நாலு வழுவாத
9. ராயர் சோழநாட்டுக் கணக்கு வசம் பெரிய
10. ஊர்க்கு ஒரு பொதி கம்பு

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 1226/2003

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | 17-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | வெள்ளோடு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 234/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 7 |
| அரசன் | : | - | | | |

இடம் : தெற்குச் சுவரில் பொருத்தப்பட்டுள்ள தனிக்கல்.

குறிப்புரை : நேரிசை வெண்பா யாப்பில் எழுதப்பட்டுள்ள அகத்துறைப்பாடல் கோப்பன் என்பாரின் மகன் மருதன் வெள்ளோட்டுத் தலைவனாகக் குறிக்கப் பெறுகிறான். தலைமகன் மீது மோகம் கொண்ட ஒரு பெண்ணிடம் "மன்மதன் வாராமல் தடுக்க கதவைத் தாளிடும் பெண்களே இரவில் சந்திரன் தோன்றி உங்களை வருத்தப் போகிறானே என்ன செய்யப் போகிறீர்கள்" என்று கேட்பது போல் பாடல் அமைந்துள்ளது.

## பாடல்

காப்பை இடுங்கன்இக் காமவேள் வாராமல்
தாப்பை மிகத்தேடும் தையலீர் – கோப்பன்
தருமருதன் வெள்ளோடைத் தான்புர னூரில்
வரும்இரவு நேரே மதி

(இப்பாடல் பொறிக்கப்பட்ட கல்லின் அருகில் மற்றொரு நீண்ட பாடல் பொறிக்கப்பட்ட கல் உள்ளது. முற்றிலும் அழிந்துவிட்டது. தலைப்பில் "அழைப்பிச்சான் பாட்டு கலம்பகம்" என்ற தொடர் மட்டும் படிக்கும் நிலையில் உள்ளது.)

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1227/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | 19-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | வெள்ளோடு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 8 |
| அரசன் | : | - | | | |

இடம் : வெள்ளோடு பொன்காளியம்மன் கோயில் மகாமண்டப நுழைவாயில் இடப்புறம்.

குறிப்புரை : வெள்ளோடு சாத்தந்தை குல ராக்கியாக் கவுண்டர் மக்கள் மாரப்பகவுண்டரும், முத்துக்கவுண்டரும் செய்த திருப்பணி குறிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டு :**

1. விய வருஷம் சித்திரை மாசம் முதல் தியதி
2. தென்முகம் வெள்ளோடு காணியாளரில்
3. சாத்தந்தை குல ராக்கியாக் கவுண்டர் மக்கள்
4. மாரப்ப கவுண்டர் முத்துக் கவுண்டர்
5. உபயம் உ

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1228/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | 19-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | வெள்ளோடு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 9 |
| அரசன் | : | - | | | |

இடம் : வெள்ளோடு ராசாக்கோயில் குதிரையான் பீடம் மேற்குப் புறம்.

குறிப்புரை : நல்லைய கவுண்டர் பாளையம் முதலியாக் கவுண்டர் மகன் காசியிலிங்கக்கவுண்டர் குதிரை உருவம் செய்து வைத்தார். நல்லைய கவுண்டம்பாளையம் இப்போது நல்லியம்பாளையம் என வழங்குகிறது. முதலியாக் கவுண்டர், முதலிக் கவுண்டர் என்று கொங்கு வேளாளர்களில் பலர் பெயர் வைத்துக் கொண்டுள்ளனர். பருத்திப்பள்ளி செல்ல குலத்தலைவர் ஒருவருக்கு விசயநகர மன்னன் "முதலிக்காமிண்டன்"என்று பட்டப் பெயர் அளித்தான். முதன்மையானவர் என்பது இதன் பொருள்.

**கல்வெட்டு :**

1. வெள்ளோடு நல்லைய கவுண்டர்பாளையம்
2. சாத்தந்தை நல்லைய கவுண்டன் குமாரன்
3. முதலியாக் கவுண்டன் குமாரன் காசி
4. லிங்கக் கவுண்டர் உபயம்.

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 1229/2003**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.19-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | வெள்ளோடு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 10-14 |
| அரசன் | : | - | | | |

இடம் : வெள்ளோட்டில் மூன்று கோயில்களில் உள்ள ஐந்து தூரிகளில் அதை அமைத்தவர் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

குறிப்புரை :

**இராசாகக் கோயில்**

முதல் தூரி : கணக்குப்பிள்ளைகள் உபயம்

இரண்டாம் தூரி : பிரமாதி வருஷம் மார்கழி மாதம் ய தேதி கூ பெருந்தெழு வெள்ளை ஆண்டி மகன் நஞ்சைய ஆண்டி உபயம்

**அண்ணமார்க் கோயில்**

முதல் தூரி : செவ்வருங்காடு பூசாரி ராம நாயக்கர் உபயம்

இரண்டாம் தூரி : சர்வசித்தி வருஷம் ஐப்பசி மாதம் தேதி குலவிளக்குச் சேர்ந்த பாண்டிபாளையத்திலிருக்கும் கறுப்ப கவுண்டர் குப்பக் கவுண்டர் செங்கோடகவுண்டர் இவர்கள் நால்வரும் உபயம்

**மாரியம்மன் தூரி**

சிறுவங்காட்டு வலசு செல்ல மூப்பன் மகன் நாச்சி மூப்பன் தூரி மாரியம்மனுக்குஉபயம்

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 3 |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1171 |
| ஊர் | : வெள்ளோடு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 2301/967-68 |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : தமிழ் | | | |
| அரசு | : கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 15 |
| அரசன் | : திரிபுவனவீரதேவன் மூன்றாம் வீரசோழன் | | | |

இடம் : வெள்ளேடு சர்வலிங்கேசுவரர் கோயில் கருவறை அர்த்தமண்டபம் தென்புறச்சுவர்..

குறிப்புரை : கொங்கு உள்நாட்டுச் சபையார்கட்கும், கொங்கு நாட்டுத் தானத்தார்கட்கும் அரசன் அளித்த ஓலை.

**கல்வெட்டு :**

1. . . . திரிபுவனச் சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான் நறையனூர் நாடும் . . . அறுக . . . கொன் . . ச்சிய பொங்கலூர்க்கா நாடும்
2. தென்கரை நாடும் அரைய நாடும் கிழங்க நாடும் வலிப்புக்கா நாடும் குறுப்பு நாடும் வடபரிசார நாடும்
3. காஞ்சிக் கூவல் நாடும் . . . சிவப்பிராமணர்க் காணியாளர்க்கும் தானத்தார்க்கும் வெஞ்ச மாக்கூடல் . . . .

## த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 1231/2003

மாவட்டம் : ஈரோடு

வட்டம் : பெருந்துறை

ஊர் : வெள்ளிரவளி

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : -

அரசன் : -

ஆட்சி ஆண்டு : -

வரலாற்று ஆண்டு : சகம் 1726, கி.பி.1804

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : -

முன் பதிப்பு : -

ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : வெள்ளிரவெளி மாங்குட்டையிலிருக்கும் கரியகாளியம்மன் கோயில் மேற்குச் சுவர்..

குறிப்புரை : குறுப்புநாடு குன்னத்தூர் வெள்ளிரவெளி வெள்ளோடு சேர்ந்த திருவேங்கடக் கவுண்டன் மகன் சுப்பிரமணியக் கவுண்டன் மகன் சுப்பிரமணியக் கவுண்டர் கரியகாளியம்மன் கோயில் முழுவதும் திருப்பணி முடித்துக் குடமுழுக்கு விழாவும் சிறப்பாக நடத்தினார்.

### கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சாலிய வாகன சகாப்தம் ௲௭௱௨௰௬ கலியுக சகாப்தம்
2. ௪௲௯௱௫ யிதின்மேல் செல்லாநின்ற ரத்தாட்சி வருஷம்
3. புரட்டாசி மாதம் ௩௰ தியதி சனிக்கிழமை விஜயதசமி
4. திருவோண நட்சத்திரம் திருவிநாமயோகமும் கூடின
5. சுபதினத்தில் குன்றத்தூர் வெள்ளிரவெளி கரியகாளியம்மன்
6. னுடைய கோயில் திருப்பணி ஆரம்பம் மகாரா ரா ஸ்ரீ
7. யிங்கிலீசு கும்பினியார் நாளில் கெர்ப்பக்கிரகம்
8. அர்த்தமண்டபம் மகாமண்டபம் சுத்துப் பிரகாரத் திருமதில்
9. ரதநிர்மானமும் உண்டுபண்ணி யிதினுடன் குரோதன

10. வருஷம் புரட்டாசி மாதம் உ௰எ தியதி வியாழக்கிழமை அமர

11. பட்சத்து துதிகை அசுபதி நட்சத்திரம் வச்சிரநாம

12. யோகம் தைதுல வாகரணமும் அமிர்த யோகமும் பெற்ற

13. நாளில் கெர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம்

14. விக்கிரகம் முதலான சம்புரோட்சனைகளும் செய்து

15. மகா சம்புரோட்சனையும் செய்து ரதோற்சவமும்

16. நடப்பிச்சவன் குறுப்புநாடு குன்றத்தூர் வெள்ளிரவெளி

17. காணியாளக் கவுண்டர்களில் வெள்ளோடு சாத்தந்தை

18. கோத்திரத்தில் திருவேங்கடக்கவுண்டன் குமாரன்

19. சுப்பிரமணியக் கவுண்டன் புத்திரன் சின்னப்ப கவுண்டன்

20. உபயம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | சார்வரி கி.பி.1850 |
| ஊர் | : | கவுண்டச்சிபாளையம் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 2301/967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| அரசன் | : | - | | | |

இடம் : கவுண்டச்சிபாளையம் பாலமடையம்மன் கோயில் முன்மண்டபம் விதானம்.

குறிப்புரை : கனகபுரம் பழனிவேலப்ப கவுண்டர் மகன் கொளந்தவேல் கவுண்டர் பாலமுடையம்மன் கோயில் திருப்பணி செய்தார்.

**கல்வெட்டு :**

1. ராமசெயம் சுபமஸ்து விசயாப்புதய சாலிவாகன
2. சகாப்தம் ௲௭௱௭௰௨ கலியுக சகாப்தம் ௪௲௯௱௫௰௧ க்கு
3. மேல் நடக்கும் சார்வரி வருஷம் தை மாதம் ௨௰௫ தியதி
4. பெற்ற நவமி வெள்ளிக்கிழமை . . . நட்சத்திரம் சவுபாக்கிய
5. நாமயோகம் இந்த சுபதினத்தில் சாத்தந்தி கோத்திரம்
6. காலிங்கராயன் வம்மிச வெள்ளோடு கனகபுரம்
7. காசிலிங்க கவுண்டன் மகன் முத்துக்கவுண்டன் மகன்
8. பழனிவேலப்ப கவுண்டன் மகன் கொளந்தவேல் கவுண்டன்
9. செய்விச்ச பாலமுடி அம்மன் கோயில் திருப்பணி
10. வேலை முடிந்தது உபயம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.16-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | நசியனூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 227/1964 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | உம்மத்தூர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| அரசன் | : | நஞ்சராய உடையார் | | | |

இடம் : மூவேந்திரமுடையார் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : பூந்துறை நாட்டுச் சபையார் அனைவரும் நசியனூரில் கூடி மூவேந்தீசுவரர் கோயிலில் மகாமண்டபம் கட்டவும், திருவிளக்கு, திருப்பரிவட்டம், திருநாள் தேவைக்காக நிலக் கொடை அளித்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்ரீமன் நஞ்சராய உடையார்க்குச் செல்லா
2. நின்ற காலத்து மேல்கரைப் பூந்துறை நாட்டோம்
3. எங்கள் நாட்டு நசையனூரில் நிறைவற நிறைந்து குறை
4. வறக்கூடி வாட்டம் இன்றிக் கூட்டம் பெருக மணி மண்டபத்திலிருந்து
5. மண்டபம் மகாமண்டபம் எடுப்பித்து திரு
6. விளக்கு திருப்பரிவட்டம் திருநாள் தேவைக்கும்
7. பலபடி நிபந்தத்திற்கும் தாரவார்த்துக்
8. குடுத்தோம் . லச்சீர்மை நாற்பாங்கெல்லைக் குள்பட்ட
9. நஞ்சை புஞ்சை மேல்நோக்கிய மரம் கீழ்நோக்கிய
10. கிணறு இறைமுறை நல்லெருது நற்பசு தறி ஆயம்
11. தட்டார்ப்பாட்டம் . . . குடுத்தோம் தன்மத்தை

12. நடத்துகையில் யாதொருத்தன் நடத்தினான்

13. அசுவமேதயாகம் செய்தவனாவான் விலக்கின

14. வர்கள் கங்கைக் கரையில் காராம்பசுவைக்

15. கொன்ற பாவத்திலே போவார்களாகவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | துந்துபி |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1442 |
| ஊர் | : | நசியனூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 228/1964 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | விசயநகரர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| அரசன் | : | குமாரவிருப்பாட்சிராயர் | | | |

இடம் : மூவேந்திரமுடையார் கோயில் தெற்குச் சுவர்.

குறிப்புரை : நசியனூர் மூவேந்தீசுவரருக்கு விழா எடுக்க குடிக்கு ஒரு பணம் தவறாமல் கொடுக்க வேண்டும் எனத் தீர்மானம் செய்தனர்.

**கல்வெட்டு :**

1. ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் இராயர் ஸ்ரீமன் குமார
2. விருப்பாட்சிராயர்க்குச் செல்லா நின்ற துந்துபி
3. வருஷம் அய்ப்பசி மாதம் பூந்துறை நாட்டு
4. நசையனூர் மூவேந்திரமுடையார்க்கு விழா நடை
5. பெற குடிக்கொருபணம் குடுக்கக் கடவோம்
6. சந்திராதித்தவரை செலுத்தக்கடவதாகவும்
7. இந்த தன்மத்தை அல்லாவென்றவர்கள் கெங்கைக்
8. கரையில் காராம்பசுவையும் ஏழுபிராமணரையும்
9. வதை செய்தவன் பாவமும் ஏசிக்கொள்ளக்
10. கடவனாகவும்
11. நயினார் சிவமாலை எழுத்து பொக்கத் தேவன்
12. எழுத்து.

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 114/2005**

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.16-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : நசியனூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 229/1964 |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : தமிழ் | | | |
| அரசு | : விசயநகரர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 3 |
| அரசன் | : கெம்பைய உடையார் | | | |

இடம் : மூவேந்திரமுடையார் கோயில் மேற்கு, தெற்குச் சுவர்.

குறிப்புரை : நசியனூர் மூவேந்தீசுவரருக்குக் கெம்பைய உடையார் பூமி தேவதானம் கொடுத்தார். குளமும் நிலமும் குடிநீங்காத் தேவதானமாகக் கொடுக்கப்பட்டது.

**கல்வெட்டு :**

1. ஸ்ரீமன் இராயர் திருமக்கள் கெடிமன்னியர் கண்டன் கெம்பைய உடையாரவர்கள் பூமிதேவதானம் குடுத்தபடி
2. நசையனூர் உடையார் மூவேந்திரமுடைய சோழீசுர தம்பிரானார்க்கு மேற்படியூர்க் குளத்திலும் நிலத்திலும் குடி நீங்கா
3. தேவதானமாகக் குடுத்தமைக்கு சந்திராதித்தர்வரை நடத்தக்கடவதாகவும் இந்த தன்மத்தை விலக்கினவர் கெங்கைக் கரையிலும் காவேரிக் கரையிலும்
4. காராம் பசுவையும் தன்மத்தையும் கொன்ற பாவத்திலே போகக் கடவாராகவும்

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 115/2005**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.16-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | நசியனூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 230/1964 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 4 |
| அரசன் | : | - | | | |

இடம் : மூவேந்திரமுடையார் கோயில் தனிக் கல்.

குறிப்புரை : நசியனூர் மூவேந்தீசுவரருக்குப் பூரத்துப் பணமும், மணவரளிப் பணமும் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**கல்வெட்டு :**

1. மூவேந்திமுடையார்க்கு நசையனூர் பூரத்துப் பணமும்
2. மணவரளிப் பணமும் சந்திராதித்தர் வரைக்கும்
3. நடத்தக் கடவோமாகவும் இது விலக்கினவன் பிராமணரை
4. வதைத்தவன் பாவத்திலே போகக் கடவானாகவும்.

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 116/2005**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | தாரண |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1464 |
| ஊர் | : | நசியனூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 231/1964 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | விசயநகர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 5 |
| அரசன் | : | குமார விருப்பாட்சியர் | | | |
| இடம் | : | மூவேந்திரமுடையார் கோயில் அம்மன் சன்னதி. | | | |
| குறிப்புரை | : | நசியனூர் மூவேந்தீசுவரருக்குப் பாம்பாடி கோபாலன் பொன் மூலப்பொருளாகக் கொடுத்தார். அதற்கு வட்டியாக இரண்டு பணம் அளிக்க ஒப்புக் கொண்டனர். | | | |

**கல்வெட்டு :**

1. உடையார் ஸ்ரீமன் குமார விருப்பாட்சியர் அவர்கள்
2. தாரண வருஷம் தைமாதம் 15 தேதி மேல்கரைப் பூந்துறை நாட்டு
3. நசையனூர் மூவேந்திசுவரமுடைய தம்பிரானார்க்கு காணிக்கை பாம்பாடி கோபா
4. லன் இட்டபொன்னுக்கு இரண்டு பணமாகத் தாரைவார்த்துக் குடுத்தோம் இந்த தன்மம்
5. சந்திராதித்தர்வரை செல்வதாகவும் இந்த தன்மத்தை விலக்கினவர்கள் கங்கைக்கரை
6. யிலே காராம்பசுவைக் கொன்ற பாவத்திலே போகக் கடவானாகவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | ரவுத்திரி வருடம் |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.16-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | நசியனூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 232/1964 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | உம்மத்தூர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 6 |
| அரசன் | : | வீர நஞ்சராய உடையார் | | | |

இடம் : அம்மன் கோயில் உள்மண்டபம் மேல்புறத் தூண்.

குறிப்புரை : நசியனூர் மூவேந்தீசுவரருக்கு நசியனூர் கண்ணகுலப் பெற்றபெருமாள் அழைப்பிச்சான் என்பவர் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் கட்டும் போது நாட்டுக் கணக்கு திருமலைநாதர் கோப்பணன் இரண்டு தூண்களைத் தம் உபயமாக அளித்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீம
2. ண்டலேசுவ
3. ரன் ஸ்ரீவீரநஞ்
4. சராய உடையா
5. ர்க்குச் செல்லா நி
6. ன்ற ரவுத்திரி வரு
7. ஷம் சித்திரை மாதம்
8. 5ஆம் தேதி மேல்கரை
9. ப் பூந்துறை
10. நாட்டு நசைய

11. னூரும் ஊரவரும்
12. மேற்படி
13. யூரில் வெள்ளா
14. ளன் கண்ணர்க
15. ளில் பெற்ற பெ
16. ருமாள் அழைப்
17. பிச்சான் நம் உடை
18. யவர் முவேந்
19. திரமுடைய த
20. ம்பிரானார் கெர்ப்ப
21. க்கிரகம் அர்த்த
22. மண்டபம் மகா
23. மண்டபம் கட்
24. டுகையில் மே
25. ற்படி நாட்டு மே
26. ற்படியூரில்
27. தருளக்கினிய
28. ரில் கௌசியகோ
29. த்திரத்து நா
30. ட்டுக் கணக்கு
31. த் திருமலைநா
32. தப் கோப்
33. பணன் இட்ட தூண்
34. இரண்டு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | நந்தன |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1772 |
| ஊர் | : | நசியனூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 233/1964 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 7 |
| அரசன் | : | - | | | |

இடம் : மூவேந்தீசுவரமுடையார் கோயில் பிள்ளையார் கோயில் சுவர்.

குறிப்புரை : நசியனூர் மூவேந்தீசுவரர் கோயிலில் பிள்ளையார் கோயிலை நசியனூர்க் காணியாளரில் ஒருவராகிய செம்பகுலத்தார் கட்டினர்.

## கல்வெட்டு :

1. நந்தன வருஷம் கார்த்திகை மாதம்
2. 10ஆம் தேதி நசையனூர்க் காணி
3. யாளரில் செம்பொன் குலம்
4. விக்கினேசுவரன் கோயில்
5. சின்னிய கவுண்டன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : ஈரோடு | | ஆட்சி ஆண்டு | : தன்முகி, சித்திரை |
| வட்டம் : பெருந்துறை | | வரலாற்று ஆண்டு | : கி.பி.1536 |
| ஊர் : நசியனூர் | | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 232/1964 |
| மொழி : தமிழ் | | முன் பதிப்பு | : - |
| எழுத்து : தமிழ் | | | |
| அரசு : விசயநகர் | | ஊர்க் கல்வெட்டு எண் | : 8 |
| அரசன் : அச்சுதராயர் | | | |

இடம் : எழுத்துப் பாறைக்காட்டுப்பாறை (முனியப்பன் கோயில்வடபுறம்).

குறிப்புரை : நசியனூர் ஊரவரும், காணியாளர்களும், கட்டுகல்லையும் ஒன்றாகக் கூடி ஊர்க் கணக்கர் பெரியபெருமாள் தாமோதரப்பிள்ளைக்கும் கோப்பணவேள் பிள்ளைக்கும் கணக்கு மாணிபக்காடு கொடையாகத் தந்தனர்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்தி ஸ்ரீமகாமன் பிரதாபச் சக்கரவர்த்தி
2. மகாபயங்கரன் ஸ்ரீ வீரமகாராயர் அச்சுராயர் காரியத்தக்குக்
3. கடவதானவரில் தேவர்க்குத் துன்முகி வருஷம் சித்திரை
4. மாதம் 1ஆம் தேதி நசையனூரு ஊரவரும்
5. காணியாளரும் கட்டுகல்லையும் கூடி எங்களூர்க் கணக்கு
6. திருக்கையில் சோழியரில் கவுசிய கோத்திரத்துப்
7. பெரியபெருமாள் தாமோதரப்பிள்ளைக்கும் கோப்பணவேள்
8. பிள்ளைக்கும் கணக்கு மாணிபக்காடு குடுத்தோம்
9. கம்மாளன் குட்டைக்குக் கிழக்கும் காரைமடைக்குத்
10. தெற்கும் கையிட்டேரிக்கு மேற்கும் ஈரோட்டு
11. இட்டேரிக்கும் திண்டல் இட்டேரிக்கும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1827 |
| ஊர் | : | நசியனூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 9 |
| அரசன் | : | - | | | |

இடம் : ஆதிநாரயணப் பெருமாள் கோயில் முன்மண்டபம் இடப்புற விதானம்.

குறிப்புரை : தயிர்ப்பாளையம் வேலப்பகவுண்டர் கட்டிய கல்மண்டபம் பழுதடைந்ததால் வேலப்ப கவுண்டர் அவர்களின் வம்சத்தார் ஆகிய நசியனூர்க் கூறை குலத்தார் பழுது பார்த்துப் புதுப்பித்தனர்.

**கல்வெட்டு :**

1. கலியுகம் 4928 ஆவணி மாதம் 17
2. தேதியில் தயிர்ப்பாளையம் ந.வேலப்ப கவுண்
3. டர் கட்டிய இக்கல் மண்டபத்தை கலியுகா
4. தி 5040 வருஷம் ஆவணி மாதம் இம்மண்டபத்தை
5. நசியனூர் கூற குலம் வேலப்ப கவுண்டர் வம்
6. ச வகையோரால் ரிப்பேர் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | : ஈரோடு | ஆட்சி ஆண்டு | : - |
| வட்டம் | : பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : கி.பி.1940 |
| ஊர் | : நசியனூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : - |
| மொழி | : தமிழ் | முன் பதிப்பு | : - |
| எழுத்து | : தமிழ் | | |
| அரசு | : - | ஊர்க் கல்வெட்டு எண் | : 10 |
| அரசன் | : - | | |

இடம் : ஆதிநாரயணப் பெருமாள் கோயில் முன்மண்டபம் வலப்புற விதானம்.

குறிப்புரை : தயிர்ப்பாளையம் நல்லய்ய கவுண்டர் மகன் வேலப்ப கவுண்டர் ஆதிநாராயணப் பெருமாள் கோயில் கொறட்டு வாசல் மண்டபத்தைக் கி.பி. 1827-ஆம் ஆண்டு கட்டியிருந்தார். நசியனூர் கூறை குல கோத்திரத்தார் பாவுகல் பதித்து மண்டபத்தை கி.பி. 1940இல் புதுப்பித்தனர்.

**கல்வெட்டு :**

1. சேர்திக விசுவாயுத சாலி கலி 4928க்குச் செல்லான
2. சர்வசித்து வருஷம் ஆவணிமாதம் 17ந் தேதி வெள்ளிக்கிழமை
3. மூலநட்சத்திரம் பிரிதியோக கௌளகரணம் கூடிய சுபதினத்தில்
4. பூந்துறை நாடு நசியனூருக்குச் சேந்த தையிர்பாளையம்
5. நல்லய கவுண்டர் குமாரர் வேலப்ப கவுண்டர் நசியனூர் ஆதி
6. நாரயணப் பெருமாள் முன் கொரட்டுவாசல் மண்ட
7. பம் இம் மண்டபத்தை சாலி 1862 கலி 5041 வருஷம் செல்லா
8. நின்ற பிரமாதீச ஆவணி மாதம் 16 தேதி வெள்ளிக்கிழமையும்
9. . . . திதி உத்திரட்டாதியும் சித்தியோகமும்
10. கறச கரணம் கூடிய சுபதினத்தில் நசியனூர்க்கூற

11. குல கோத்திரத்தார்

12. பாவு கல்லும் மேற்படி மண்டபம் புதுப்பிக்கப்

13. பட்டது ஆதிநாராயணப் பெருமாள் சன்னதி

14. முன் கொரட்டு வாசல் உபயம்.

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 122/2005**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.19-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | நசியனூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 11 |
| அரசன் | : | - | | | |

இடம் : நசியனூர் மதுரகாளியம்மன் கோயில் செம்புவேல்.

குறிப்புரை : நசியனூர் மதுரகாளியம்மன் கோயிலில் செம்பு வேல் ஒன்று உள்ளது. நசியனூர் அமராபதிக்கவுண்டர் அளித்த பொருளால் விசுவகுலச் சித்தலிங்கம் என்பவர் அதைச் செய்ததாகவும் வேலில் எழுதப்பட்டுள்ளது.

## கல்வெட்டு : செம்பு வேல் பொறிப்பு

1. நசையனூர் அமராவதிக் கவுண்டன்
2. மதுர காளியம்மனுக்கு
3. பார்ப்பத்திய குல விசுவ வங்கிஷத்தில்
4. நோட்டம் சித்தலிங்கம் உ

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 123/2005**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 7 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | மொசக்குத்திவலசு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 1 |
| அரசன் | : | குலோத்துங்க சோழன் | | | |

இடம் : மொசக்குத்தி வலசு உத்தம சோழீசுவரன் கோயில் நுழைவாயில் வலப்புறம்.

குறிப்புரை : வீரசோழ வளநாட்டு உத்தமசோழச் சதுர்வேதி மங்கலத்துத் திட்டைக் கோயில் நம்பி என்பவர் உத்தம சோழீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைக்க ஒரு அச்சு அளித்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு ஏழாவது வீரசோழவளநாட்டு உத்தமசோழச் சதுவேதிமங்கலத்து திட்டை . . .
2. க்கோயில் நம்பியேன் இந்நாயனார் உத்தமசேழீஸ்வர முடையாற்குச் சந்தியா தீபத்துக்கு ஒடுக்கின அச்சொன்று இவ்வச்சொன்றுங் கைக் . . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 11 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.13-ஆம் நூற்றாண்டு (கி.பி. 1218) |
| ஊர் | : | மொசக்குத்திவலசு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : மொசக்குத்தி வலசு உத்தம சோழீசுவரன் கோயில் நுழைவாயில் இடப்புறம்.

குறிப்புரை : வீரசோழ வளநாட்டு உத்தமசோழச் சதுர்வேதி மங்கலத்தில் வாழும் காவல வேட்டுவரில் கறையர் குல செயகங்கனான தம்பிரான் தோழன் சிவராத்திரி பூசைகளுக்காகப் பண்டாரத்தில் ஒன்றரை அச்சு மூலப் பொருளாக வைத்தான். மூன்று கல நெல் பூசைக்கு அளிக்கப்பட்டது.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு பதிந்ஒன்றாவது வீரசோழ வளநாட்டு உத்தமசோழச் சதுவேதிமங்கலத்து இருக்கும் காவலந்கறையரில் செயகங்கநாந தம்
2. பிரான் தோழந்நேன் இந்நாயநார் உத்தம சோழீய்ச்சரமுடையார்க்கு சிவராத்திரிக்கு பண்டாரத்தில் ஒடுக்கின அச்சு ஒன்றரையுக்கும் காலால் முக்கல நெல் சந்திராதித்தபலம் செல்வதாக இத்தந்மம் . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | பவ |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1334 |
| ஊர் | : | மொசக்குத்திவலசு | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | போசளர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 3 |
| அரசன் | : | வீரவல்லாளன் | | | |

இடம் : மொசக்குத்தி வலசு வேடன் காட்டில் நடப்பட்டுள்ள தனிக் கல்.

குறிப்புரை : இம்மடி ராகுத்தராய யாதப்பத் தெண்ணாயக்கர் மகன் சிங்கயத் தெண்ணாயக்கர் சேவூர் அமரப் பெருமாளுக்கு உத்தம சோழச் சதுர்வேதி மங்கலத்தைத் திருவிடையாட்டமாக அளித்தார். இவர் மூன்றாம் வீரவல்லாளனின் தளபதியாவார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தே
2. வர் பிருத்விராஜ்யம் ப
3. ண்ணி அருளாநின்ற ப
4. வ சம்வத்ஸரத்து தை மா
5. த முதல் மோடகுலைய குல க
6. மல மாத்தண்ட சித்தர
7. கண்ட இம்மடி ராகுத்த
8. ராய யாதப்ப தெண்ணாயக்
9. கர் குமாரர் சிங்கய தெண்
10. ணாயக்கரேன் வடபரிசார
11. நாட்டு சேவூரான செம்பி
12. யன் கிழானடி நல்லூர்

13. திருமேற்கோயில் நாய

14. னார் அழக பெருமாளு

15. க்கு வீரசோழ வளநாட்

16. டு உத்தமசோழச் சதுவே

17. திமங்கலம் இன்னா

18. யினார் திருவிடையா

19. ட்டமாக ஸர்வமானிய

20. மும் உதகம் பண்ணி

21. குடுத்தேன் இப்படி செ

22. ம்பிலும் சிலையிலும்

23. வெட்டிக் கொள்வார்கள

24. ாக உதகம் பண்ணிக்குடு

25. த்தேன் சங்கம தெண்ணாய

26. க்கரேன் இது ஸ்ரீவை

27. ஷ்ணவர் ரகைஷ பன்

28. மாஹேஸ்வரர் ரகைஷ

## த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் :- 126/2005

மாவட்டம் : ஈரோடு

ஆட்சி ஆண்டு : தாது வருடம்

வட்டம் : பெருந்துறை

வரலாற்று ஆண்டு : கி.பி.1336

ஊர் : மொசக்குத்திவலசு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 231/1980

மொழி : தமிழ்

முன் பதிப்பு : -

எழுத்து : தமிழ்

அரசு : போசளர்

ஊர்க் கல்வெட்டு எண் : 4

அரசன் : வீரவல்லாளன்

இடம் : மொசக்குத்தி வலசில் உள்ள அருமை நாச்சியம்மன் கோயிலில் உள்ள தனிக் கல்.

குறிப்புரை : வீரசோழ வளநாட்டு வயிரன்பள்ளியான உத்தமசோழச் சதுர்வேதி மங்கலத்தில் தெய்வத்தையும், கோயிலையும் வயிரம்பள்ளியைச் சேர்ந்த சொட்டை சிக்க கோபாலன் தம் கொடையாகத் தந்தார்.

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ வீ
2. ரவல்லாள
3. தேவர் பிருத்
4. விராஜ்யம்
5. பண்ணி அ
6. ருளாநின்
7. ற தாது சம்
8. வத்சரத்
9. து அற்பசி மா
10. தம் வீர
11. சோழவள
12. நாட்டு வ
13. யிரன் பள்
14. ளியான உ
15. த்தம சோ
16. ழச்சதுர்வே
17. திமங்கல
18. த்து தேவ்
19. வும் கோயி
20. லும் இவ்வூ
21. ர் சொட்டை
22. சிக்ககோபலன் . . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : ஈரோடு | | ஆட்சி ஆண்டு | : கர |
| வட்டம் : பெருந்துறை | | வரலாற்று ஆண்டு | : கி.பி.1531 |
| ஊர் : பிடாரியூர் | | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : 224/1967-68 |
| மொழி : தமிழ் | | முன் பதிப்பு | : - |
| எழுத்து : தமிழ் | | | |
| அரசு : விஜயநகரம் | | ஊர்க் கல்வெட்டு எண் | : 1 |
| அரசன் : அச்சுதராயர் | | | |

இடம் : மாரப்ப கவுண்டர் தோட்டத்தில் கிடக்கும் பலகைக் கல்.

குறிப்புரை : சென்னிமலை வேலவர்க்குப் பிடாரியூரின் உபயமார்க்கத்து தீர்வை(வரி) கொடையாக அளிக்கப்பட்டது. பிடாரியூருக்கு வரும் பொருள்கள், பிடாரியூரிலிருந்து விற்பனைக்கு வெளியே செல்லும் பொருள்கள் இவையே உபயமார்க்கமாகும்.

அச்சுராயர் (1529-1542) காலத்தில் மதுரையின் முதல் நாயக்க மன்னர் விசுவாத நாயக்கர் (1529-1564) காலத்தில் இக்கொடை வழங்கப்பட்டது.

**கல்வெட்டு :**

1. ஸ்ரீ கர யாண்டு
2. ஸுவத்தி ஸ்ரீ ஊன் ஊஹாஊண்ட
3. லேசுறன் அரியராய விபாட
4. ன் பாசைக்குத் தப்புராயர்
5. கண்டன் . . .
6. திறை கொண்டருளிய
7. . . . அச்சுதராயர்
8. காரியத்துக்குக் கந்தரான விசுவ
9. நாதநாயக்கரும் . . . (ணம) நாய

10. க்கர் . . . . . .

11. . . பூந்துறை நாட்டுப் பிடாரியூரில்

12. சென்னிமலை வேலப்பற்கு பிடாரியூரில்

13. உபைய மாற்கற்துத் [தீ]ர்வை தச்

14. சைகாரத்தி[கைய்]யாதொருவர் கொ

15. ண்டதும் உதகம் பண்ணிக்குடு

16. த்தோம் யிந்தத் தன்மத்தை

17. [வளர்த்தவன் அசுவமேதயாகம் செய்த

18. புண்ணியம் பெறுவான் அல்லவென்றவன்

19. [கங்கைக்]க்கரையில் காராம்பசு

20. வையும் தன் குருவையும் தன் மா

21. தா பிதாவையும் கொன்ற தோ

22. ஷத்திலே போக கடவராகவும்

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 128/2005**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | ஆங்கிரச |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1572 |
| ஊர் | : | பிடாரியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | 225/1967-68 |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | மதுரை நாயக்கர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| அரசன் | : | வீரப்ப நாயக்கர் | | | |

இடம் : சிவன் கோயில் மேற்குபுறம், கருப்பண்ண கவுண்டர் தோட்டத்தில் உள்ள கல்.

குறிப்புரை : மதுரை நாயக்க மன்னர் கிருஷ்ணப்ப நாயக்கர் (1564-1572) மகன் வீரப்ப நாயக்கரின் (1572-1595) அதிகாரிகள் ஈரோட்டிலிருந்து மேல்கரைப் பூந்துறை நாட்டை நிர்வகிக்கும்போது பிடாரியூரில் இருந்த மாடகூட மணிமண்டபத்தில் நாட்டுச் சபை கூடி முடிவு செய்து பட்டயம் எழுதிய செய்தி கூறப்படுகிறது. பிடாரியூரிக்குக் குடி வருவோர் ஐந்து பணம் செலுத்த வேண்டும் என்ற குறிப்பு இறுதியில் காணப்படுகிறது..

**கல்வெட்டு :**

1. ஆங்கிரஸ
2. ஷ காத்திகை மா
3. தம் உயஉ [கிஷ்ண]நா
4. யக்கர் வீரப்ப ந[ா]
5. யக்கருக்கு செல்
6. லா நின்ற கால
7. த்து . . . த்தில்
8. லர சஇதகா[ன்]
9. மேல் கரைப் பூ
10. ந்துறை நாட்டு

11. யீரோட்டிலிருந்
12. து பிறிதிவிறாச்சிய
13. ம் பண்ணி செல்
14. லா நின்ற நாளி
15. ல் விட்டில்பனா
16. யநவர்கள் நட
17. த்து நாள் பிடா
18. ரியூரில் [மாடகூ]
19. ட மணிமண்ட
20. பத்திலிருந்து
21. நாட்டுச் ச
22. . யத்தம் நட
23. . . . நா
24. . . . பட
25. . . . ாயருமு
26. . . . வரும் ெ
27. . . . ங்க .
28. . . . யார்
29. . . . பில்பட்
30. . . . டயம்
31. டியிருந்து
32. எளுதின க
33. ல்வெட்டு
34. ப்படி . அை
35. டப்புபள் . பி
36. [ட]ரியூருக்கு
37. வந்த குடிக
38. . . . ருங்/கு
39. டி ரு அஞ்சு
40. பணம்
41. . . . .

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 129/2005**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | 15+3 |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1225 |
| ஊர் | : | பிடாரியூர் | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | கொங்குச் சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 3 |
| அரசன் | : | வீரராசேந்திரன் | | | |

இடம் : திருபிராட்டியம்மன் கருவறை நிலை கால்.

குறிப்புரை : பிடாரியூர் தேவரடியார் காமிண்டனான மாணிக்கச்சதிரன் நிலைகால்கள் செய்தளித்ததைத் தெரிவிக்கிறது.

பூந்துறை நாடு இக்கல்வெட்டு ஒன்றில்தான் பழம்பூந்துறை நாடு என்று குறிக்கப்படுகிறது. அம்மன் பெயர் பிடாரி. இன்று பிராட்டியம்மன் என்று அழைக்கப்படுகிறார். ஆண்களும் தேரடியாராக மாணிக்கன், சதிரன் என்று பெயர் பெற்றுள்ளனர்.

**கல்வெட்டு :**

**வலப்புறம்**

1. ஸ்வஸ்திஸ்ரீ ந
2. ன்மங்கல
3. ஞ்சிறக்க வீரரா
4. ஜேந்திர தேவற்கு
5. யாண்டு பதிந்
6. நைஞ்சாவது
7. க்கெதிர் மூந்றா
8. வது மேகரை
9. ப்பழம்பூந்து
10. றைநாட்டு பி
11. டாரியூர் பிடா
12. ரிகோயிற் தி
13. ரு நிலைகால் செ
14. சய்வித்தேன்
15. வ்வூர் தேவரடிய
16. ாரில் காமிண்ட
17. னான மாணிக்க
18. ச்சதிரனேன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | சாலிவாகனம் 1641<br>கி.பி.1719 |
| ஊர் | : | சென்னிமலை | இந்தியக் கல்வெட்டு<br>ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு<br>எண் | : | 1 |
| அரசன் | : | - | | | |

இடம் : மலைக் கோயில் கருவறை நிலைகால் இடப்புறம்.

குறிப்புரை : வேலர் கோயில் கட்டிய விபரம் குறிக்கப்பட்டுள்ளது. சாலிவாகன சகம், என்பதற்குப் பதிலாக கலியுகம் எனத் தவறாக எழுதப்பட்டுள்ளது. (காலக் குறிப்பு தவறாக உள்ளது).

**கல்வெட்டு :**

1. ஸ்வஸ்திஸ்ரீ மகா
2. மண்டலேசுவரன்
3. கலியுகம் *சகூசூாசயிக*
4. க்கு மேல் செல்லா
5. நின்ற விப சம்வத்
6. சரத்து பங்குனி *மீ*
7. தியதி சென்னிமலை
8. வேலவருக்கும் . . . . .
9. வள்ளிக்கும் திருக்
10. கோயில் காரியம்

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 131/2005**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | சோபகிருது |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1723 |
| ஊர் | : | சென்னிமலை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | மைசூர் | ஊர்க் கல்வெட்டு எண் | : | 2 |
| அரசன் | : | தேவராச உடையார் | | | |

இடம் : சென்னிமலை மலைக்கோயில் நுழைவாயில் விதானம்.

குறிப்புரை : பூந்துறை வேலத்தட்டான் மகன் பழனித்தட்டான் நுழைவாயில் திருப்பணி செய்தார். (சென்னிமலை அருணகிரிநாதர் பாடல் பெற்ற முருகன் திருத்தலம்).

**கல்வெட்டு :**

1. சோபகிருது வருஷம் பங்குனி மாதம் ய தேதி தேவராச
2. உடையார் காரியத்துக்குக் கர்த்தரான முத்து வசவையணவர்கள்
3. நாளில் பூந்துறை வேலத்தட்டான் மகன் பழனித் தட்டான்
4. சதாசேர்வை.

**த.நா.அ. தொல்லியல் துறை** **தொடர் எண் :- 132/2005**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | : | ஈரோடு | ஆட்சி ஆண்டு | : | - |
| வட்டம் | : | பெருந்துறை | வரலாற்று ஆண்டு | : | கி.பி.1856 |
| ஊர் | : | சென்னிமலை | இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை | : | - |
| மொழி | : | தமிழ் | முன் பதிப்பு | : | - |
| எழுத்து | : | தமிழ் | | | |
| அரசு | : | - | ஊர்க் கல்வெட்டு எண் | : | 3 |
| அரசன் | : | - | | | |

இடம் : மலைக் கோயில் மடப்பள்ளி மேற்குச் சுவர்.

குறிப்புரை : கள்ளிப்பட்டி குட்டியாக்கவுண்டர் மடப்பள்ளி கட்டியது கூறப்படுகிறது.

**கல்வெட்டு :**

1. சென்னிமலை ஆண்டவர் துணை
2. கள்ளிப்பட்டி [பொருளந்தை குல]
3. சின்னக்கவண்டர் குமாரன்
4. குட்டியாக்கவுண்டர் மடப்பள்ளி
5. உபயம்
6. நள ஐப்பசி ௰௫ உ

# சொல்லடைவு


| சொல் | பக்க எண் |
|---|---|
| **அ** | |
| அசுபதி நட்சத்திரம் | 106 |
| அசுவமேதியாகம் | 92,108,117 |
| அஞ்சாதான் | 34 |
| அணியாதழகியார் | 72 |
| அத்தானிஸூ-முடையார் | 72 |
| அப்பன்சம்பந்தந் | 23 |
| அமணபள்ளி | 73 |
| அரையநாடு | 103 |
| அழகியமணவாளர் | 9 |
| அழிவுசோர்வு | 37 |
| அழிவுதொறும் | 73 |
| அறிவுடையான் தில்லைநாயகன் | 30 |
| அயன சங்கராந்தி | 77 |
| **ஆ** | |
| சூசுயஹொசு | 63 |
| ஆத்ரயகோச் | 23 |
| ஆநித்திங்கள் | 22 |
| ஆயன்ஆளவந்தி | 16 |
| ஆண்டானான அம்பலபெருமாள் | 63 |
| ஆலங்காட்டுப் பாண்டி | 16 |
| ஆலம்பாயமொசும் | 71 |
| ஆவணிபுத்தூர் | 31 |
| ஆளவந்தி பிழைபொறுத்தான் | 23,33,51 |
| ஆனைஅச்சு | 78 |
| **இ** | |
| இடங்கை தொண்ணூற்றொன்பது | 5 |
| இடைப்புழுதி நாடு | 53 |
| இரட்டை சங்கு | 90 |
| இராஜலிங்கமாணிக்கசுவாமி | 85 |
| இராஜகெம்பீரபடாரன் | 70 |
| இராசராசபுரம் | 16 |
| இருங்கோளன் | 76 |
| இலச்சினை | 2 |
| இலுப்பை | 94 |
| இளையமுது | 46 |
| இறங்கல்பண்ணுவான் | 37 |
| **ஈ** | |
| ஈழம் | 61 |
| **உ** | |
| உக்தபூபதி | 31 |
| உகச்சர் | 59 |
| உகாப்பாடி வழி | 69 |
| உகாப்பாடி ஊரவரோம் | 16 |
| உச்சி சந்தி | 44 |
| உடையான் அவிநாசி | 21 |
| உத்தமசோழச்சதுர்வேதிமங்கலம் | 126,127,129 |
| உப்பாயம் | 61 |
| உப்பு | 94 |
| உயில் சாதனம் | 1 |
| உலகுடையான் | 31 |
| உழுதுபயிர் | 93 |
| **ஊ** | |
| ஊர்க்குளம் | 73 |
| ஊதிப்பேரிகை | 90 |
| ஊரும் ஊராளிகளும் | 64 |
| **எ** | |
| எதிரிலிசோழன் | 48 |
| **ஏ** | |
| ஏகபோகமுற்றூட்டு | 42 |
| **ஐ** | |
| ஐங்கரைநாடு | 72 |
| **ஒ** | |
| ஒட்டச்சு | 11,61 |

| சொல் | பக்க எண் |
|---|---|
| **க** | |
| கச்சிராயன் | 37 |
| கனகபுரம் | 92 |
| கல்லியாணநம்பி | 55 |
| கறியமுது | 43 |
| கற்பூரம் | 94 |
| க்ரஉவித்தவன் | 145 |
| **கா** | |
| காஶ்யபமோத்ரம் | 10 |
| காஞ்சிக்கூவல்நாடு | 103 |
| காணியாளர் | 53 |
| காமக்கோட்டம் | 36 |
| கார்பதினெண் | 44 |
| காயமுது | 46 |
| **கி** | |
| கிழங்கநாடு | 103 |
| **கீ** | |
| கீழ்ப்பாநாடு | 53 |
| கீழாலூர்க்கூற்றம் | 30 |
| **கு** | |
| குநிசாறுடையான் | 56 |
| குடங்கொண்டுகோயில்புகுவான் | 63 |
| குடிநீங்காதேவதானம் | 93 |
| குமரன் எடுத்தானான சிங்கப்பெருமாள் | 10 |
| குலோத்துங்க சோழ விக்ரமாதித்ததேவன் | 49 |
| குளக்கீழ்வயல் | 11 |
| குறுப்புநாழி | 2 |
| குறுப்புநாடு | 53 |
| குறுப்பு நாட்டுப்பட்டரும் | 16 |
| குறுப்பு நாட்டு நாட்டவரோம் | 62 |
| குறைவறப்பு | 94 |
| **கூ** | |
| கூத்தர் | 42 |
| கூத்தாடும்தேவர் | 67 |
| கூனம்பட்டி | 84 |
| **கே** | |
| கேசத்தபடையான் | 40 |
| **கை** | |
| கைக்கோளர் | 10,48 |
| **கொ** | |
| கொங்குவேளிர் | 77 |
| கொள்ளு | 17 |
| **கோ** | |
| கோச்சன்மகள் | 23 |
| கோட்டை சூழ்ந்த நாடு | 73 |
| **கௌ** | |
| கௌஶிகன் | 120 |
| கௌஶியமோதர? | 126 |
| **ச** | |
| சகரையாண்டு | 66 |
| சங்கரதினம்பி | 64 |
| சந்தனம் | 94 |
| சந்தியாதீபம் | 8,10,12,18,24,27,38,39 |
| **சா** | |
| சாமந்தர் | 49 |
| சாலைத்தாற்றி | 69 |
| **சி** | |
| சிட்டன்காவி | 69 |
| சிவராத்திரி | 55,127 |
| சித்திரமேழிவிண்ணகரம் | 3,6,11,12 |
| சித்தரமேழிவிண்ணகரநாயனார் | 1,7 |
| சிலம்பன்நீலன் | 68 |
| **சீ** | |
| சீநாபுரம் | 68 |

| சொல் | பக்க எண் |
|---|---|
| **செ** | |
| செங்கற்பள்ளி | 73 |
| செம்பாதி | 26 |
| செவிடு | 2 |
| சென்னிமலை | 118,131 |
| **சை** | |
| சைவசிகாமணி | 16 |
| சைவபுரந்தரசக்கரவர்த்தி | 20 |
| **சொ** | |
| சொக்கஞான சம்பந்தன் | 48 |
| சொக்கன்தேவன் | 27 |
| சொக்கதேவவரதர் | 6 |
| சொக்கன் மனைக்கிழத்தி | 12 |
| **சோ** | |
| சோழ விழுப்பாதராயன் | 47 |
| **த** | |
| தட்டார்ப்பாட்டம் | 61,108 |
| தட்டோடு | 85 |
| தண்ணீர்க்காணம் | 61 |
| தலையூர்நாடு | 53 |
| தறியிறை | 61 |
| **தா** | |
| தாநத்தார் | 53 |
| **தி** | |
| திருக்கல்லியாணம் | 45 |
| திருக்கார்த்திகை | 77 |
| திருக்காமகோட்டம் | 59,60,65 |
| திருநந்தவானம் | 4 |
| திருநந்தாவிளக்கு | 41,63 |
| திருநிலைக்கால் | 79,120 |
| திருப்பணி | 62 |
| திருப்பரிவட்டம் | 107 |
| திருப்படிமாற்று | 5 |
| திருபாண்டிக்கொடுமுடி | 53 |
| திருமுகமலர்ந்த நாயினார் | 20 |
| திருமுற்றம் | 57 |
| திருமுற்றம்பிள்ளையார் | 57 |
| திருவானைக்காவுடையாந்சொக்கன் | 79 |
| திருவிடையாட்டம் | 3,129 |
| திருவிடையாட்டஇறையிலி | 11 |
| திருவானைக்காசொக்கன் | 162 |
| திருவோணம் | 104 |
| **தெ** | |
| தெங்கு | 53 |
| தெண்ணாயிரச்சக்கரவத்தி | 25 |
| தெண்டமிறுப்பது | 63,65 |
| தெண்டவரி | 62 |
| தென்கரைநாடு | 103 |
| **தே** | |
| தேங்காய் | 94 |
| தேவக்கோயில் | 16 |
| தேவரடியார் | 60,120 |
| தேவரடியாள் | 43 |
| தேவன்கூத்தப்பெருமாள் | 34,59 |
| தேவன்சொக்கி | 54 |
| தேவன்ஆனகுவலத்தரையன் | 9 |
| தேவாசாரியார் | 77 |
| **தை** | |
| தைத்திங்கள் | 23 |
| தைப்பூசம் | 94 |
| **தீ** | |
| தீர்த்தக்கிணறு | 85 |
| **ந** | |
| நந்தமாரர்கள் | 67 |
| நல்லிசையாளன் மகள்னம்பியம்மை | 34 |
| நல்லெருது | 107 |

| சொல் | பக்க எண் |
|---|---|
| நற்பசு | 107 |
| **நா** | |
| நாட்டவர் | 73 |
| நாலூர்பற்றுநாடு | 72 |
| நாற்பத்தெண்ணாயிரச்சக்கரவத்தி | 56 |
| **நி** | |
| நிசிதிகை கல் | 74 |
| நித்தசோழவளநாடு | 30 |
| நிலைக்கால் | 15 |
| **ப** | |
| பனங்காடர் | 95 |
| பநந்தாக்கலகாணி | 17 |
| பயறு | 17 |
| பரிசட்டம் | 46 |
| பரிமளம் | 94 |
| பழங்கல்வெட்டின | 47 |
| பழஞ்சலாகை | 6,12,20,23,27,30,49,51,59,71 |
| பழஞ்சலாயைச்சு | 71 |
| பழம்பூந்துறைநாடு | 134 |
| பள்ளிச்சந்தம் | 188 |
| பள்ளிவெள்ளாழன் ஆவகன் | 13 |
| பனை | 93 |
| **பா** | |
| பாதரசை | 90 |
| பாவைபிள்ளையம்மை | 33 |
| **பி** | |
| பிடாரியூர் | 120 |
| பிடாரியூர் கோயில் | 57 |
| பிள்ளைஅம்மை | 127 |
| பிள்ளைபாவைபிள்ளைஅம்மை | 33 |
| பிள்ளையாழ்விவாழவந்தான் | 21,37,43,65 |
| பிறைசூடிஅப்பன் | 31 |
| **பு** | |
| புதுச்சலாகைஅச்சு | 48,49 |
| புளிஅப்பை | 74 |

| சொல் | பக்க எண் |
|---|---|
| **பெ** | |
| பெரியநாட்டிற்பண்டிதன் | 78 |
| பெருமாள்கெங்கைஆழ்வார் | 78 |
| பெருமாள்படை | 40 |
| **பே** | |
| பேரூர் நாடு | 72 |
| **பொ** | |
| பொதிகம்பு | 98 |
| பொங்கலூர்க்காநாடு | 53 |
| பொதுவன்பாவை | 52 |
| பொற்காளி | 48 |
| **ம** | |
| மகண்மை | 93 |
| மஞ்சள் | 94 |
| மடப்பள்ளி | 133 |
| மடாதிபர் | 84 |
| மலரியூர் | 29 |
| மலைக்கினியன் | 6 |
| மனைக்கிழத்தி | 34,69 |
| **மா** | |
| மா | 93 |
| மாணிக்கதேவன் | 48 |
| மாணிக்கானாயகபண்டிதன் | 63 |
| மாணிக்கதேவர் அகமுடையார் | 60 |
| மாணிக்கவாசககசுவாமிகள் | 86 |
| மார்க்கண்டேயகோத்திரம் | 20 |
| **மி** | |
| மிண்டு | 95 |
| **மு** | |
| முக்கலநெல்விதை | 76 |
| முட்டில்யிரட்டி | 63 |
| முடிகொண்டசோழமாராயன் | 5 |
| முற்றூட்டு | 67 |

| சொல் | பக்க எண் |
|---|---|
| **மூ** | |
| மூங்கிற்பாளையம் | 200 |
| மூன்றுபொழிசால் | 191 |
| **மே** | |
| மேல்கரைபூந்துறை | 94,98 |
| மேல்வாரம் | 93 |
| **வ** | |
| வச்சிரநாமயோகம் | 105 |
| வடகரைநாடு | 6 |
| வடகொங்கு | 53 |
| வடபாரிசம் | 193 |
| வடபாரிசாரநாடு | 53,72,171 |
| வணிகர் | 36 |
| வரைடி | 64 |
| வலிப்புகாநாடு | 103 |
| **வா** | |
| வாகைக்குளம் | 36 |
| வாகைப்புத்தூர் | 36 |
| **வி** | |
| விஞ்சநாதிகள் | 55 |
| விச்சன்சிட்டன் | 71 |
| விஷூஅயனம் | 77 |
| வியாபாரி | 30,39 |
| வினியோகம் | 61 |
| **வீ** | |
| வீடுகளுக்குச் சாந்து | 90 |
| வீரகாமிண்டன் | 13 |
| வீரசங்காதபெரும்பள்ளி | 75,81 |
| வீரசோழவளநாடு | 1,53,72 |
| வீரபாண்டியப்பேரேரி | 37 |
| வீரராசேந்திரன்காலன் | 70 |
| **வெ** | |
| வெங்காலநாடு | 53 |
| வெஞ்சமாக்கடல் | 103 |
| வெல்லம் | 94 |
| வெள்ளைகள் தோட்டம் | 69 |
| வெள்ளாள சாத்துபடிகள் | 55 |
| வெள்ளாளன் சாத்துவாய் | 18,45 |
| வெள்ளாளன் சாத்தந்தை | 5 |
| வெள்ளாளன் கொள்ளிகள் | 12,27 |
| வெள்ளாளன் படைத்தலை | 7,79 |
| வெள்ளாளன் படைத்தலைகளில் | 7,15,22,31,32, 34,47,59,71,79 |
| வெள்ளாளன் வெள்ளைகள் | 68 |
| வெள்ளாளன் வேந்தன்கள் | 6 |
| வெள்ளாளன் பனைங்காடகளில் | 51 |
| வெள்ளாளன் புள்ளர்கள் | 28 |
| வெள்ளாளன் வெண்மணி | 63 |
| வெற்றிலை | 95 |
| **வே** | |
| வேட்கோவர் | 23 |
| வேதநாயகபட்டன் | 19,24,33,38 |
| வேந்தன்வாமதேவன் | 6 |
| வேன்தைகள் | 6 |
| **ஸ்ரீ** | |
| ஸ்ரீவப்ராஹ்மணர் | 63,65 |
| ஸ்ரீவஜ்ஞாஞபண்டிதன் | 63,65 |
| **ஶ்ரீ** | |
| ஶ்ரீகணக்கன் | 58 |
| ஶ்ரீகாரியஞ்செய்வார் | 3 |
| ஶ்ரீகோயில் | 57 |
| ஶ்ரீபண்டாரம் | 1,4,5,65 |
| ஶ்ரீயக்கி | 6,13,18,27,32,38,43,51,59,71 |
| ஶ்ரீயக்கி பழஞ்சலாகை | 78 |
| ஶ்ரீவத்ஸ கோத்திரம் | 78 |
| ஶ்ரீவைஷ்ணவர் | 3 |

# நிழற்படங்கள்

## அட்டைப்படம்

முன் அட்டை : விசயமங்கலம், சமணதீர்த்தங்கரர் சிற்பம்

பின் அட்டை : விசயமங்கலம், சந்திரபிரபா கோயில், கி.பி. 14-15-ஆம் நூற்றாண்டு



விசயமங்கலம், இராசாதிராச வீரசோழன், ஆட்சியாண்டு-5 (கி.பி. 1122)
பக். 68-69



விசயமங்கலம், வீரராசேந்திரன், ஆட்சியாண்டு-41 (கி.பி. 1248)
பக். 23



விசயமங்கலம், வீரபாண்டியன், ஆட்சியாண்டு-5 (கி.பி. 1270) பக். 32



விசயமங்கலம், வீரபாண்டியன், ஆட்சியாண்டு-3 (கி.பி. 1268) பக். 33



விசயமங்கலம், வீரராசேந்திரன், ஆட்சியாண்டு-42 (கி.பி. 1249)
பக். 18-19



விசயமங்கலம், சுந்தரபாண்டியன், ஆட்சியாண்டு-27 (கி.பி. 1312)
பக். 63